

ஸ்ரீ மத்வாசார்யஸ்வாமிகள்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
10 AUG 1909
MADRAS.

ஸ்ரீ வாணீ விலாஸினீ



வா. 5. பிலவங்க௵ பங்குனி௴ ந. 30.

# ஸ்ரீமத்வாசாரியர் சரித்திரம்.

## அத்தியாயம். I.

### அவதாரம்.

நெடிய கடல் சூழ்ந்த இவ்வுலகில் ஆஸ்திகமதக்கொள்கையை எடுத்தோதும் மதங்களுக்குள் பிரஸித்தமான மூன்று மதங்களில், அத்வைத மதக் கொள்கையை உலகிற்குணர்த்திய ஸ்ரீ சங்கரரும், விசிஷ்டாத்வைதமதக்கொள்கையை விவரித்தருளிய ஸ்ரீராமாநுஜரும், த்வைதமதத்தை பரவச்செய்த ஸ்ரீமத்வரும், தாம் அவதரித்தற்குத் தக்க நாடெனத் தேர்ந்தெடுத்துக்கொண்டது, நம்மிந்தியாவின் தென்னாடாகிய இந்நன்னாடேயாகும். ஸ்ரீசங்கரர் மலையா

ளத்தில் காலடி என்னும் கிராமத்திலும், ஸ்ரீ ராமாநுஜர் செங்கல்பட்டு ஜில்லாவில் ஸ்ரீ பெரும்புதூர் என்னும் கிராமத்திலும் அவதரித்தருளினதுபோல ஸ்ரீமத்வரும் தென் கன்னட ஜில்லாவில் ஒரு கிராமத்தில் அவதரித்துளார்.

மேற்குத்தொடர்ச்சி மலையின் மேற்கெல்லையாய், பம்பாய் ராஜதானியிலிருந்து கன்யாகுமரிவரையிலும், பழைய ராஜ்யங்களாகிற கொங்கணம் கன்னடம் கேரளமென்னும் மூன்று ராஜ்யங்கள் பாவியிருக்கின்றன. கொங்கணம் என்பது மராட்டி பாஷையினின்றும் திரிந்து வந்த கொங்கணி என்னும் பாஷையைப் பேசுபவருடைய ராஜ்யம். இவர்களது ராஜதானி தௌலதாபாத்து. கன்னடதேசம், தென்கன்னடம் வடகன்னடம் என்னும் இரண்டு பிரிவாக பிரிக்கப்பட்டு, வடகன்னடம் பம்பாய் ராஜதானியையும் தென்கன்னடம் சென்னை ராஜதானியையும் இப்போது சேர்ந்துவிட்டன. கேரளமென்பது தென்கோடியாய் திருவாங்கூர் கொச்சி சமஸ்தானங்களை யுள்ளிட்ட மலையாள தேசம்தான்.

இவற்றுள், தென்கன்னடம் ஜில்லாவே நமது சரித்திரத்துக்கு நாயகராகிய ஸ்ரீமத் மத்வமுனிவரர் அவதரித்த நாடு. இந்த ஜில்லாவின் உடுபி தாலூகாவே மத்வமதத்தை யவலம்பித்தவர்க்கு மிகுதியும் பக்தியை யூட்டவல்லது.

மேற்குக்கரை நாடுகளிலுள்ள பிராமணர்கள் கொங்கணி ஸாரஸ்வதி சிவெல்லி என்னும் மூன்றுவகுப்பினராகப் பிரிக்கப்படுகிறார்கள். இவர்களுள் சிவெல்லி என்னும் வகுப்பினரே துளு பாஷை பேசும் பிராமணர்கள். இவர்கள் வசிக்கும் நாடே உடுபி. இதற்கு ரஜதபீடபுரம் என்ற மறுபெயரும் உண்டு. இந்த ஸ்தலத்தில், ஸ்ரீமத் மத்வ முனியால் கட்டப்பட்ட ஸ்ரீ கிருஷ்ணன் கோவிலுக்கு முன்னதாகவே இரண்டு பெரியகோவில் உண்டு. ஒன்று சந்த்ர

மௌளீச்வரர் கோவில். மற்றொன்று அநந்தேச்வரர் கோவில். சந்திரனுக்கு உடுப என்பது கீர்வாண பாஷையில் மற்றொரு பெயராதலால் அவன் பெயர் கொண்டு உடுபி என்றும், அநந்தேசுவரசுவாமி வெள்ளியால் செய்த பீடத்தில் வீற்றிருத்தலால் ரஜத பீடபுரமென்றும் பெயர். சுவாமியும் வெள்ளியில் அமைந்திருத்தலால் சிவபெள்ளி என்னும் கன்னடச்சொல் துளு பாஷையில் சிதைந்து சிவெல்லி என்னும் மரூஉப் பெயரை யடைந்தது. இதனால் முன் சொல்லப்பட்ட துளு பேசும் பிராமணர்கள் இந்த உடுபி என்று சொல்லப்படுகிற சிவெல்லி கிராமத்தில் இருந்தமைபற்றி சிவெல்லி என்ற வகுப்பினராஞர்.

ஸ்ரீமத் மத்வரது அவதார காலத்துக்கு முன்னர் இந்த சிவெல்லி பிராமணர்களில் சிறுபாலார் சைவமதத்தையும் பெரும்பாலார் பாகவத ஸம்ப்ரதாய மதத்தையும் தழுவியிருந்தனர். இப்போதும் பாகவத ஸம்ப்ரதாய மதத்தார் தென் கன்னடத்தில் மிகுதியாய் இருக்கிறார்கள். இவர் சைவ வைஷ்ணவமாகிய இரு மதங்களின் கொள்கைகளையும் அநுசரித்தவர்கள். இவர்கட்கு சிவன் விஷ்ணு எனும் இரு மூர்த்திகளும் ஸமானர் என்பதே பெருங் கொள்கை. இவர்களும் கோபி என்னும் மண்ணினாலேயே நாமம் இடப்பட்டவரானாலும், மாத்வர்களைப்போல முத்திரைகள் வைத்துக்கொள்வதில்லை.

இம்மஹானுடைய பெற்றோர் பாகவத ஸம்ப்ரதாய வகுப்பைச் சேர்ந்தவர்கள். ஸ்ரீமத் மத்வ முனிவரது பிதா மிகவும் பகவத் பக்தியுடையவர். வேதம் வேதாங்கங்களை மிகவும் கவலையோடு படித்து அதன்படி யநுசரித்தவர். தத்துவமுணர்ந்தவர். இதிஹாஸ புராணங்களை நன்றாய் எடுத்து பிரஸங்கிக்கும் சாமர்த்தியம் வாய்ந்திருந்தால், பட்டர் என்ற பட்டப் பெயரோடுகூடிய மத்யகேஹ

பட்டர் என்று அழைக்கப்பட்டவர். இவருக்கு உடுபி என்னும் நகரத்திற்கு அருகிலுள்ள பாஜக க்ஷேத்திரத்தில் சில பூமிகளும் பண்ணை மாடுகளும் உண்டு. அவற்றைக் கொண்டு இவர் பெருமையாய் இல்லறத்தை நடத்தி வந்தவர். இவர்க்குப் பிறந்திருந்த குழந்தைகளில் இரண்டு ஆண் குழந்தைகளும் இறந்துபோய் ஒரு பெண் குழந்தை மாத்திரம் தப்பி யிருந்தது. ஆண் பிறவியற்றவனுக்கு மோக்ஷமில்லை யென்று இந்து சாஸ்திரம் முறையிடுவதால் அதை நிறைத்துக் கொடுக்கும்படி தியாநித்துக்கொண்டு நமது மத்யகேஹர் தமதுகிராமமாகியபாஜகக்ஷேத்திரத்திலிருந்து உடுபி என்னும் க்ஷேத்திரத்துக்கு யாத்திரை புறப்பட்டார்.

இந்த கிராமத்திலிருந்து உடுபி க்ஷேத்திரத்துக்கு நெடுந்தூரமில்லை. சில நாழிகை தூரம்தான். இவர் பத்நி ஸஹிதராய் அந்த க்ஷேத்திரத்துக்குச் சென்று, தனக்கு ஒரு ஸத்புத்திரனை யளித்தருளவேண்டுமென்று அனந்தேச்வரரைப் பிரார்த்தித்துக்கொண்டு, ஸ்வாமியின் உத்தரவுக்காகப் பனிரண்டு வருஷம் வரையில் அந்த க்ஷேத்திரத்திலேயே காத்துக்கொண்டிருந்தார். இவருடைய பிரார்த்தனைக்கு இரங்கிப் பரம்பொருளும், அந்தக்கோவிலில் பெருந்திரள் கூடிய ஒரு உத்ஸவ நாளில் ஒரு பக்தர்மீது தோன்றி, "மதத்தைத் திருத்துவதற்காக வாயுபகவான் உனக்குப் புத்திரனாகப் பிறப்பான்" என்று மொழிந்தருளினர்.

அப்போது ஸ்ரீ சங்கரர் கொள்கையை யநுஸரித்த அத்வைதமதம் பரவி யிருந்த காலமாயினும், வேதத்தினுட் பொருளை யுள்ளபடி யறியாதார் பலர் தெய்வத்துக்கும் தமக்கும் பேதமில்லை யென்று பெரு வழக்கிட்டு வேதவழிப்பட்ட உலகைக் கெடுத்துக்கொண்டு திரிந்தனர். இதனை யுணர்ந்த தேவர்கள் ஸ்ரீ மகா விஷ்ணுவினிடம் இக்குறையைச் சொல்லி வேண்ட, அப்பெருமானது

ஆஞ்ஞையால் வாயுபகவான் ஸ்ரீமத் மத்வதீர்த்தராக அவதரித்துளாரென்றே மத்வவிஜயம் கூறிச் செல்கிறது.

இப்படித்தமக்கு உத்தரவான விஷயத்தில் மத்யகேஹருக்கு உண்டான ஸந்தோஷத்துக்குக் கரையில்லை. தாம் அந்தப் பன்னிரண்டு வருஷகாலம் தபசிருந்ததற்குத் தக்க பலன் கிடைப்பதை எதிர்பார்த்திருந்தார். பிறகு அநந்தேசுவரருடைய உத்தரவின்பேரில் உடுபியினின்றும் தமது கிராமமாகிய பாஜக க்ஷேத்திரத்துக்கே தமது குடும்பத்தை திருப்பினர். பாஜக க்ஷேத்திரமானது சுற்றுப்புறம் காடு அடர்ந்த ஒரு சிறு கிராமம். அங்கு சில வீடுகளும் குடிசைகளும்தாம் உள்ளன. அவ்வீடுகட்கு மத்தியில் நமது மத்யகேஹர் வீடு கட்டிக்கொண்டிருந்தார். பாஜக க்ஷேத்திரமும் திவ்ய ஸ்தலமாகவே கொண்டாடப்பட்டு வந்தது. அவ்வூரை யடுத்துள்ள விமானகிரி என்னும் சிறு மலையே அவ்வூருக்கு இன்றும் பெருமையைத் தந்துகொண்டு நிற்கிறது. எப்படியெனில், இக்குன்றில், பரசுராமரால்பிரதிஷ்டை செய்யப்பட்ட துர்க்கை கோயில் ஒன்றுண்டு. இந்தக் கோயிலில் இன்றும் வெகு விமரிசையாய் உத்ஸவம் நடந்தேறி வருகிறது. பாஜக க்ஷேத்திரம் இக்குன்றின் அடிவாரத்தில் அமைந்துள்ளது.

மேற்சொன்ன கோயிலை அடுத்து பரசுராமரால் ஏற்படுத்தப்பட்ட பரசு தீர்த்தம், தனுஸ் தீர்த்தம், கதா தீர்த்தம், பாண தீர்த்தம் என்று சொல்லப்படுமெ நான்கு தீர்த்தங்களும் இருக்கின்றன. இந்த தீர்த்தங்கட்கு யாத்திரிகர் வருவதுண்டு. இந்த விமானகிரியானது தனது பெயருக்கிணங்க யாதொரு மரமும் வளராது கற்பாறைகளால் ஆகிய விமானம்போன்றிருத்தலும், சிகரத்தில் அம்பாள் திருக்கோயில் கொண்டிருத்தலும், இவற்றை யலங்கரிப்பனவாய்ச் சூழ்ந்திருக்கும் அந்நான்கு தீர்த்தங்களும் விளங்கி

யிருத்தலும் தரிசிப்பார்க்குப் பக்தியை யூட்டி அதற்கு லமீ பத்திலேயே குடியிருக்கும்படியான எண்ணத்தை யுண்டு பண்ணிவைக்கும் என்றால், இதன் அடிவாரத்துள்ள பாஜக க்ஷேத்திரம் பிராமணக்குடி யிருப்பானதற்கு வேறு கார ணங்கள் காட்டப்படவேண்டுவதில்லை.

இப்படி அம்பாள் ஸந்நிதியாலும் தீர்த்தங்களாலும் பரிசுத்தமான அந்த பாஜக க்ஷேத்திரத்தில் விளம்பி வருஷத்து விஜய தசமியன்று நம்மாசாரியர் அவதரித்தருளினார். இம்மஹான் அவதரித்த அக்காலம் நற்காலமாய் நல்ல சகுனங்களோடு கூடியதாய் நவக்ரஹங்களும் சுப ஸ்தானங்களில் நிலைத்திருந்த காலமாயிருந்தது. அவதார ஸமயத்தில் பட்டர் வெளிக்காரியமாய்ச் சென்றிருந்தாராயினும், தமது கிருஹத்திலிருந்து கேட்ட பலவகை வாத்தியகோஷங்களால் நன்கு தெரிந்துகொண்டு ஓடோடியும் வீட்டுக்கு வந்தார். அன்று அவ்வூரில் உள்ள யாவரும் மகிழ்ச்சியுள் மூழ்கினவராய் மத்யகேஹர் இல்லத்துக்கு வந்து குழந்தையைப் பார்த்து ஆசீர்வதித்துப் போயினர். மத்யகேஹரும் மிக்கக்களிப்புக்கொண்டவராய்வந்தவர்க்கு தக்கபடி உபசாரங்களைச் செய்து அனுப்பினர்.

இது தேவாவதாரமென்றால், குழந்தையின் அழகு ஸாமுத்ரிகை நூலையும் கடந்திருக்குமென்பது சொல்லவும் வேண்டுமோ? குழந்தையைப் பார்த்த சிலர்க்கு உடுபி அனந்தேச்வரர் ஒரு பக்தர் மூலமாய் அருளிய வாக்கு நினைவுக்கு வர, மிகுந்த வணக்கமுடையவராய்க் குழந்தையைப் போற்றினார்கள். ஸதா பகவானையே த்யானம்பண்ணினமைபற்றி, *மத்யகேஹர் இப்பெரும்பேற்றைப்பெற்றனர் என்று புகழ்ந்தார்கள். உற்றாரும் மற்றாரும் அந்நாளில் மத்யகேஹரைச்சொல்லாலும் பொருளாலும் உபசரித்தார்.

* மத்யகேஹர்—தெருமத்தியில் வீடுடையவர்.

வாயுபகவான், ஸ்ரீராமாவதாரத்தில் ஹநுமாராகவும், ஸ்ரீ கிருஷ்ணவதாரத்தில் பீமஸேனனாகவும் பிறந்து, இப்போது ஸ்ரீமத் பாதராயணரது உபதேசங்களைப் பலப்படுத்துவதற்காக இந்தப் பாஜக க்ஷேத்திரத்தில் பக்தசிரோமணியான மத்யகேஹருக்குக் குமாரராய் அவதரித்துளர் என்று நல்ல பக்தர்களும் புகழ்ந்து பிரஸங்கித்தார்கள். அன்றுமுதலே அந்த பாஜக க்ஷேத்திரம் ஓர் சிறந்த யாத்திரை ஸ்தலமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

ஸ்ரீமத் மத்வதீர்த்தர் அவதரித்த அந்தச் சிறு வீடு இப்போது கற்களாலும் லோஹவகையினாலும் கட்டப்பட்டு மிகவும் நன்றாய் விளங்குகிறது. ஸ்வாமியினது அவதார ஸ்தலத்தைத் தரிசிக்க விரும்பி வருவார்களாதலால், இந்த இடம் அழியாமலிருக்கவேண்டுமென்று, உடுபி க்ஷேத்திரத்தின் எட்டு மடாதிபதிகட்குள் ஒருவராகிய காணூர் மடத்து ஸ்வாமி தக்க செலவு செய்து அச்சிறு கோயிலுக்கு மதில்கள் நாற்புறங்களிலும் எடுத்திருக்கிறார்கள். இக்கட்டடங்கட்கு அணித்ததாக ஒரு சிறு கோயிலும் உண்டு. அந்தக் கோவிலில் நமது குருவினுடைய ஸ்ரீபாதங்கள் உருவமைக்கப்பட்டுத் தம்மை சரணம்புகுந்தார்க்குற்ற குறைகளை நீக்கி வருகின்றன. அருகே வாஸுதேவ தீர்த்தமென்ற ஒரு குளமுளது. இந்தத் திருக்குளம் நமது ஆசாரிய ஸ்வாமிகளாலேயே கட்டப்பட்டது. இதன் கதை பின் வருமாறு கூறப்படுகிறது. ஆசாரிய ஸ்வாமி, தமது சிறு பிராயத்தில், தமது தகப்பனார் குன்றின்மேலுள்ள பரசுராம தீர்த்தத்துக்கு ஒரு அல்பத்வாதசியன்று விரைந்து போய் வருந்தி வருவதை யுற்றுணர்ந்து, தாம் அங்கு ஒரு சிறு குளம் வெட்டி அதனருகு ஒரு சிறு அரசங்கன்றையும் வேருடன் பறித்து வந்து வைத்து, அந்தக் குளத்தின் நீரைக் கொண்டே அம்மரத்தையும் வளர்த்தார். அம்

மரம் இன்றும் இருக்கிறது. அந்தத் தீர்த்தக்கரையில் ஒருவன் நின்றானால், பொறுமையும் தபசும் தன்னடியே தோன்றிப் பக்தியும் ஜீவகாருண்யமும் உருவெடுத்து நிலைக்கும்.

---

## அத்தியாயம். 2.

### பாலபர்வம்.

உலகைத் திருத்துவதற்காக இங்கு அவதாரஞ் செய்துளாரேனும், தேவதைகள் தமது அவதாரத்துக்கேற்றபடி பால லீலைகளை மற்றவர்கள்போலவே புரிவதும் ஒரு திருவிளையாட்டே. அவர்கள் சாதாரண மனிதர்களைப்போல விளையாடினும், ஒவ்வொரு விளையாட்டிலும் தம்முடைய தெய்வத்தன்மையைக் காட்டியே தீர்ப்பார். இந்த உண்மையை ஸ்ரீராமாவதாரத்திலும் ஸ்ரீ கிருஷ்ணாவதாரத்திலும் நம்மவர் நன்றாய் அறிந்திருப்பார்.

ஸ்ரீமத்வரும், இந்த விதியைக் கடக்கவில்லை. இவரும் சாதாரண குழந்தைகளைப்போலவே, பாலுக்காக உரத்த சத்தமாய் அழுவதும் சிரிப்பதும் விளையாடுவதுமாய் இருந்தார். இப்படிப் பத்து நாளும் சென்றபிறகு, குழந்தைக்கு பெயரிடவேண்டிய நாள்வர, அந்நாளில் மத்யகேஹர் தமது பந்துமித்திரரோடுவிருந்துணக்கழித்து நல்லமுகூர்த்தத்தில் குழந்தைக்கு ஸ்ரீ கண்ணபிரானது நாமங்களில் ஒன்றாகிய வாஸுதேவன் என்ற நாமத்தையிட்டார்கள். இந்துக்கள் தாம் வணங்கும் தெய்வங்களது நாமங்களைத் தமது குழந்தைகட்கு இட்டழைப்பது ஓர் மரபு. இதனால், தமக்கு ஸதா பகவத் ஸ்மரணை இருந்துகொண்டேயிருக்கும் என்பது அவர்கள் அபிப்பிராயம். இதுபற்றியே திருமழிசையாழ்வாரும்,

"மலமுடை யூத்தையிற் றேன்றிற்றோர் மலவூத் தையை
மலமுடை யூத்தையின் பேர்வைத்தால் மறுமைக் கில்லை
குலமுடைக் கோவிந்தா கோவிந்தா வென்றழைத் தக்கால்
நலமுடை நாரணன் றம்மன்னை நரகம் புகாள்."

என்ற பெரியாழ்வார் பொய்யாமொழியை வலியுறுத்துமாறு உலகிற்பிறந்தார் எம்பெருமானது நாமங்களை எவ்விடத்தும் எவ்விதத்தும் ஓதிக் கரையேற வேண்டுமென்று வற்புறுத்துகிறார்.

நமது மத்யகேஹரோ பாகவத ஸம்ப்ரதாயத்தை யவலம்பித்தவர். ஸதா கிருஷ்ணத்யானமும் ராமத்யானமுமே தமது பொழுது போக்காகக்கொண்டவர். அதிலும் வரத்தினல் குழந்தையைப் பெற்றவர். அதனல், தம் குழந்தைக்கு வாஸுதேவன் என்ற நாமத்தை யிட்டழைத்தார்.

மத்யகேஹரும் பத்நி வேதவதியும், யாருமடையாப் பெரும்பேற்றைத் தமக்களித்த ஸ்வாமி அநந்தேசுவரருக்குத் தாம் எவ்வளவுதான் பிரார்த்தித்தாலும், அப்பேற்றுக்கு ஈடாகாதென்று மதித்துட்கொண்டு, குழந்தையோடு ஒரு முறையாயினும் உடுபி க்ஷேத்திரத்துக்குச் சென்று அநந்தேசுவர ஸ்வாமிக்கு அபிஷேகம் பண்ணிவைக்க வேண்டுமென்று கருதினவராய், தமது பந்துவர்க்கத்தோடு புறப்படுவதாகத் தீர்மானித்தார்கள். பெற்றவள் நல்ல திடத்தை யடையும் காலத்தை யெதிர்பார்த்திருந்தனர். அத்தருணம் நேரே உடுபி க்ஷேத்திரத்துக்குப் புறப்பட்டார்கள். பந்துக்களும் மித்திரரும் ஏவலாளிகளும் மத்யகேஹரைப் பின் தொடர்ந்தனர். வழியில் செல்லும் போது மிகுந்த குதூகலத்தோடு யாவரும் அநந்தேச்வர பஜனை பண்ணிக்கொண்டு, ஸ்ரீமத்வருக்கு யாதொரு தோஷமும் ஸம்பவிக்காதிருக்கும்படி வெகு ஜாக்கிரதையாய்ச்சென்றனர். கோவிலைச் சேர்ந்தனர். பிறகு கோவிலதிகாரிக

ளது உத்தரவு பெற்று, பூஜையைத் தக்க விமரிசையோடு செய்து முடித்துத் தீர்த்த ப்ரஸாதமும் பெற்றனர். குழந்தைக்கும் தீர்த்தம் ப்ரோக்ஷித்து அங்குள்ள பெரியவர் ஆசிகள் கூறினர். அப்போது திவ்யமான சகுனங்கள் தோன்றின. பிறகு ஸ்வாமியிடம் விடை பெற்றுக்கொண்டு தம் கிராமத்துக்குத் திரும்பினர். புறப்படும்போது வெகுநேரமாயிற்று. கிராமம் சொற்பதூரத்திலுள்ளதாதலால், ஸூர்யாஸ்தமன ஸமயத்துக்குப் புறப்பட்டார்கள்.

பாஜக க்ஷேத்திரத்துக்கு உடுபியிலிருந்து செல்லும் மார்க்கம் வெகுதூரம் இல்லாவிடினும், தகுந்த வழியல்ல. நெடுகக் காடாதலால், சில பயங்களும் அங்குண்டு. அக் காட்டைக் கடந்துபோவதற்குத் தக்க வண்டிப்பாதையும் கிடையாது. ஆதலின், நடந்தே போகவேண்டும். அவ் வனத்தில் சுழன்று சுழன்று வீசும் காற்றினால், செல்பவர் கால்கள் ஓய்ந்து தவிப்பதுமுண்டு. இவ்விதமான அவ் வழியைக் கடந்து பெண்களையும் குழந்தைகளையும் அழைத்துக்கொண்டு மத்யகேஹர் முதலியவர், நல்ல நடு நிசியில், ஒரு மரமடர்ந்த ப்ரதேசத்துக்கு வந்து சேர்ந்தார்கள்.

அந்தக் காட்டினூடே பிசாசங்கள் அலைந்து திரிந்து வருவார் போவார்க்குத் தீங்கையும் செய்வதுண்டு. இவர்கள் அவ்விடத்துச் சேர்ந்ததோ நள்ளிருள். இப்போது தாம் அவர்கள் தமது மூடத்தனத்தை யுணர்ந்து, "ஏன் இப்படிப் புறப்பட்டோம்? ஏன் இப்படிப் புறப்பட்டோம்? குழந்தைக்கு யாதொரு தீங்கும் வாாமலிருக்கவேண்டுமே" என்று சந்த்ரமௌளீச்வரரையும் அநந்தேச்வரரையும் பிரார்த்தித்துக்கொண்டார்கள். இக்குழந்தை ஸாதாரணக் குழந்தையாய் இருந்தாலல்லவோ, தீங்குகள் நேரிடுமோ வென்று ஐயுறலாம். இதுதான் தீங்கையும் பாங்காகச் செய்யும் ஆற்றலுடையதாயிற்றே. இந்த அவதார புருஷ

ரது வரவுணர்ந்து, அங்கிருக்கும் அத்தீய காற்றுக்களே தமது ஆற்றலால் வெளிச்சம் இயற்றி நல்வழிகாண்பித்து, "சும்மா போங்கள். உங்கட்குக் கெடுதி நேராது. இக்குழந்தை யவதாரபுருஷர் என்பதை மறந்துவிட்டீர்களோ? இக்குழந்தையோடு செல்லும் யாருக்கும் எங்குமே தீங்கு நேரிடாது. இம்மஹானுபாவன் இன்றி, இந்நடுநிசியில் எமது இவ்வரசாட்சி வேளையில் இக்கானகத்தைக் கடந்து ஒருவர் செல்லப்போமோ? நீங்கள் செல்லுங்கள். இனி உலகம் நன்னிலைக்கு வருக'' என்று அசரீரியாகச் சொல்லி வழியனுப்பின. உடனே யாவரும் துணிவுகொண்டவராய் மிகுந்த காவலோடு வீடுவந்து சேர்ந்தனர்.

காலங்கடந்து செல்கிறது. வாஸுதேவஸ்வாமியும் நாள் ஒருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து சக்தியும் களிப்பும் தம்மைப்போல் வளர்ந்து விருத்தியடைய கண்ணுக்கினிய கண்ணனானார். மாதமாக ஆக, ஸாமுத்ரிகையில் சொல்லப்பட்ட முப்பத்திரண்டு லக்ஷணங்கட்கும் மேற்பட்டு, அதாவது மானுஷ லக்ஷணங்கட்கு மேம்பட்டு, திதி நிறைந்த மதிபோல் மதிநிறைந்த மைந்தனுமானார். இவ்விதம பூர்ணமான ப்ரதம வருஷத்தில் ஆண்டு நிறைவு மஹோத்ஸவத்துக்கு வந்தவர்களில் படித்த பெரியோர் இச்சேயின் அங்கவிலக்ஷணங்களை யோர்ந்து 'இது உலகவிசித்திரமானது. உலகினுக்கே ஒரு விசித்திரத்தை யுண்டுபண்ண வந்தவதரித்திருக்கிறது' என்றுசொன்னார்கள். மற்றவர்கள், தாம் இதுவரை பார்த்த குழந்தைகள் இதுபோல் இவ்வளவு லக்ஷணங்களும் ஒருமிக்க வாய்ந்திருக்கவில்லை: இது அருமருந்தே தான் என்று சொன்னார்கள்.

ஒரு வருஷத்திற்குள்ளாகவே இந்த உலக விசித்திரக் குழந்தைக்கு உண்டாயிருந்த தேக திடத்தையும் பலத்தை

யும் பற்றி என்னென்று சொல்வது? அக்குழந்தையால் செய்யப்பட்ட சில அற்புதச் செயல்களால் அதன் தேக பலம் மனுஷ்யத்தன்மையைக் கடந்தது என்று ஒவ்வொருவரும் நம்புவதற்கு இடமாகும். ஒருநாள் கணவன் வெளிவேலையாய்ச் சென்றிருந்தபொழுது, பத்நியானவள் குழந்தை வாஸுதேவனைப் பார்த்துக்கொள்ளும்படி தன் மகளுக்குச் சொல்லிவிட்டு, ஸ்நானத்திற்குச் சென்றிருந்தாள். அவ்விருவரும் இல்லாத அச்சமயத்தில் அந்தச்சிறு பெண் குழந்தைக்கு வேடிக்கைகளைக்காட்டிக் கொண்டு விளையாடிக்கொண்டிருந்தது. இருந்தால் போலிருந்து குழந்தை அழத்தொடங்கியது. அந்தச்சிறு பெண்ணும் பலவிதமான விளையாட்டுச்சாமான்களைக் கொணர்ந்து வைத்துக்கொண்டு விளையாட்டுக்காட்டியும் அழுகை பலப்பட்டதேயன்றிக் குறைந்தபாடில்லை. என்னசெய்வாள் அச்சிறு பெண்? குழந்தையை எடுத்துக்கொண்டால் இடுப்பிலும் கையிலும் நிற்கமாட்டேனென்கிறது. கீழேவிட்டாலோ புரண்டு புரண்டு அழுகிறது. தாய் வருவதற்கோ இன்னும் வெகுநேரஞ் செல்லும். இவ்விதமான அழுகையின் புதுமையை அப்பெண் இன்றுதான் அறிந்தவள். அதனை சமாதானப்படுத்தப் பலவழி முயன்றும் பலனில்லாததால் தானும் சிறிதுநேரம் அழுதாள். பிறகு ஒருவிதமாய்த் தைரியங்கொண்டு, உள்ளே ஏதேனும் தின்பண்டம் உண்டோ என்று பார்க்க அறைக்குள் சென்றாள். அப்போது குழந்தையும் கூடவே அழுதுகொண்டு வந்தது. அறைக்குள் தின்பண்டங்கள் இருக்குமிடம் தனக்குத் தெரியாததால், சிறிதுநேரம் தேடியும் ஒன்றும் அகப்படாது போகவே, குழந்தையைக்கவனியாமலே தானும் பலமாய் அழவாரம்பித்துவிட்டாள். நமது ஸ்வாமியோ, தமக்குப் பதிலாக அப்பெண்ணையழச்செய்து விட்டுத் தாம் மாத்திரம் அவ்வறையைவிட்டு வெளிவராமல் இருந்தார். அந்தப்பெண்

ணே, தனது தாயார் வந்துவிட்டாளோவென்று பார்ப்ப தற்காகவேண்டி, வாயிலுக்குச் சென்றனள். அந்த ஸம யம் தாயாரும் வந்துசேர்ந்தனள். சேர்ந்தவள் பெண்ணின் முகக்குறியால், அவள் அழுகையை யறிந்து, அதற்குக் காரணத்தை வினவினள். பெண்ணும் நிகழ்ந்ததைச் சொன்னுள் உடனே விரைந்து சென்று, அறையில் இருந்த குழந்தையைப்பார்த்தபோது, அது அங்குக் கொட்டி வைத்திருந்த கொள் தானியத்தைத் தின்று கொண்டிருந்தது. ஐயோ மோசம் வந்துவிட்டதேயென்று குழந்தையை வெளியிலெடுத்து வந்து, பின்னர் தானிய மிருந்தவிடத்தைப் பார்க்கும்போது, ஒரு தானியமும் இல் லாதிருக்கக்கண்டு, பயமும் ஆச்சரியமும் கொண்டு, இதற் கென்ன சிகிச்சை செய்கிறது என்று அண்டைஅயலாரைக் கேட்போம் என்று விரைந்தனள். அப்போது கணவரும் எதிர்ப்பட, அவரிடம் நிகழ்ந்தவற்றை விவரமாய்ச் சொன் னுள். அந்த பக்தர் மிகவும் பயந்து, வைத்தியரை யழைத் துவந்து குழந்தையைப் பார்க்கச் சொன்னபோது அவர் குழந்தைக்கு யாதொரு வேறுபாடும் இல்லை. இதற்குப் பிராணபயம் கிடையாது. நீங்கள் பயப்படவேண்டாம் என்று சொல்லிவிட்டுப் போனுர். அந்த வைத்தியரால் இவர்கள் ஒருவாறு ஸமாதானமடைந்தனரேனும் கண வன் மனைவியர் உள்ளம் நடுங்க என்ன தீங்கு வருமோ வென்று வருந்தி, இந்தப்பூட்டில் நின்றும் குழந்தையைக் காப்பாற்றும்படி தெய்வங்களை வேண்டிக்கொண்டார்கள். குழந்தையோ, தான் உட்கொண்ட அப்பெருந்தீனியால் யாதும் சுகக்கேடின்றி விளையாடிக்கொண்டிருந்தது. பிறகு நாளடைவே பெற்றோரும் மனவருத்தம் ஒழிந்தனர். இச் செய்திகேட்டவர் பலர், இவர் அவதார புருஷர் ஆதலால் தமது தெய்வத்தன்மையை விளக்கிக் காட்டும் திருவிளையா ட்டுகளில் இது ஒன்று என்று சொன்னுர்கள். மற்றும்

பலர் வியப்பும் களிப்பும் கொண்டனர்.

இவ்வற்புதச் செயல் நடந்த சின்னாட் சென்ற ஒரு நாள், திடீரென்று குழந்தைகாணாமல் போய்விட்டது. மத்யகேஹரும் மற்றவரும் பல ஆட்களைவிட்டு எங்கும் தேடச்சொன்னார்கள். தங்கள் அறையிலும் தேடினார்கள். ஒருகால் கிணற்றில் விழுந்திருக்குமோ என்ற சந்தேஹம் தோன்றி அங்கும் தேடினார்கள். எங்கும் இல்லை. பிறகு, அவர்கள் இக்குழந்தையின் லக்ஷணங்களைக்கண்டு யாரோ சூனியக்காரர் க்ஷுத்ரதெய்வங்கட்கு பலிகொடுக்கும்பொருட்டு மாயமாய்க் கொண்டுபோய்விட்டார்கள். இனி நாம் குழந்தையை யிழந்தபடிதானாகும் என்று எண்ணி மனத்துயரத்தோடு, ஜோஸ்யரைக் கேட்க, அவர் அது யாதொரு கேடுமின்றி உயிரோடுதான் இருக்கின்றது. இன்று சாயங்காலத்திற்குள் திரும்பிவரும். அது கீழ்பக்கத்திலிருந்து திரும்பி வந்துகொண்டிருக்கிறது. நீங்கள் சென்றாலும் அழைத்துவரலாம் என்று சொன்னார். அதனை வேதவாக்காகக்கொண்டு, அப்படியே மத்யகேஹர் வேறு சில புருஷரோடு கீழ்பக்கம் நோக்கிச்சென்றார். ஊருக்கு வெளியில் சிறிது தூரத்தில் ஒரு காட்டிலிருந்து வந்துகொண்டிருக்கும் மாட்டின் வாலைப் பிடித்துக்கொண்டு குழந்தை தளர்நடையோடு வருவதைப் பார்த்தனர். உடனே, மத்யகேஹர் இழந்ததனத்தை மீண்டும் பெற்றவர்போலவும், தானிழந்தமணியைக் கண்டெடுத்த நாகம்போலவும் ஸந்தோஷஸாகரத்தில் மூழ்கி, ஓடிச்சென்று குழந்தையை யணைத்து எடுத்துக்கொண்டு வீடுவந்து சேர்ந்தார். அக்குழந்தை அம்மாட்டின் பின்னோடு ஏன் சென்றது? எப்படிச் சென்றது? இது தேவரஹஸ்யம். அக்குழந்தைகுத்தான் தெரியும். குழந்தையைக் கேட்டாலோ அது சிறிக்கிறதேயன்றி வேறொன்றுமில்லை. இதுபோலவே இவ்வயதுக்குள் காட்டில் சென்று விளையாடுவதும் மலையிலேறி ஸ்வாமிதரி

சனத்திற்குச் செல்வதுமாய் நமது வாஸுதேவர் பழகிவிட்டாரென்றால், இவரது தேகபலம் மனோபலமிவற்றை என்னென்று விவரிக்கமுடியும்? இவரது இந்த ஆச்சரியமான கமனத்தையும் கவனத்தையும் பெற்றோர் தடுக்கமுடியாதவராயிருந்தனர். ஆனாலும், இக்குழந்தை துஷ்டத்தனஞ் செய்தது என்று சொல்வார் இல்லை. துஷ்டத்தனம் செய்திருந்தாலல்லவோ குறைகூறுவர். இவர் தமது இச்சிறு வயதிலேயே யாரும் தம்மிடம் அன்பும் பக்தியும் கொண்டிருக்கும்படி செய்தனரென்றால், இவரை ஸாதாரண குழந்தையென்று சொல்ல யார்தாம் துணிவர்?

ஒருநாள், மத்யகேஹருக்குப் பசுவொன்று விலைக்குக் கொடுத்திருந்த ஒரு இடையன், தனக்குப் பட்டர் இட்டிருந்த தவணை நாள்களெல்லாம் பலமுறையும் தவறிப்போகத் தானே நேரில் சென்று மறியல் கிடந்தாவது பணத்தை வசூல் செய்யவேண்டுமென்று தீர்மானித்துக்கொண்டவனாய் பட்டரது வீட்டுக்கு வந்து சேர்ந்தான். அப்போது விமானகிரியிலிருந்து அநுஷ்டானங்களை முடித்துக்கொண்டு அவர் திரும்பிவந்த காலமாயிருந்தது. அவரும் வீடு சேர்ந்தார். அவனும் வந்து சேர்ந்தான். இனித்தான் பூஜை நடந்து ஆகாரத்துக்குப் போகவேண்டும். நமது பட்டர் தேவாராதனைக்கு உட்கார்ந்துகொண்டாலோ, வெகு சாவதானத்தோடு மந்த்ரலோபமும் க்ரியாலோபமுமின்றி மிகு பக்தியோடு புரிந்து எழுந்திருப்பர். அப்படி முடித்து எழுந்திருக்க குறைந்தது பதினெட்டு நாழிகையாகும். ஸ்நானஞ்செய்துவிட்டு வருவதற்கு இவர்க்குவழக்கமாகக் காலை ஒன்பது மணி ஆகும். பூஜையில்லாமல் தவறியும் ஆகாரம் நடக்கப்படாது என்பது இவர் கொள்கை.

இப்படியாக இவர், அந்த இடையனைக் கண்டமாத்திலேயே உபசாரமாய் வரவேற்றார். அவனும் பட்டரது

கௌரவத்துக்கு இணங்க வெகு மரியாதையோடு தனக்குச் செல்லவேண்டுவதைக் கேட்டான். அப்போதும் அவர் மற்றொரு தவணை வைக்கவே, கடன்கொடுத்தவன் மிகுந்த கோபங்கொண்டவனாய், பணத்தை வசூல் செய்யாமல் இன்று போவதில்லையென்று தனக்குப் பணத்தின் இப்போதைய அவசரத்தைச் சொல்லிக்கொண்டு வாயிற்படியில் உட்கார்ந்துகொண்டான். மத்யகேஹரோ எவ்வளவு சொல்லியும் அவன் கேளாததால், தெருவில் தமக்குப் பணம் தரவேண்டியவரையாவது கேட்டுக்கொணரலாம் என்று சென்று முயற்சி செய்தார். யாதும் பலனில்லை. நாழிகையோ பத்தாகிவிட்டது. இனிப் பூஜையோ நடக்க வேண்டும். பட்டரும் தன்னால் இனி முயற்சி செய்ய வழியில்லையென்று வீட்டிலேயே யிருந்துவிட்டார்.

இதுவரையிலும் தமது தகப்பனாரது முயற்சியை எட்டினவரையிலும் பரிசோதிக்கவெண்ணிய குழந்தையாகிய நமது வாஸுதேவ சூத்ரதாரி இப்போது நாடகஸபை வந்து சேர்ந்தார். தம் தகப்பனாரைப் பிடித்திழுப்பதும் அவர்மேல் தாவி விழுவதும் விளையாடுவதும் குதிப்பதும் ஓடுவதுமாயிருந்தார். என்றாலும் பட்டர் முகத்தில் மாத்திரம் நல்ல களிப்புத்தோன்றவில்லை. வந்த இடையனே அக்குழந்தையிடத்தில் பேரன்பு கொண்டனன். பட்டரோ கடன்பட்ட நெஞ்சுடையாராகவே விளங்கினர். எவ்வளவு செல்வவான்களாயினும் ஒரு ஸமயம் பொருள் தட்டிப் போவது வழக்கந்தானே. பட்டரோ அப்படிப் பணமுடையவருமல்லர். இந்த ஸமயம் கடன்காரரும் வந்து தொந்தரைசெய்தால் என்னசெய்வார் பாவம்! பட்டர் தக்க கௌரவமுடையவராதலால், இச்சமயம் இப்படி பகவான் பரிசோதிக்கிறாரே என்று வருந்திக் குழந்தையினது விளையாட்டில் யாதும் கவனம் செலுத்தாதவரா யிருந்தனர். இடையனே அக்குழந்தையை எடுப்பதும் அணைப்பதுமாய்

இருந்தானே யல்லாமல் பிறகு தாருங்கள் என்று சொல்லி எழுந்துபோகவில்லை. குழந்தையோ தம் தகப்பனாரிடஞ் சென்று பூஜைக்கு எழுந்து போகச்சொல்லி வற்புறுத்திய போது பட்டர், அப்பா! நான் எப்படி எழுந்துபோவேன்? இவருக்குக் கொடுத்த பின்னரன்றோ எழுந்து போகலாம் என்று வருத்தத்தோடு சொன்னார்.

நாழிகையோ மிகுதியாய் ஆய்விட்டபடியால், வாஸுதேவர், இனித் தமது பெற்றோர்க்குத் துயரத்தைக் கொடுக்கக்கூடாதென்று எண்ணி, தம்மிடம் அன்புகொண்டு விளையாடுகிற அந்தக் கடன்காரனைத் தன்னுடன் வரும்படி ஜாடை செய்ய, அது விளையாட்டுக்குக் கூப்பிடுகிறதென்று நினைத்தனனாயினும், தனக்கு அதன் மேலுண்டா யிருந்த அன்பு மேலீட்டால் பின் தொடர்ந்தான். குழந்தையும் தட்டித் தள்ளாடித் தளர்நடையிட்டுக்கொண்டு தங்கள் வீட்டுப் புறக்கடையிலுள்ள ஓர் புளியமரத்தண்டை அவனோடு வந்து அங்குமிங்கும் திரிந்து சில புளியங்கொட்டைகளைப் பொறுக்கித் தொணர்ந்து அவன் கையில் இட்டது. யாகத்தில் ஆகுதி செய்யப்படும் மாமிஸ கண்டங்கள், மந்த்ரத்தால் வேண்டப்பட்ட அக்கினிபகவானால் அங்கீகரிக்கப்படவே அவை தேவர்கள் சுவைத்து உண்ணக் கூடிய அமுதமாக மாறும். அதுபோல மரத்தடியில் சிதறிக்கிடந்த புளி வித்துக்கள் நமது ஸ்ரீமத்வரது உள்ளன் போடுகூடிய கரதலம் பட்டமாத்திரத்தில் நாணயங்களாக மாறி அவன் கரத்தில் விழுந்தன. அவை தான் வேண்டியதற்கு ஏற்றக்குறைவு இல்லாமல் இருக்கக்கண்டு குதூகலித்தவனாய் தலையை நிமிர்த்து குழந்தையைப் பார்த்தான். அது ஓடோடியும் சென்று வீட்டுக்குள் நுழைந்து தன் தாயினது மடியில் படுத்துக்கொண்டது.

கடன் பணத்தைக் கையில் வாங்கிக்கொண்டவனும், விரைந்துவந்து, பட்டரை நமஸ்கரித்து, நிகழ்ந்ததைச்

சொல்லித் 'தமது புத்திரன்'து யோக்யதையை யறியாத நாயேன், தங்களை இவ்வாறு துன்புறுத்தினேன். என்னை மன்னிக்கவேண்டும். தாங்கள் மனம் நோகக்கூடாது. என் குடும்பங்களை யாசிர்வதிக்கவேண்டும். பணம் கூட எனக்கு வேண்டாம்' என்று பெற்றுக்கொண்ட நாணயங்களைக் கீழே வைத்து வணங்கினன். புத்திரரது ஆற்றல் தெரிந்த மத்யகேஹர், அவ்வுண்மையைத் தெரிந்தவராய் அவனை யெழுந்திருக்கச்சொல்லி, அந்நாணயங்களைத் தம் கையால் எடுத்துக்கொடுத்து 'நீ நஷ்டப்படக்கூடாது. சென்று வா' என்று விடைகொடுத்தனுப்பினர். பணம் பெற்றவனும், 'தெருவில் செல்லும்போது, இவ்வற்புதச்செயலை நேர்ந்த விடமெல்லாம் சொல்லிக்கொண்டே போனன். இதனைக் கேட்டவருள் ஆச்சரியப்படாதார் ஒருவருமில்லை.

இப்படித் தமது பலவாகிய குணங்களாலும் ஆற்றலாலும் ஸ்ரீமத்வர் ஸமயம்வாய்த்தபோதெல்லாம் தமது தெய்வத்தன்மையை விளக்க அவ்வருஞ்செயல்களைக் கேட்ட பலரும் அந்தப் பால்யமுதலே ஸ்ரீவாஸுதேவதீர்த்தரிடத்தில் ப்ரேமையும் வணக்கமும் கொண்டனர். சில அயல் நாட்டார், இந்த விந்தைகள் நடத்திய குழந்தையைத் தரிசிப்பதற்கும் வந்துபோனர்கல். அம்மஹானது அவதார ஸ்தலம் அன்றுமுதலே யாத்திரை ஸ்தலமாகவும் ஆயிற்று.

மஹான்களாக இங்கவதரித்தவரெல்லாருமே, பின் நடக்கப் போகிற ப்ரஸங்க காலத்தில் யாரும் தம் கொள்கையை யநுஸரிக்க வேண்டியதற்காக, இப்போதே தம் பால்ய விளையாட்டுகளால் உலகினரது உள்ளம் தம்மிடம் பேரன்பு பூண்டு நடைபெறுமாறு செய்து கொள்வார் போலும்.

(இன்னும் வரும்.)

---

# கிறிஸ்துபோன்ற ஒழுக்க முறை நூல்.

[அறிவிப்பு.—இந்நூல் லத்தீன் பாஷையில் உள்ளது. இத்தாலியா தேசத்தில் கெம்பிஸ் என்ற கிராமவாசியாகிய தோமஸ் என்ற ஞானியால் இயற்றியது. இற்றைச்கு 510 வருஷங்களுக்கு முன்னர் இவர் இருந்தார். இந்நூலின்கண் உள்ள உண்மைப் பொருள்கள் பெரும்பான்மையாய் ஒரு மதத்திற்கும் விரோதமல்ல. எல்லாச் சமயிகளும் கைக்கொண்டு அனுஷ்டிக்கத்தக்கன. மேல் நாட்டில் உள்ள எல்லாப் பாஷைகளிலும் மொழி பெயர்க்கப் பெற்றுள்ளது. ஆங்கிலத்தில் மாத்திரம் மூன்று நான்கு வித்வான்கள் மொழிபெயர்த்துள்ளார். இத்தேசத்தின் பாஷையில் இதுகாறும் மொழி பெயர்க்கப்பட்டதாகத் தோன்றவில்லை. இப்பெரிய அரிய நூலை நம் தேசத்தார் எச்சமயரேனும் படிப்பாராகில், மதத்துவேஷம் குன்றிச் சமாதானமும், ஒப்புநோக்கும் சுபாவமும் பெறுவர் இப்புத்தகத்தை உள்ளபடி கிறிஸ்தவர் உணர்வாராகில், பிற மதத்தினின்று சிறுவர்களையும் சிறுமிகளையும் பெயர்த்து, கிறிஸ்துமதத்தில் சேர்க்க நாடார்—

"ஆன சமயம் அதுஇது நன்றுஎனும்
மாய மனிதர் மயக்கம் அதுஒழி.
கானங் கடந்த கடவுளை நாடுமின்
ஊனங் கடந்த உருவது ஆமே."

"முத்திக்கு வித்து முதல்வன் ஞானமே
பத்திக்கு வித்துப் பணிந்துற்றுப் பற்றலே
சித்திக்கு வித்துச் சிவபரந் தானுதல்
சத்திக்கு வித்துத் தனதுப சாந்தமே."

என்ற திருமூலர் அருளிய திருமந்திர வாக்குகளுக்கு அநுசரணையாக இந்நூல் முறை செல்லுகின்றது. இத்தமிழ் மொழிபெயர்ப்பு ஆங்கிலத்தினின்றும் செய்துள்ளது. முதல் நூல் கிரந்தகர்த்தாவின் ஹ்ருதயத்தைக் கூடியவரை தெரிந்து எழுத முயன்றேன். ஞான நூலாகையால், பூர்ணமாக அறிந்தேன் என்று சொல்ல வல்லேன் அல்லேன்.

இதை வாசிக்கின்றவர் கிறிஸ்து, இயேசு என்ற மொழிகளுக்குப் பதிலாக அவரவர் சமயத்தில் உயர்வு பெற்ற ஞானிகளின் பெயரை வைத்துவாசிப்பரேயாகில், மதச்செருக்கும் பகைமையும் கொள்ளார்.]

---

## புத்தகம் III.

### முகவுரை.

### அன்புடையான் உள்ளத்தில் கிறிஸ்துவின் வாக்கு.

கர்த்தர் சொல்லுகிறார்:—"வருந்துகின்றவர்காள்! சுமைதூக்கி அழுந்துகின்றவர்காள்! வாருங்கள் என்னிடம் வாருங்கள். உங்களுக்குச் சாந்த நிலை கொடுக்கிறேன். ¶நான் கொடுக்கிற உணவு இதுவாம். உலகப்பிராண உத்தாரணம் செய்வதற்காகத் தியாகம் செய்தேன் என் சதையையே. அதை உண்ணுங்கள். என் உடலையே உங்களுக்குக் கொடுத்திருக்கிறேன். என் ஞாபகக்குறியாக இதைச் செய்மின். என் சதையை உண்ணுகிறவனும் என் இரத்தத்தை குடிக்கிறவனும், என்னிடம் தங்குகிறான்; அவனிடம் நான் தங்குகிறேன். நான் சொல்லும் மொழிகள் உயர்வானவைகள். சுவாசம் போன்று இன்றி அமையாதவைகள். பிராணாதாரமானவைகள்."

---

இப்புத்தகத்தை நான்காவதாக சிலபதிப்புகளில் சேர்க்கப்பட்டு இருக்கின்றது.

¶இதன் தத்துவம் இதுவாம்:—அவர் சரீரம் உணவும், அவர் இரத்தம் பானமும் என்றால், அவர் பக்தர்கள் அவர் அம்சம் பெற வேண்டுமென்பதாம். அதாவது அவர்போன்று ஒழுகுதற்பாலர் அதனால் அவர்போலாவர் என்பதாம்.

# 1-வது அதிகாரம்.

## சிரத்தை பக்தியுடன் கிறிஸ்துவை மனத்தில் வைக்க வேண்டும் என்பது.

### சீஷன் மனம் உருகி உள்ளத்தில் சிந்தித்தல்.

என்றுமுள்ள சத்தியமூர்த்தி! கிறிஸ்துவே! உம்முடைய †மொழிகளை என் மனத்தால் கேள்வியுற்றேன். இவைகள் வேறு ஒரு காலத்திலும் சொன்னவையல்ல. வேறு ஒரு இடத்திலும் எழுதினவையல்ல. அவை உம்முடைய சத்தியவாக்கு. சிரத்தை பக்தியுடன் என்னால் உட்கொள்ளத்தக்கது. அவைகள் உம்முடைய சொந்த வார்த்தைகள். அவைகளை வெளியிட்டீர். அவைகள் எனதாயின. ஏனெனில் நான் கடைத்தேறும் பொருட்டு அம்மொழிகளை வசனித்தீர். சந்தோஷத்துடன் உம்முடைய வாய்ப்பிறப்பை அங்கீகரிக்கிறேன். என் சிந்தையில் பிரியத்துடன் வைப்பேன். இனிமையும் அன்பும் அருளும் தோய்ந்த அம்மொழிகள் என்னைத் தூண்டுகின்றன. ஆனால், என் பாவங்கள் என்னைப் பயமுறுத்துகின்றன. என் அசுத்தமனம் இடிமுழக்கம்போன்று, 'இந்த ரஹஸ்யமான உபதேசங்களைப் பற்றாதே' என ஆரவாரம் செய்கிறது. உம்முடைய இனிய மொழிகள் 'வா' என்று அழைக்கின்றன. அந்தோ என் பாவங்கள் என்னை ஆழ்த்துகின்றனவே!

உம்முடன் இருக்கவும் அமிர்தத்தை உண்ணவும் நித்தியத்வத்தை அடையவும், மாக்ஷிமை பெறவும் என்னை 'வா' என்று அன்புடைய மனத்தினால் கூப்பிடுகின்றீர். "வருந்துகின்றவர்காள்! துன்பத்தில் அழுந்துகின்றவர்காள்! என்னிடம் வாருங்கள். சாந்த நிலையை அடையுங்கள்." என்று உம்முடைய வாய்ப்பிறப்பு நடைபெறுகின்றது. பாவியின் காதுக்குப் பிரியமான இனிய மொழியே. என்நாதா! என் இறைவா!, உம்முடன் சாமீப்பியத்தை ஏழையும் பாவியுமாகிய நான், அடையும்படி, அழைத்தலான பாக்கியம் பெற்றேன்.

2. கர்த்தாவே! விண்ணில் நிறைந்த விமலனே! உம்மிடம் அணுகவும் அருகனல்லேன். ஆயினும் 'வா' என்று அழைக்கின்றீர்.

---

†முகவுரை.

இந்த உயர்வான கவுரவம் கிடைத்ததுகாண்! இந்த அன்பு பற்றிய அழைப்பை என்ன என்பேன்? எப்படி நான் உம்மிடம் வரத்துணிவேன்? நலம் ஒன்றுமில்லாத யான், உம்மை 'என்னுடல் இடமுகொள்க' என்று எப்படி அழைக்க எண்ணுவேன்? உம்முடைய அன்பு ஆர்ந்த முகத்தை எத்தனை முறையோ என் பாவத்தால் நோகச்செய்திருக்கின்றேனே! தேவர்களும் பிரதானதேவர்களும் உம்மைப் போற்றுகின்றார்கள். ஞானிகளும் சுத்த சீலர்களும் உம்மை பயபக்தியுடனே அஞ்சலிபண்ணுகின்றார்கள். அவர்கள் எல்லாரும் இருக்க, *நீர் என்னை 'வா' என்று அழைக்கின்றீர். நீரே வாய்திறந்து சொல்லாவிடில் அந்த வார்த்தையை யார் நம்புவார்? அழைப்புவசனம் உம்முடையதன்றேல், அதை நம்பி யார் உம்மிடம் செல்ல முயலுவார்?

என்ன ஆச்சரியம் காண்! சத்திய சங்கற்பராகிய நோவா என்பவர், சில ஜீவர்களைக் காப்பாற்றிக் கரையேற்றும் வண்ணம் 100-வருஷங்களாக ஒரு கப்பல் செய்தார். நானோ உலகசிருஷ்டி கர்த்தனையே, பக்தியுடனே என்னிடம் பெறுகிறதற்கு ஒருநாழிகையில் ஆயத்தம் எவ்வண்ணம் செய்வேன்? பகவானே! உமக்குப்பிரியனும் உற்ற முக்கிய நண்பனுமான, மோசே என்பார் பழுதில்லாத ஆறின மரத்தைக்கொண்டு பேழை ஒன்று செய்து, அதைத் தங்கத் தகட்டில் கவசம் போட்டு, அதின்கண் உபதேச சாஸ்திர புஸ்தகங்களை (Tables of the law) வைத்தார்! அழிவுக்குரிய யான் பிராணதாராகவும், அந்த உபதேசங்களின் மூலமூர்த்தியாகவுமுள்ள நீர் என்னை உறையிடமாகக் கொள்ளவேண்டுமென எவ்வளவு சுலபமாகத் துணிந்தேன்!

இஸ்ரேயல் ஜாதியாரின் அரசர்களுக்குள் ஞானசிகாமணியாகிய ஸாலமன் என்பவர் உம்முடைய மஹிமை விளங்க, 7வருஷங்களாககம்பீரமான ஒரு ஆலயம் கட்டிமுடித்தார்; 8 நாள் அதன் பிரதிஷ்டாகிரியைகள்மாத்திரம் நடந்தனவாம். தம்முடைய உபசாந்தத்தின் பொருட்டு 1000 வரை பலியிட்டார். எக்காள முழக்கத்துட

*"அன்பர் ஆகிமற் றருந்தவ முயல்வார் அழல்உறு மெழுகாம்
என்பராய் நினைவார் எனைப்பலர் நிற்க, இங்கு எனை
எற்றினுக் காண்பாய்?...."
(மாணிக்கவாசகர்.)

னும், பெரிய சந்தோஷ ஆரவாரத்துடனும், பயபக்தியுடனும், தேவ உடன்படிக்கைகள் உள்ளமைந்த பேழையைத் தாம் நிர்மாணித்த ஆலயத்தில் ஸ்தாபித்தார்.

நானோ அற்பன். மனிதர்களுக்குள் ஏழை. ஈசுவர சம்பந்தமாக அரைநாழிகையாயினும் சத்காலக்ஷேபம் செய்தேன் இல்லை. அரை நாழிகையாவது நல்ல பொழுதுபோக்கினேன் என்று மனம்கொள்ள விரும்புகிறதோ! அந்தோ அப்படிச் செய்யவில்லையே! இத்தன்மையான புலையனேன் உம்மை 'என் உடலிடம் உறைக' என்று எப்படி அழைக்கத்துணிவேன்?

ஈசுவரா! உம்மைத்திருப்தி செய்ய ஞானிகள் எவ்வளவு பாடுபட்டார்கள். ஆ! நான் எவ்வளவு பலஹீனன். உம்மோடு ஐக்கியம் பெற நான் செய்த முயற்சி எவ்வளவு சொற்பமான காலம்! ஒன்றையே பற்றி என்மனம் ஏகாக்கிரசித்தத்தை அடைய முடியவில்லையே. பல கவலைகள் அங்கும் இங்கும் என்மனத்தை இழுக்கின்றனவே. அவைகளை மீறி ஒரு கணப்பொழுதேனும் இருக்க இயலவில்லையே. ஆனால், உம்முடைய அனுக்கிரகமான தரிசன அணுகுகையில் அசுத்தமான எண்ணங்கள் என் மனதில் நாடக்கூடாது என்று மாத்திரம் யான் அறிவேன். உலகப்பற்று ஒன்றும் என்மனத்திடம் இருக்கக்கூடாதென்று எனக்குத்தெரியும். ஏனென்றால், சாதாரண தேவனு என்னை உறையிடமாகக் கொள்ளப்போகின்றான்? தேவாதிதேவரே கோவிலிடமாக என்னைக் கொள்ளப்போகிறார் அல்லவா?

பேழைக்கும் அதன்கண் உள்ள நிதிக்கும் வெகுதூரம். உம்முடைய சுத்தமான சரீரத்துக்கும் உம்முடைய சொல்லுதற்கரிய கல்யாண குணங்களிற்கும் வெகுதூரமே. வரப்போகின்ற சம்பவங்களின் அறிகுறியாகிய வியாதிபற்றிய பலிகளுக்கும் ஆதிகாலம்தொடங்கி இதுவரை செய்த யக்கியங்களின் பரிபூரணம் என்று சொல்லற்பால உம்முடைய திவ்விய சரீரத்தியாகத்திற்கும் வெகுதூரமே. உம்முடைய திவ்விய சந்நிதியை எதிர்கொள்ள நான் என் மனம் நைந்து உருகுகிறேன் இல்லை. உம்முடைய அருட்பெருகிய உம்முடைய வரவை அதிக சிரத்தையுடனும் கவலையுடனும் எதிர்பார்க்க ஆயத்தம் செய்கிறேன் இல்லை. அறிஞரும், தீர்க்கதரிசிகளும், முதி

ர்ந்தோரும், அரசர்களும், பிரபுக்களும், பொதுஜனங்களும் எவ்வள வோ அன்புடன் கடவுள் வழிபாடுகள் செய்திருக்கின்றனரே!

3. பக்தசிரோமணியாகிய டேவிட் அரசர், தம்முன்னோர்களு க்கு அருளால் கிடைத்த லாபங்களின் பொருட்டு, நன்றியுள்ளவராக அன்பின் பெருக்கால், ஆடினார்; பற்பல வாத்தியங்கள் அமைத்தார், கீதங்கள் தாமே கவனம் செய்தார். ஜனங்கள் அவைகளை உற்சா கத்துடனே கானம் பண்ணும்படி செய்வித்தார். பரிசுத்த ஆவி பெற்று, ஆவேசம் கொண்டவராய்த் தாமும் பல்முறை யாழுக்கு இசையப் பாடுவார். தம்முடைய இஸ்ரியல் ஜனங்கள் அன்பு ஆர்ந்த நெஞ்சினராய் இறைவனைப் போற்றும்படி செய்திடுவார். தினந் தோறும் சங்கீதத்துடன் ஈச்வர ஸ்தோத்திரங்கள் செய்திடுவார்.

அக்காளில், பக்தியின் வைபவம் அவ்வளவு செழுமையாக நடை பெற்றது. தேவப்பேழையின் முன்னர் ஈச்வர ஸ்தோத்திரங்களும் கீர்த்தனைகளும் பாடினார்கள். இயேசுவின் சரீரத்தியாகம் செய்து இருக்கின்ற ஸம்ஸ்காரமும் அவருடைய திவ்விய மஹிமைபற்றிய சந்நிதியும் அடையப்பெற்றிருக்கின்ற இக்காளில், நானும் மற்றும் எல்லாக் கிறிஸ்தவரும் எவ்வளவு பக்தி சிரத்தை பாராட்டற்பாலது.

4. அனேகர், ஞானிகளின் சரீரங்கள் அடங்கியிருக்கும் இடங் களைத்தேடித் தரிசிக்கச் செல்லுகின்றார்கள். அவர்களின் சித்து விளையாட்டுகளைக் கேட்டு ஆச்சரியம் அடைகிறார்கள். அவர்கள் அடங்கியிருக்கும் கோவில்களைக் கண்டு வியக்கின்றார்கள். உள்ளே பிரவேசித்து பட்டிலும் சுவர்ணகவசத்திலும் வைக்கப்பெற்றுள்ள ஞானிகளின் அஸ்தியை முத்தமிடுகிறார்கள். என்னுடைய பாக்கிய த்தை நினைக்க என்சொல்வேன்! கடவுளே என்னுடலைக் கோவி லாக இடங்கொண்டு உறைகின்றனரே. இறைவா! சுத்தத்தில் சுத்தமே! தேவர்களின் கர்த்தாவே! மனிதர்களின் கர்த்தாவே! என் பாக்கியமே பாக்கியம். நீரே என்னுடலை ஆலயமாகக்கொண்டு உறைகின்றீரே. ஆனால் இவ்விதக் காட்சி காண்டலை, ஒரு வேடிக் கையான விளையாட்டாகச் சாதாரண ஜனங்கள் மதிக்கின்றார்கள். அதனால் அவர்கள் தங்கள் ஒழுக்கமுறையில் சொற்பமேனும் சீர் திருத்தம் பெறுகிறார்களில்லை. தங்கள் பாவங்களைப்பற்றிச் சற்றே னும் அனுதாபப்படாமல் இங்கும் அங்கும் பரபரப்பாய்த் திரிகின்றார்

கள். என் இறைவனும் மானுடப்பிறவியாக அவதரித்த இயேசு கிறிஸ்துவும், ஞான சம்ஸ்காரம் பெற்ற பீடத்தில் (ஹிருதய கமலத்தில்) உறைவார்கள். அங்கே உம்மை பக்தியுடனே எவ்வளவுக்கெவ்வளவு பூஜிக்கின்றார்களோ, அதற்குத் தக்கபடி அளவு கடந்த பலமும், என்றுமுள்ள மோக்ஷ சாம்பிராஜ்ஜியமும் கிடைப்பதாகும். இந்த ஸ்தானத்தை அணுகுதல் வேண்டுமானால் சஞ்சலமான விஷய சம்பந்தமான வீண் எண்ணங்களைத் தவிர்க்கவேண்டும். உண்மையான நம்பிக்கை, உயர்வான சிரத்தை, யதார்த்தமான ஜீவகாருண்யம் பற்றவேண்டும்.

5. கடவுளே! கர்த்தாவே! புண்ணியனே! விசித்திரமானவை ஆக்கியவனே! எங்களை ஆட்டிவைக்கின்ற அற்புதமும், உமக்கு ஆப்தமானவர்களுக்கு அன்புடனும் ஆதரவுடனும் நீர் அருள்புரிதலின் அழகும், அவர்கள் முன்னரே நேர் நின்று ஞான சம்ஸ்காரத்தில் மூட்டும் முறையும், எங்களுடைய அறிவுக்கு எட்டாதவைகள். இத்தகைய நின் தன்மையானது பக்தர்களை இழுக்கின்றது. அன்பை எழுப்புகின்றது. வாழ்நாள் முழுமையும் தம் குற்றங்களைக் களைதலையே தொழிலாகக்கொண்டு இருக்கின்ற உம் அரிய பக்தர்கள், உயர்வான இந்த ஞானசம்ஸ்காரம் பெற்றதினால், உண்மையான அன்பும் நல்ல விருப்பமும் பெறுகின்றார்கள்.

6. ஞான சம்ஸ்கார முறையே! நீ ரகசியமாகவும் ஆச்சரியமாகவும் இருக்கின்றாய். கிறிஸ்துவின் உண்மையான பக்தர்கள் தாம் உன்னை அறிவார்கள். ஏனையர்களான பாவத்தில் அழுந்தினவர்கள் அறியார்கள். உன்னிடம் எல்லாத் தெய்வ சம்பத்தும் உள்ளது. உன்னால் மனத்தினின்று போன அறமுறை அவன்கண் உயிர்பெற்று முளைக்கின்றது. பாவத்தினால் மங்கின அதன் அழகு திரும்புகின்றது. உன்னருளின் விசேஷம் எப்படிப்பட்டதென்றால், மனம் மாத்திரமன்றி அது உள்ள சரீரங்கூட ஒரு சக்தியையும் மஹிமையையும் பெறுகின்றது.

7. அப்படியிருந்தும், நாம் அலக்ஷியமாகவும் சிரத்தையற்றும் இருக்கின்றோம். நாம் அழவேண்டும். புலம்பவேண்டும். ரக்ஷிக்கப்படவேண்டுமாகில், கிறிஸ்துவே கதி. அவரே அடைக்கலம். அவரே நம்மைப் பரிசுத்தராக்கவல்லார். அவரே நம்மைப் பாவத்தினின்று

பணயம் கொடுத்துக் கடவுளிடம் சேர்ப்பவர். நம்முடைய வாழ்வு நாள் யாத்திரையில் அவரே ஆறுதலாவார். அவர் ஞானிகளின் ஆனந்தமே ஆவர். நம்மை ரக்ஷிக்கக்கூடிய அளவுக்கெட்டாத அப் பொருளை நோக்குகின்றவர் அநேகர் இலரே என வியசனப்படு மின். அம்மூர்த்தியோ விண்ணுலகத்தை ஆநந்தப்படுத்துகின்றவர். எல்லா உலகத்தையும் நிலை நிறுத்துகின்றவர்; விலைமதிப்புக்கொள் ளாத அந்தமூர்த்தியை அடைந்த பாக்கியத்தைக் கொஞ்சமேனும் கருதாத இவ்வுலகத்தினர் நெஞ்சம் "இரும்பினும் வலிது." அவர் கண் *மரக்கண் தினந்தோறும் அதனுடன் பழகும் அதிகப் பழக்கம் அதன் அலட்சியத்துக்கும் தன் கேட்டுக்கும் இடமாகி றது. ஏனென்றால் இந்தப் பரிசுத்தமான ஞான சம்ஸ்காரம் ஒரே ஒரு இடத்தில் மாத்திரமும், ஒரே ஒரு குருவால் மாத்திரமும் நட த்தப்பெறுமாகில் அந்த இடத்தை நோக்கிச்சென்று அந்தக் குருவா னவர் கொண்டாடும் சம்ஸ்காரத்தை ஆவலுடன் பார்க்கப்போகின் றவர் பலராவார்கள் அல்லவா? ஆனால் இப்போது பல குருக்களால் பல இடங்களிலும், உலகமெங்கும் கிறிஸ்துவானவர் தம்மை உலக ரக்ஷகத்திற்காகத் தியாகம் செய்த அந்த உயர்வான லீலையானது நடத்தப்படுகின்றமையால், ஜனங்கள் அதின்மேல் சிரத்தை பக்தி குன்றியிருக்கின்றது.

இயேசுவே போற்றி! (ஜனங்கள் என்ற) ஆடு மேய்ப்போன் போ ற்றி! உம்முடைய திவ்விய சரீரத்தையும், உம்முடைய இரத்தத்தை யும் எங்கள் உரிய இடம் பெயர்ந்து அங்குமிங்கும் தவிக்கின்ற ஏழை ளாகிய நாங்கள் உண்டு உய்யுமாறு தியாகம் செய்தீர்.

"என்னிடம் வாருங்கள்! வருந்துகின்ற மானிடர்காள்! சுமை தூக்கி அழுந்துகின்ற மானிடர்காள்! சரிந்தநிலை கொடுக்கிறேன்." என்ற உம்முடைய அரியவாக்கினால் உம்முடைய ஞான சம்ஸ்கார த்தின் பரம இரகசியத்தை உணரும்படி அழைக்கின்றீர்.

---

*"வன்பராய் முருடொக்குமென்சிந்தை மரக்க
ணென்செவி யிரும்பினு வலிது...." (மாணிக்கவாசகம்.)

(இன்னும் வரும்.)

ஆத்மநாதன்.




# குவாலியர்

அல்லது

## ஸிந்தியாராஜ்யம்.

ஆனால் 'தன்வினையே தன்னைச் சுடும்' என்பதுபோல, ஜென்கோஜி நெடுங்காலமிருக்கவில்லை. இவன்செய்த அக்கிரமத்துக்குத் தெய்வமும் தர்மமும் சம்மதிக்கவில்லை. போலும்! 1843-ல் பிப்ரவரிமாதத்தில் இவன் இறந்துவிட்டான்.

இவனுக்கும் பிள்ளையில்லாமற் போகவே, இவனுடைய மனைவியான தாராபாய் அவர்கள் உறவினனொருவனை ஹநுமந்தராவ் என்பவனைச்சுவீகாரம் செய்துகொண்டாள். அவனும் ஜெயாஜிராவ் என்னும் பேருடன் பட்டத்

துக்கு வந்து சிங்காதனமேறினான்: ஆனால், இவனுக்கு வயது ஒன்பதுகூட ஆகவில்லையானபடியால், பிரிடிஷ் கவர்ன்மெண்டார் ஜெங்கோஜியின் மாமனான மாமா ஸாகேப் என்பவரை மந்திரியாக்கினார். அவரும் ஆண்டு வந்தபோது தாராபாய் தன்னுடைய அதிகாரம் செல்லாமற்போகவே, சிலகலகங்கள் செய்யவாரம்பித்தாள். மாமா ஸாகேப் வேலையை விட்டுவிட்டார். உடனே தனக்கு இஷ்டமானவனொருவனை தாராபாய் மந்திரியாக்கினதும், இந்த சமாசாரம் கவர்னர் ஜனரலுக்கு எட்ட, அவர் உடனே ரெஸிடெண்டைத் திரும்பிவரும்படி சொல்லினர். ஆனால் கலகமாத்திரம் அடங்காமலிருந்தது. போர்வீரர்களும் கலகத்துக்கு ஆரம்பித்துவிட்டார். ராஜ்யத்துக்கே அழிவு வரும்போலிருந்ததைக் கண்ட கவர்னர் ஜனரல், தலையிடவேண்டியது அவசியமெனக் கொண்டு, ராணிக்கும் மற்றையோர்க்கும் ராஜ்யத்திலுள்ள கலகத்தையுடனே யடக்கவேண்டுமென்றும், அப்படியல்லாமல் போனால் அதனால் வரும் தீமைகள் கணக்கில்லாதனவென்றும் அறிவித்தார். ஈதெல்லாம் செவிடன் காதில் சொல்வதுபோலிருந்ததைக்கண்ட எல்லன்பரோ பிரபு தாமே நேராகவே குவாலியருக்கு வந்து கலகத்தையடக்க முயன்றனர். தான் ஏற்படுத்திய மந்திரியை ஆங்கிலேயர் வசம் ஒப்பிவித்த பிறகும் கலகம் முழுவதும் அடங்கிய பிறகும்தான் ஆங்கிலப்படைகள் ஸிந்தியா ராஜ்யத்தைவிட்டு நீக்கப்படுமென்பதை யறிந்த மகாராஷ்டிர பிரபுக்கள், ஆங்கிலப்படை சம்பல் நதியைத்தாண்டி ஸிந்தியா நாட்டில் கால்வைத்தால் உடனே மகாராஷ்டிரப் பண்டைனர் சண்டைசெய்ய வருவார்களென்று ஒரு கடிதம் அனுப்பினார்கள். இதற்கு இணங்கி, கவர்னர் ஜனரலும், சமாதானத்துக்கு ஒருநாள் நிச்சயப்படுத்திக்கொண்டு அந்நாளில் இருதிறத்தாரும் கூடிப்பேசவேண்டு

மென்றும், இதன்படி நடவாவிட்டால் சண்டையாரம்பிக்கப்படும் என்றும் ஒரு சமாசாரம் சொல்லியனுப்பினர். குறித்த நாள் வந்தது. ஆனால் மகாராஷ்டிர தூதன் ஒருவனும் வரவில்லை. உடனே சண்டையாரம்பிக்க ஆங்கிலப் படை ஸிந்தியா ராஜ்யத்துக்குள் வந்துவிட்டது. நடுநடுங்கிய தாராபாய் உடனே ஒருவனை சமாதானஞ் செய்ய வனுப்பினள். அவனும் ஏதோ சமாதானம் பேசுபவன் போல் பேசித்திரும்பிவந்ததும், அவனே சண்டைக்கு முதன் முதல் ஆரம்பித்தான். சமாதானப்பேச்சு முற்றிலும் முடியாமற்போகவே, 1843வது டிசம்பர் 29உ ஸர் ஹியூ காப் (Sri Hugh Gough) என்பவர் தமது சேனையைச் சண்டைக்கு நடத்தினர். சங்கதியை வளர்த்துவானேன்? மகராஜபூர், பன்னியார் என்னுமிடங்களில் நடந்த சண்டைகளில் மகாராஷ்டிரர்கள் அருமையாய்ச் சண்டை செய்தபோதிலும் தோற்றுப்போய் விட்டனர். ஆங்கிலேயர் தோற்றுப் போனவர்களைத் துரத்தத்தொடங்கினர். 'தலைமேலடித்தால் தன்னிலைபோகும்' என்பதுபோல, இந்தத் துன்பங்களைக் கண்டு தாராபாயும் மற்றையோரும் சமாதானத்துக்கு உடன்பட்டனர். அதன்படி மகாராஜாவுக்குத் தகுந்த பருவம் வரும் வரையில், ஒரு சபையார் ரெஸிடெண்டின் கீழிருந்து ஆளவேண்டுமென்றும், மகாராஷ்டிர சேனையைக் குறைத்துவிட வேண்டுமென்றும், ஆங்கிலப் படையை வைத்துப் போஷிக்கவேண்டுமென்றும், வருஷமொன்றுக்கு பதினெட்டு லக்ஷரூபாய் ஸிந்தியா ஆங்கிலேயருக்குக் கப்பங்கட்ட வேண்டுமென்றும், தாராபாய் ராஜ்யவிஷயங்களில் தலையிட்டுக்கொள்ளாமல் பணம் பெற்றுக்கொண்டு தனியாய்ப்போய்விட வேண்டுமென்றும் ஏற்படுத்திவிட்டு, கவர்னர் ஜனரல் ஊருக்குத் திரும்பிப்போய்விட்டார்.

1854-ல் மகாராஜா ஜெயாஜிராவுக்குத் தகுந்த பருவம்

வந்தபடியால் அவருக்கு சர்வாதிகாரத்தையும் பிரிடிஷ் கவர்ன்மெண்டார் கொடுத்துவிட்டனர். அவருடைய நல்ல அரசாக்ஷிக்கு அறிகுறியாய் அவர் தேர்ந்தெடுத்த மந்திரியே நின்றூர். குவாலியரிலேயே பிறந்து வளர்ந்த மகாராஷ்டிரப் பிராம்மணரான ஸ்ரீ தினகரராவ் (பிற்பாடு ராஜா ஸர் தினகரராவ்) மந்திரியானூர். ஆனதும், மிகுந்த சிரத்தை யெடுத்துக்கொண்டு ராஜ்பாரம் வகிக்கத்தொடங்கி, மகாராஜா தம்மிடம் வைத்திருந்த நம்பிக்கையைப் பூர்த்தி செய்தார். இரண்டுவருஷங்களுக்குள் ராஜ்யத்தில் சீர்திருத்தமுண்டாயிற்று. கொடியவரிகளும் அதிகவரிகளும் எடுபட்டன. அநேகபாதைகள் ஏற்பட்டன. வித்தை விருத்தியாக வளம் விருத்தியாயிற்று. நாட்டில் செல்வமும் வளர்ந்தது. வளர்ந்தும் இவருக்குக்கூட கவலை ஜாஸ்தியாயிற்று. 1857-ல் சிப்பாய்க் *கலகமுண்டாயிற்று.

* இந்தக் கலகத்துக்குக் காரணங்கள் பல; அவைகளில் முக்கியமானவைகளாவன:— (1) 1856-ல் கவர்னமெண்டார் சயின்யத்தில் சேரும் ஒவ்வொருவரையும் எந்தவிடத்துக்குப் போகச்சொன்னுலும் தடையின்றிப் போகவேண்டுமென்று ஒருவித நிபந்தனைக்குள்ளாக்கியே வேலை கொடுத்தனர். (2) வார்ஸில்லாமலும், ஆளத் தெரியாமலுமிருந்த ராஜ்யங்களை ஆங்கிலேயர் தங்கள் நாட்டுடன் சேர்த்துக்கொண்டது, அனேக குறுநில மன்னருக்கும் பிரபுக்களுக்கும் வருத்தத்துக்கு இடமாயிருந்ததுமன்றி அவர்களனைவரும் ஆங்கிலேயருடைய வார்த்தையில் நம்பிக்கை வைக்கச் சந்தேகப்பட்டனர். இதனுலும் ஜனங்களுக்கு அதிருப்தி யதிகரித்தது. (3) ஹிந்துக்களையும் மகம்மதியர்களையும் பலவந்தமாகக் கிறிஸ்தவர்களாக்கப் போகிறூர்களென்று ஒரு பெரிய வதந்தி யுலாவிற்று. இந்த வதந்திக்கு கவர்ன்மெண்டாரும் சம்மதித்தார்களென்றும் நம்பினூர்கள். இதில் உண்மை கொஞ்சமேனுமில்லையாயினும், எளிதில் நம்பக்கூடிய இந்திய மகம்மதிய சிப்பாய்கள் இதை உண்மையெனவே நம்பினர். தங்கள் தங்களுடைய மதாசாரங்களைக் கைவிடவேண்டியதென்று நம்பியவுடன் சிப்பாய்களுக்குக் கோபம் அதிகரித்துவிட்

குவாலியரிலிருந்த சயின்யமும் கலகக்காரருடன் சேர்ந்து அட்டூழியங்கள் செய்யத் தலைப்பட்டது. ஸிந்தியாவின் சயின்யமும் இதனுடன் சேர்ந்ததுமன்றி, ஸிந்தியாவையும் இதில் சம்பந்தபப்டும்படி கேட்டுக்கொண்டது. அதிர்ஷ்டவசத்தினால் ஸிந்தியா அவர்களுடன் சேராமல் ஆங்கிலேயரோடு சேர்ந்து, கலகத்தையடக்கத் தன்னாலானவரையில் உதவிசெய்தான்.

கடைசியில் கலகக்காரர்களில் ஒருவனான தாந்தியா தோபி (Tantia Topi) என்பவன், தன்னுடைய சேனையையெல்லாம் திரட்டிக்கொண்டு குவாலியர் கோட்டையைத் தாக்க வந்தபோது, இங்கேயே இருந்தால் மோசம் வருமென்றெண்ணி, மந்திரியாக ராஜா ஸர் தினகரராவுடன் ஜெயாஜி ஸிங் ஸிந்தியா குவாலியரை விட்டு விட்டு, ஆக்ராவுக்குச் சென்று ஆங்கிலேயவரணின் கீழ்த்தங்கினான். 1858-ல் பம்பாயிலிருந்து புறப்பட்ட இரண்டு ராணுவப்படைகள் குவாலியரையடைந்து மிகுந்த தைரியத்தோடு சண்டை செய்து, அங்கு லக்ஷ்மிபாய் என்ற ஜான்ஸி ராணியும் தாந்தியா தோபியும் சேர்த்து வைத்துக்கொண்டிருந்த

---

டது. இதோடு யோகிகளும் பக்கிரிகளும் பலவிதமாக தூர்ப்போதனை செய்துகொண்டு வந்தனர். வேறு சிலர் இவ்வாறு உண்டாகும் கலகத்தில் கொள்ளையடிக்கத் தகுந்த சமயம் வாய்க்குமென்று நம்பி, இவர்களை மேன்மேலும் தூண்டிவிட்டனர். இந்தியா முழுவதிலும் இந்த விஷயம் காட்டுத் தீ பரவுவதுபோல் பரவத் தலைப்பட்டது. ராஜ்யத்தையிழந்த மொகல் சக்கரவர்த்தி, அவன் பிள்ளைகள், கடைசி பேஷ்வாவான பாஜிராவின் சுவீகாரப் புதல்வனான நானா ஸாகேப் என்கிற தோண்டுபெந்து, ஔடு தேசத்து ராணி, ஜான்ஸி தேசத்து ராணி இவர்களெல்லோரும் அந்தந்தப் பிரதேசங்களில் கலகத்தை விருத்திசெய்து கலகக்காரர்களுக்கு உதவிசெய்து தலைவர்களாய் நின்றனர். இவர்களுடைய கதியெல்லாம் நமக்கு நன்றாய்த் தெரியும்.

சேனையைநிர்மூலப்படுத்திவிட்டன. கலகக்காரர்கள் கைகளி லிருந்த யுத்தத்தளவாடங்களெல்லாம் ஸ்ரீ ஹியூரோஸ் கைக்கு வந்துவிட்டன. ஆனால் *ஜான்ஸி ராணியின்னொரு

---

* ஜான்ஸி ராணி:—ஜான்ஸி தேசமானது பண்டில்கண்டுக்கு வடமேற்கிலுள்ளது. ஒருகாலத்தில் 1568 சதுர மைல் பரப்பளவு உள்ளதாகி, சுமார் வருஷம் 20 லக்ஷ ரூபாய் வரும்படியாயிருந்தது. 1817-ல் பேஷ்வா அதிகாரமில்லாமற் போனதும், இந்த நாடு ஆங்கி லேயருக்குக் கீழ்ப்பட்டுவிட்டது. அதை யாண்ட கடைசி யரசனான கங்காதரராவ் என்பவன் 1838-ல் குழந்தையில்லாமல் இறந்தான். இறக்குமுன்னமே, தன்னுறவினனொருவனான ஆனந்தராவ் என்பவ னைச் சுவீகாரஞ் செய்துகொண்டனன். இப்படிச் செய்துகொண் டதை யங்கீகரிக்கும்படி, ஆங்கிலேயரைக் கேட்க, அப்போது கவர் னர் ஜெனரலாயிருந்த டல்ஹௌஸிபிரபு (Lord Dalhousie) ஆங்கி லேய ராஜ்யத்தை விருத்தியாக்குவதிலேயே நோக்குடையவராய் இருந்தபடியால் பஞ்சாப், பேரார் ஸதாரா முதலிய ராஜ்யங்களைச் சேர்த்துக்கொண்டதுபோல, இந்த ஜான்ஸியையும் சேர்த்துக்கொ ள்ள நிச்சயித்தனர். உடனே யவர் ரெஸிடெண்டுக்கு இறந்து போன கங்காதரராவின் மனைவியான லக்ஷ்மிபாயின் வசமிருந்த ஜான்ஸீ கோட்டையை வாங்கிக்கொள்ளும்படி சொல்ல, ரெஸி டெண்டு கோட்டையைக் கேட்டார். இதைக் கேட்டதும், ராணிக் குக்கோபம் பிறந்து, என்னுடைய உயிரைக் கொடுத்தாலுங் கொடுப் பேன் என்னுடைய கோட்டையை ஒருநாளுங் கொடுக்கமாட் டேன் என்று பதிலனுப்பினாள். உடனே பலாத்காரமாய் அந்த ராஜ்யம் ஆங்கிலேய ராஜ்யத்துடன் சேர்க்கப்பட்டது. ஆகவே 1857-ல் கலகம் ஆரம்பித்ததும் கோபத்தினால்பொங்கிய லக்ஷ்மிபாய் கலகக்காரர்களுடன் சேர்ந்து, தன் பழியைத் தீர்த்துக்கொள்ள நிச் சயித்தாள். 1858ளு ஜூலைமீ 17-வ குவாலியருக்கருகிலுள்ள மைதானத்தில், ஸர் ஹியூ ரோஸ் என்பவருக்கு விரோதமாக லக்ஷ்மி பாய் சண்டைக்கு வந்தாள். இவளும் இவள் தங்கை யொருத்தியும் ஆணுடை பூண்டு யுத்த அங்கி தரித்து உன்னதமான குதிரைகளின் மீதேறிச் சண்டையில் வந்து, அஞ்சாமல் ஆயுதமெடுத்தது என்ன வீரத்தனம்! இங்கிலீஷ்ப் படைகளினின்று வரும் குண்டு மழையி னால் இவள் இறந்தனள். உடனே இவளுடையசவத்தை அங்கேயே நெருப்பு மூட்டி இவளைச் சேர்ந்தவர்களே கொளுத்திவிட்டனர்.

விசை சண்டைசெய்து தன்னுடைய கோட்டையைப் பா துகாக்கும்படி பிரயாசைப்பட்டுக் குவாலியருக் கருகிலுள்ள மைதானத்தில் நடந்த சண்டையில் மிகுந்த வீரத்தனமாய்ப் போர்புரிந்து இறந்தாள். குவாலியர் இங்கிலீஷ்க்காரருக்கு வர, அதையவர் ஜெயாஜிராவ் ஸிந்தியாவுக்குக் கொடுத்துவிட்டனர். கலகத்தில் செய்த உதவிக்கு அறிகுறியாக ஸிந்தியாவுக்கு அவன் நாட்டைச் சுற்றியுள்ள பாகங்களில் வருஷமொன்றுக்கு மூன்று லட்சரூபாய் வரும்படியான பாகங்களை ஆங்கிலேயர் கொடுத்தனர். ஆனால் குவாலியர் கோட்டையையும் மோராரையும் ஆங்கிலேயரே வைத்துக்கொண்டனர். ஸிந்தியா கட்டவேண்டிய கப்பத் தொகையும் கொஞ்சம் குறைக்கப்பட்டது. கலகத்தில் கலந்து கான்பூரிலிருந்த ஆங்கிலேயரைக் கொலை செய்ததற்காக தாந்தியா தோபியைப் பிடித்துக் கொலைசெய்துவிட்டனர். இவ்வாறாக, வீரலக்ஷிமிபாயின் துணைவனாயிருந்த தாந்தியா தோபி சாதாரணமான குற்றஞ் செய்தவனைப் போலக் கொலைக் களத்தி லிறக்கவும், லக்ஷிமிபாய் அமர்க்களத்தில் சண்டை செய்து வீரசுவர்க்க மடையவும் நேர்ந்தது அவரவர் விதியேதவிர வேறல்ல.

கலகமடங்கியதும், ஸிந்தியாவுக்கு ஜி. ஸி. எஸ். ஐ. பட்டம் கொடுக்கப்பட்டது. மேலும், அவருக்குப் புத்திர சந்தானமில்லாமற் போகும்பக்ஷத்தில், சாஸ்திரவிதிப்படி சுவீகாரஞ் செய்துகொள்ளவும் அனுமதி கொடுத்தனர். இவ்வாறாக, வெளிக்கு மிகவும் அன்யோன்யமாயிருந்த கவர்னர் ஜனரல் ஸிந்தியாவின் மேல் ஒரு விஷயத்தில் சந்தேகப்பட்டனர். அதாவது, 'அமர் கலகக்காரனாகிய நானா சாகேபைத் தன்னூரில் வைத்துக்கொண்டிருக்கிறா' னென்பது தான். ஆனபடியால் ஆங்கிலேயருக்கும் ஸிந்தியாவுக்குமுள்ள பாந்தவியம் சரியாகவிருக்கவில்லை. போராக்

குறைக்கு, ஸிந்தியா நாஞசாமேபுக்கு இரகசியமாய் உதவி செய்தானென்றும் வதந்தி பிறந்தது. ஆனால் உண்மையில் இப்படிப்பட்ட சங்கதிகள் ஒன்றும் நடந்ததாகத் தெரிய வில்லை. தம்முடைய பேருக்கு ஓர் கெடுதி உண்டானமை யின் அதைக் காப்பாற்றும்பொருட்டு, ஸிந்தியா நாஞசாகே பைப்போன்ற ஒருவன் ஒற்றைக் கண்ணுடையவன் வரக் கண்டு, அவனை நாஞவெனவே நம்பி ஆங்கிலேயரிடத்தில் கொடுத்துவிட்டான். ஆங்கிலேயரும் அவனைப் பரிசீலனை செய்து அவன் யாரோ அன்னியனென்று துரத்திவிட்டார்.

உபகாரத்தை மறவாதவரான ஜெயாஜிராவ் ஸிந்தியா தம்முடைய மந்திரியான ராஜா ஸர் தினகரராவுக்கு சில கிராமங்களை ஜாகீராகக் கொடுத்துவிட்டனர். ஆனால் இந்த இருவரும் நெடுங்காலம் தோழராக வரவில்லை. வஞ்சனை செய்பவர் பலர் மகாராஜாவிடத்தில் தினகரராவைப்பற்றிப் பழிகூறத் தொடங்கினதால், உடனே தினகரர் வேலையை விட்டு விட்டனர். இப்போதுகூட மகாராஜா மந்திரிக்குச் சில நிலம் மானியம் விட்டனர். 1864-ல் மகாராஜாவின் பாட்டியாரான பைஜாபாய் இறந்ததும் அவளுக்கு கொடுக் கப்பபடும் தொகை நின்று போயிற்று. 1875-ல் பரோடா தேசாதிபரான மல்ஹார் ராவ் ஹோல்கார் ரெஸிடெண்டை விஷமிட்டுக் கொல்லச் சூழ்ச்சி செய்தனரென வந்திருந்த வோர் வழக்கைத் தீர்ப்பதற்காக மூன்று ஆங்கிலேயரோடு ஜெயாஜிராவ் ஸிந்தியாவும், அவருடைய பூர்வ மந்த்ரியான ராஜா ஸ்ரீ தினகரரும், ஜெயபூரை ஆண்ட ராமஸிங்கும் வாதம் தீர்க்க வமர்ந்தனர். சுதேசிகளாகிய விம்மூவரும் மல்ஹார் ராவ் குற்றவாளி யல்லரெனத் தீர்மானித்தும், பய னில்லாமற் போயிற்று. *அதேவருஷக் கடைசியில், (இப்

*இதை விரிவாய் முன்பொரு பகுதியிற் கூறினோம். "பரோடா" வைப் பார்க்கவும்.

போது நம்மையாளும் மாக்ஷிமைதங்கிய எட்வர்ட் சக்கிரவர்த்தியார்) வேல்ஸ் இளவரசர் இந்தியாவுக்கு வந்தபோது அவருக்கு வந்தனம் அளிக்க ஸிந்தியா கல்கத்தாவுக்குச் சென்றனர். இளவரசரும், திரும்பிக் குவாலியருக்கு வந்து ஸிந்தியாவை மரியாதையாய்க் கொண்டாடினர்.

1877-ல் மகாராணியார் சக்கரவர்த்தியாரானபோது அதற்காக டில்லியில் கூட்டப்பட்ட சபைக்கு ஸிந்தியா சென்றிருந்தனர். அப்போது அவருக்கு இருபத்தொரு குண்டு மரியாதையும், உயர்ந்த சேணங்கள் பூட்டிய உத்தம அசுவமொன்றும், ஆங்கிலேய வரசாட்சியின் அடையாளப் படமெழுதிய கொடியொன்றும், ஹிலாமுஸ் ஸல்தானத் (Commander-in Chief of the British Empire) என்னும் பட்டமும் கொடுக்கப்பட்டது.

1875-ல் ராஜ பிரதிநிதியாகிய லிட்டன் பிரபு (Lord Lytton) ஸிந்தியாவுக்கு குவாலியர் கோட்டையையும் மோரரரையும் கொடுத்துவிட்டனர் அவருடைய மாறாத நடத்தைக்கு அறிகுறியாக. 1886-ஞு ஜூன்மீ 20வ சாயங்காலம், மகாராஜா ஜெயாஜிராவ் ஸிந்தியா அவருடைய 52வது வயதில் தேகவியோகமாயினர். அவருடைய குழந்தையான பத்துவயதுப்பாலர் மாதவராவ் என்பவர் உடனே ராஜ்யத்துக்கு உடையவராகிச் சிங்காதனமேறினர்.

அவர் மைனராயிருக்கும் வரையில் ராஜ்யத்தையாளவோர் பிரதிநிதிச் சபை (Council of Regency) ஏற்படுத்தப்பட்டது. அதற்கு அக்கிராசனதிபதியாயும், ராஜ்யத்துக்கு மந்திரியாயுமிருந்த ராவ் ராஜா ஸர் கணபதிராவ் காட்கே, கே. ஸி. எஸ். ஐ., முக்கிய விஷயங்களிலெல்லாம் ரெசிடெண்டின் அனுமதி பெற்றுத்தான் செய்ய வேண்டியிருந்தது. குற்றங்கள் நடப்பது நிரம்பவும் சகஜமாயிருந்தமையின் அதனை உடனே அடக்கவேண்டுமெனப்

பிரயாசைப்பட்டு அடக்கினார்கள். தீவர்த்திக் கொள்ளை யென்னும் பெருங்கொள்ளையும் பரவி வந்ததைத் தடுக்க எடுத்துக்கொண்ட விடாமுயற்சிக்கு அளவில்லை.

1887-ல் மகாராணியின் ஜூபிலியின்போது மகாராஜா தம்முடைய நீதி வழுவா நெறிமுறையையும், அன்பையும் காட்டி அந்த நாளைக் கொண்டாடினர். பட்டணத்தை நன்றாயலங்கரித்து ராஜப் பிரதிநிதிக்குத் தகுந்த மரியாதை செய்தனர். பஞ்சத்தினால் ஏழை ஜனங்கள் வரி கொடுக்க மாட்டாது தவித்ததையுணர்ந்த மகாராஜா 81லக்ஷ ரூபாய் கிஸ்தியைத் தள்ளிக்கொடுத்துவிட்டனர். போலீஸ் உத்தியோகஸ்தர்களுக்கெல்லாம் சம்பளம் அதிகரிக்கப்பட்டது. வம்பு வார்த்தைக்கிடமான வரிகளையெல்லாம் எடுத்துவிட்டார். கடனுக்காகச் சிறையிலிருந்தவரையெல்லாம் விடுதலை செய்து, அவர்கள் பட்ட கடனை ராஜ்ய பொக்கிஷத்திலிருந்து கொடுத்துவிடும்படி ஆக்ஞாபித்தார். குற்றவாளிகளாய்ச் சிறையிலிருந்தவர்களில் யோக்கியர்களாய் நடந்தவர்களையெல்லாம் விடுதலை செய்துவிட்டார்.

அதே வருஷத்தில், அரண்மனைப் பொக்கிஷத்தில் ஆறு கோடி ரூபாய்க்கு மேலிருந்தபடியால் மூன்றரைக்கோடி ரூபாய் பிரிடிஷ் கவர்ன்மெண்டாருக்கு வருஷமொன்றுக்கு நூற்றுக்கு 4 ரூ. வீதம் வட்டியுடன் கடன் கொடுக்கப்பட்டது. வருஷமிருமுறை இந்தக் கடனின் வட்டியை ஆக்ரா பொக்கிஷத்திலிருந்து ஸிந்தியாவுக்குக் கொடுத்து வருவதாகவும், மகாராஜா ராஜ்யபாரத்தைத் தாமே வகிக்கத் தொடங்கிய மறு வருஷம் முதற்கொண்டு வருஷமொன்றுக்குப் பனிரெண்டு லக்ஷ ரூபாயாகக் கொடுத்து இந்தக் கடனைத் தீர்த்துவிடுவதாகவும் உடன்பாடாயிற்று.

1888-ல் சபையின் அக்கிராசனாதிபதியான ராவ் ராஜா கணபதி ராவ் தேகவியோகமாகவும், மகாராஜாவின் தாயார்

ரீஜெண்டாக வந்தனர். வேறு ஒருவரை இந்தச் சபைக்குத் தலைவராக நியமித்து, ராணி ராஜ்ய விஷயத்தில் தலையிடக் கூடாதென்று ஏற்படுத்தினர். 1891-ஆம் ஜனவரி மாதத்தில், ஸதாரா ராஜவம்சத்து ஓர் பெண்மணியை மகாராஜா மாதவராவுக்கு விவாகஞ் செய்வித்தனர். 1894-ல் சர்வாதிகாரத்தையும் மகாராஜாவுக்குக் கொடுக்க அவரே யின்னும் நன்மையுடனாண்டுவருகின்றனர்.

சென்ற 1905 வருஷம் (டிஸம்பர்) வேல்ஸ் இளவரசரும் இளவரசியாரும் இந்தியாவுக்கு விஜயம் செய்தபோது குவாலியருக்கும் வந்திருந்து மகாராஜா ஸிந்தியாவை மிகவும் பெருமைப் படுத்தினர். விருந்தினர்கள் யானைகளின் மேலேற்றி ஊர்கோலஞ் செய்து அழைத்துவரப்பட்டனர். இந்த சந்தர்ப்பத்தில் வேல்ஸ் இளவரசர் குவாலியரில் விக்டோரியா மிமோரியல் மார்க்கட்டின் அஸ்திவாரக் கல்லை நாட்டினர்.

குவாலியர் மகாராஜாவுக்கு அவருடைய ராஜ்யத்தில் சகலவித அதிகாரமும் மரண தண்டனை விதிக்கும் சக்தியும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. மகாராஜா ஸ்ரீ மாதவராவ் ஸிந்தியாவுக்குத் தம் நாட்டுக்குள் 21 குண்டு மரியாதையும் வெளி நாடுகளில் 19 குண்டு மரியாதையும் உண்டு.

வாசஸ்தானம் குவாலியர்—மத்திய இந்தியா.

ஸ்ரீ சைலர்.



# சக்திமதி.



மார்த்தாண்ட சிவன் என்னும் பிராமணன், அழகே யுருவெடுத்துவந்த தனையவளான சக்திமதி என்னும் அணங்கரசைத் தன் மனைவியாகப் பெற்றிருந்தும், வினையின் வலியால், கனகாம்புஜம் என்னும்பெயருடைய அழகிருந்த ஊரிலேயே இருந்தறியாளான தாசியோடு ரமித்துவந்தான். அழகில் கேடு உடையாளாயினும் இனிய பேச்சுடையள். அவளது மிருது பாஷையில் மயங்கினவனாய் இந்தப் பிராமணன் உணவுக் காலந்தவிர மற்றைக்காலங்களில் தனது வீட்டிற்கே வாராது அந்த வேசி வீட்டோடு இருந்தான். நாளேற இவன் தனது நித்ய கர்

மங்களையுங்கூட செய்யாதவனாய், வருஷந்தோறும் வரும் சிராத்தாதி கர்மங்களையும் கைவிடவே, அவனது பந்துக்கள் அவனால் தமக்குண்டாகும் உலகநிந்தையால், அவனை ஊரைவிட்டுப் பலமுயற்சியால் விலக்கினார்கள். தனது உறவினரின் பலவிதக் கேட்டால் அயலூருக்குக் குடிபோக யத்தனித்திருக்கும் தனது கணவனது உள்ளக்கருத்தை யெங்ஙனமோ தெரிந்துகொண்ட சக்திமதி, அவன் உணவுக்கென்று வீட்டுக்கு வந்தபோது, எங்குச் சென்றாலும் தன்னையும் அழைத்துச் செல்லவேண்டுமென்றும், அவர் எக்காரியம் செய்யினும் அதனைத் தான் தடுப்பதில்லையென்றும், அவரிருவருக்கும் தன்னால் கூடிய வேலைகளைத் தான் செய்துவருவதாயும் சொல்லித் தன்னைக் கைவிடக் கூடாதென்று மன்றாடினாள். இவ்விஷயத்தைத் தன் ஆசை நாயகி கனகாம்புஜத்தினிடத்தில் சொல்லி, அந்த விப்பிராதமன் அவளது சம்மதியின்பேரில், மூவருமாய்த் தமக்குள்ள சொத்துக்களோடு வெளிப்புறப்பட்டனர். மார்க்கத்தில் நமது சக்திமதியைப் பலபடியும் ஆட்டிவைத்த விஷயத்தில் தாசி கனகாம்புஜத்தைப் பேயென்று சொல்லவும் நமக்கு வாய் கூசாது. இங்ஙனம் பல வூர்களையும் கடந்து அவர்கள் தமது சுற்றத்தாரது சம்பந்தம் எவ்விதத்திலும் இல்லாத மதுரைக்கு வந்து சேர்ந்தனர். அவ்வூரில் இரண்டு வீடுகளும் கொஞ்சம் நிலமும் விலைக்கு வாங்கிக்கொண்டு குடியிருந்தனர்.

தாசி கனகாம்புஜமும் தனக்கு அழகின்மையால் தன்னை யாரும் விரும்பாரென்று, தக்க வரும்படியிலலாத தன்னிடம் அன்பு பாராட்டாது தனது பந்துக்களும் தன்னை விலக்கி வைத்திருந்ததனால், தன்னை நேசித்த இந்த அந்தணனையே தனக்கு உரிய நாயகனாகக்கொண்டு, அவனது சொல்பு தனத்தை உடைகளும் நகைகளும் வாங்குவதனால் அழித்து தானும் கெட்டு அவனையும் சீரழிக்கக் கூடாது என்று எண்ணி, அவனது குடும்பத்தினது வரவு செலவுகளைத் தானே மேல்பார்த்துக்கொண்டு வந்தனள். பிராமணனும் தனக்கு எவ்விதத்திலும் சிரமம் காண்பியாது இன்பத்தையே கொடுத்துவந்த அவளிடத்தில் அன்பு அதிகப்பட, அவளுக்கு எந்த விதத்திலும் வயப்பட்டவனாயினன். பன்னிச்சொல்வதிற் பயனென்ன? இருவரும் உடல் பிரியினும் உயிர் பிரியாதிருக்கவேண்டுமென்று சத்தியமும் செய்துகொண்டனர். இவ்வன்பு, நாளடைவில் சக்தி

மதிக்குத் துன்பத்தையே விளைத்துக்கொண்டு வந்தது.

இவ்வூருக்கு வந்து சேர்ந்த சில மாதங்கட்குப் பின்னரே அவ்வூர்ப் பாண்டியனது உக்ரமான விரதம் சக்திமதி காதுக்கெட்டியது. அதாவது, "கட்டிய மனைவியைக் கண்கலங்க விடுத்து, பரஸ்த்ரீ கமனம் செய்யும் பாவிகளைத் தம்மூர்க் கண்ணகி கோயிலுக்குக் கொணர்ந்து அவரது ஆசை நாயகியரோடு பலிகொடுப்பது" என்றதோர் கொடிய விரதமே.

அப்போது ஒரு நாட் பகலில், சக்திமதி, தன் கணவனுக்கு உணவு அளித்து, அவன் வெளியேறும்போது நமஸ்கரித்தாள். அவன் என்ன காரணம் என்று கேட்க, ஒரு விஷயம் சொல்ல வேண்டுமென்று இருக்கிறேன். அதனைச் செவி சாய்க்கவேண்டும். இவ்வூர் அரசன் பரஸ்த்ரீகமனம் செய்பவரை அந்தப் பரஸ்த்ரீயோடு சிறை பிடித்து, இவ்வூர்க் கண்ணகி கோயிலுக்குப் பலி கொடுப்பது வழக்கமாம். இச்செயல் அப்பெண் தெய்வத்துக்குத் திருப்தியென்றும் அத்தெய்வத்தைத் தன்னூர்த் தெய்வமாகக்கொண்டாடும் இவ்வரசற்கு இது ஒரு விரதமென்றும் சொல்லுகிறார்கள். பந்துக்களால் துரத்தப்பட்டு வந்த நாம் இவ்வூரிலாவது பகையற்று வாழவேண்டும். அரசனே நமக்குப் பகைவனாய் விட்டால் நாம் தப்புவதெப்படி? நாளடைவில் தங்களது விஷயமும் தெரிந்துகொண்டு அதற்காகத் தங்கள்மேல் அரசர் கோபமுற்றவராகவும் இருக்கிறாராம். அதனால், தாம் காதலுடன் நேசித்துவரும் கனகாம்புஜத்தை விலக்கி விடுவதே மெத்தவும் நலமுள்ளதாகும். அது தங்கட்கு சம்மதமாக இராதென்று எண்ணுகிறேன். அப்படியாயின், வீட்டைவிட்டு வேற்றிடம் செல்லாது அவளையும் வீட்டிற்கே அழைத்துக்கொண்டு வந்து சுகமாய் இருக்கலாமே. அது எனக்கு யாதொரு கெடுதியையும் செய்யாது. அரசன் பகையும் ஒருவாறு நீங்கும். ஏனெனில், அரண்மனைச்சேவகர் வந்து வினவின், நாங்கள் இருவரும் இவர்க்கு மனைவியரேதாம் என்று சொல்லிப் பகையை நீக்கி விடுவோம். அல்லாது தனித்திருப்பின், வேவுகாரரால் அரசன் எங்ஙனமேனும் அறிந்துகொள்வர். பிறகு அரசனது விரதமே முடிந்துவிடும். இங்கு அவள் அபிப்பிராயத்துக்கு விரோதமாய் நான் நடந்தால்தான் அவள் வருந்திச் சண்டைக்கு வழிதேடுவாள். அப்படியன்றி அவளபிப்பிராயத்தை யநுசரித்தே எவ்விஷயத்தையும் செயவேன் என்ற

னள். இதனைச் செவியுற்ற தாசிலோலன், சிறிது நேரம் ஆலோசித்து, இருக்கட்டும் இதற்குப் பதில் இரவு வரும்போது சொல்கிறேன் என்று வெளியேகினள்.

இவ்விஷயத்தை அந்தணனால் கேள்விப்பட்ட கனகாம்புஜம் அதன் கருத்தை விரோதமாகக்கொண்டு, பிரியநண்பரே! இதுவரையில் உமது பத்நியை ஸாத்வி என்றே எண்ணியிருந்தேன். இன்றுதான் அவளுடைய அபிப்பிராயம் தெரியவந்தது. அவள் நம்மிருவரையும் கொல்வதற்குச் சூழ்ச்சி தேடிவிட்டாள். ஒரு பெண் சாதி தனது கணவனைக் கொல்ல உத்தேசித்தாளாயின், அவளுக்கு வேற்றுப்புருஷனுடைய ஸம்ஸர்க்கம் இருந்திருக்குமென்பதில் யாதொரு சந்தேஹமும் கிடையாது. நீர் அவளுக்குச் சொல்லி வந்தபடி இன்றிரவு நாம் இருவரும் அங்குச் செல்வின், உயிர் துறப்பது நிச்சயம் தான். அவள் தனது ஆசை நாயகனை மறைத்து வைத்திருந்து நம்மிருவரையும் நன்றாய் உபச்ரிப்பதுபோல் உபசரித்து நமது நித்திரையில் கொன்று விடப்போகிறாள். உமக்கு அவளிஷ்டப்படி நடக்கப் பிரியமிருந்தால் யாதொரு ஆக்ஷேபணையுமின்றிச் செல்லலாம். நான் ஒருபோதும் தடுப்பதில்லை. இதுவரையில் தான் உமக்கும் எனக்கும் தொடர்பிருந்தது. இனி நமது ஜாதி போல்தான் நாமிருவரும். என்னால் உமது குலமும் ஒழுக்கமும் பத்நியும் உறவினரும் உமக்குப் பகையாயிருப்பானேன்? இன்றுத் தந்தையோடும் நாளை மகனோடும் இன்பத்தில் உறவாடும் தாசி குலத்தில் நான் பிறந்திருப்பினும் இதுவரையும்மையே கணவனென்று நம்பியிருந்தேன். நீரும் யாதொரு வித்யாஸமுமின்றி உறவுகொண்டிருந்தீர். உமது பத்நியும் நாம் இருவரும் கீறிய கீற்றை மாறாது இருந்தனள். இன்று செய்த ஆலோசனையால் அவளிடம் எனக்கு சந்தேகம் தோன்றிவிட்டது. நம்மிருவரையுமாகிலும் அல்லது என்னையாகிலும் இன்றிரவு கொலை செய்ய உத்தேசித்துவிட்டாள். நம்மிருவரையும் அப்படிச் செய்ய உத்தேசித்திருப்பாளாகில், அவளுக்குஆசைநாயகன் வேறொருவன் இருப்பது ஸத்யம். என்னைமாத்திரமாகில், அவளுக்கு என்மேல்க்ஷாத்ரம் தோன்றியிருப்பதுண்மை. ஆதலால் நீர் என்னிடமேயாவது அவ்விடமேயாவது தங்கியிருந்தே வாழவேண்டும். என்னிடமிருந்தால் எந்த சூழ்ச்சியாலாவது அவளை உயிர் நீக்கவேண்டும். இல்லாவிடில் எனக்குத் திருப்தியி

ராது. உம்முடைய இஷ்டத்தைச் சொல்லும் என்று கேட்டனள்.

பிராமணனுக்குத் தனது பெண்சாதியின் உள்ளக்கருத்து நன்ருய்த்தெரியுமானாலும், தனக்குப் பெரிதும் இன்பத்தைத் தரும் அவ்வேசியின் யுக்தியும் நிஷ்ரோமும் பொருமையும் உட்கொண்ட அவ்வசனங்களால் கலக்கப்பட்டு சொல்கிருன்.

அந்தணன்.—கனகாம்புஜம்! நாம் இருவரும் செய்துகொண்டிருக்கும் ஸத்யத்திற்கு ஒருகாலும் நான் பின்னடையேன். உன்னையும் என்னையும் பிரிக்க, உயிரையும் உடலையும் பிரிக்கும் யமனாலும் முடியாது. அதனல் நீ வருந்தவேண்டாம். ஆயின்—

தாசி.—இதுவரையும் உங்களை நம்பித்தான் இருந்தேன். இன்று உமது பத்நினி கபடமாகச் சொன்ன வார்த்தையின் உண்மையை யுள்ளபடி யறியாது என்னிடம் வந்து சொன்னதனுலேயே உமக்கு அவளிடம் பிரியம் தோன்றியிருக்கிறது என்று ஏற்படுகிறது. இப்படி யவளிடம் அன்பு தோன்றிய வுமக்கு அவ்வன்பு வ்ருத்தியானல் என்னிடம் வெறுப்பும் பகைமையும் தோன்றும். அவையே என் உயிர்க்கு யமனுய் நிற்கும்.

அந்தணன்.—கனகா! இத்தனைநாள் என்னேடு பழகியும் என் குணத்தை நீ இன்னும் நன்ருய்க் கண்டுகொண்டாயில்லை. நான்தான் உனக்கு எவ்விதத்திலும் பாத்தியப்பட்டவனென்னும் உன் மனங்கோணும்படியாய் ஒரு காரியத்தையும் செய்யமாட்டேனென்றும் சொல்லியிருக்கிறேனே. ஸத்யம் செய்து கொடுத்தும் கூடவா உனக்கு நம்பிக்கையில்லை.

தாசி.—ஐயா! அவளிடம் உமக்கு அன்பு தோன்ருதவரையில் என் விஷயத்தில் நீரும் நல்லவர்தான். அந்த ஸத்யமும் நல்லதுதான். உலகத்தில் ஒரு மனிதனுக்குப் புதிதாய் ஒரு வஸ்துவினிடத்தில் பிரியம் தோன்றிவிட்டால் அதற்கு முன்னல் அவன் அன்பு வைத்திருந்த பொருளினிடத்தில் பிரியம் குறைந்துபோவது இயற்கைதானே; உடனே அப்பொருளை யவன் அநாதரிப்பானல்லவா? அதனல்தான் நான் உம்மிடம் சந்தேஹம் கொள்ளுகிறேன்.

அந்தணன்.—கண்மணி! என்னை முற்றிலும் நம்பு. நான் ஒருகாலும் ஸத்யம் தவறமாட்டேன். இன்னொருமுறை என்னிடம் சங்

தேஹங் கொண்டிருக்கிறதாகி நான் வருந்தச் சொல்லாதே. எனக்குத் தெய்வமும் குருவும் தாயும் தந்தையும் பத்நியும் மக்களும் எல்லாமும் நீயே. எனக்கு வேறு கதியில்லை. நீயும் பிரிந்தால் என் உயிரும் பிரிவது நிச்சயம். நீ என்ன சொன்னாலும் அப்படிச் செய்யக் காத்திருக்கிறேன். உனது மனம் நோகாமல் இருப்பதற்காக வீடு வாசல்களையும் உறவின் முன்றி யாரையும் பதியையும் கதியையும் விட்டுவந்து அயலூரில் உன்னைப் பிரிக்க எத்தனிப்பேனோ? அவ்வூரிலிருந்ததைக் காட்டிலும் இவ்வூரில் எனக்கு மிகுதியான இன்பத்தையே கொடுத்துக்கொண்டு வந்திருக்கிறாய். என் வீட்டுக்கணக்கு விஷயமனைத்தும் நீயே வைத்துக்கொண்டு எனக்கு யாதொரு சிரமமும் காட்டாது காப்பாற்றிக்கொண்டிருக்கிறாயே. இந்த நன்றியை, என்னுயிர் நீங்கினும் மறப்பேனா? அப்படியிருக்க என்மீது அடாத பழியேற்றுவது உனக்கு அழகன்று. ஆனால் ஒன்று சொல்லவேண்டுமென்று எண்ணியிருக்கிறேன்.

தாசி.—அதென்னே?

அந்தணன்.—கோபங்கொள்ளாது முற்றவும் கேட்பதானால் சொல்லத் துணிவேன்.

தாசி.—என்ன? உமது பெண்சாதியைப்பற்றியதோ அந்த விஷயம்?

அந்தணன்.—ஆம். அவள் குணத்தைப் பற்றிச் சொல்லவேண்டுமென்றுதான் எண்ணியிருக்கிறேன்.

தாசி.—அவள் குணத்தைப் பற்றி என்ன? முன்னே நல்லகுணமுடையவளாயிருந்தாள்.

அந்தணன்.—இப்போதும் அப்படியே தான். மாறுபாடில்லை.

தாசி.—அதனால்தான் உமக்கு அவளிடத்தில் ப்ரேமை அதிகப்பட்டது என்றுசொன்னேன்.

அந்தணன்.—அப்படியொன்றுமில்லை. அவள் முன்னிலும் அதிகமாய் நம்மிருவரிடத்திலும் அன்பும் ஆதரவும் கொண்டு நமக்கு நன்மையே எவ்விதத்திலும் தேடிக்கொண்டு வருகிறாள். இவ்வூர் அரசனது அரிய கட்டளையைத் தெரிந்துகொண்டு அதினின்றும் நாம் தப்புவதற்கும் மார்க்கம் சொல்லிக்கொடுத்தனளேயன்றி வேறில்லை. இது மிகவும் நியாயமென்பது உறுதி.

அப்படியல்லாமல் அவளுக்கு நம்மிடத்தில் பகைமைதோன்றி நம்மைக் கொல்லவேண்டுமென்ற எண்ணம் கொண்டிருந்தவளானால், அக்கொலைத் தொழிலானது நம்மிருவரையும் வீட்டுக் கழைத்துத் தான் ஆகவேண்டுமென்றது கட்டாயமில்லை. நாம் உண்பது குடிப்பது உடுப்பது படுப்பது ஆகிய அனைத்தும் அவள் கைக்கொண்டே இதுவரை நடந்துகொண்டுவருகின்றன. அவள் அப்படிக் கெட்ட எண்ணம் கொண்டிருந்தாளானால் இதுவரையில் நம்மை வைத்திருக்கமாட்டாள். அன்றி, வேற்றுப்புருஷனிடத்துக் காதல் கொண்டிருந்தால், என்னை வீட்டிலேயே வந்து இருக்கும்படி மன்றாடமாட்டாள். இந்த குணமுடைய பெண்கள் புருஷனை வீட்டிலிருந்து வெளியில் எங்கேனும் போக்க முயற்சி தேடுவார்களேயன்றி வீட்டுக்கழைக்கமாட்டார்கள். ஆதலால், நமக்கு ஸர்வவிஷயத்திலும் பணிவிடைசெய்துவரும் அவளைக் கைவிடாமல் வைத்து ஆதரிக்கவேண்டுவது நம்மிருவருடைய கடமையுமாகும். பிறகு உன்னிஷ்டப்படி நடக்கிறேன்.

தாசி.—சரிதான். பிராமணனுக்குப் பித்தந் தலைக்கேறிவிட்டது. அவளிடம் உமக்கு ஏற்பட்டிருக்கும் அன்பு இனி எவ்விதத்திலும் கலைக்கவொண்ணாது. அவள் குணம் எனக்கல்லவோ தெரியும்? 'பாம்பின்கால் பாம்பறியுமல்லாது வேறு யார் அறிவார்'. என்னவோ எனக்குத்தோன்றினதைச் சொன்னேன். உமது இஷ்டப்படி செய்யும். எனக்கு அவளைக் கூட்டிக்கொள்ளவும் அவளிருக்குமிடம் போகவும் இஷ்டமில்லை. என் உயிருக்கு அவள் தான் யமன் என்று எனக்குத் தோன்றினபிறகுங் கூட இன்னும் அவளுடன் நேசிப்பேனா? நீர் வேணுமென்றால் தாராளமாய்ச் செல்லும். நான் எக்கேட்டிற்காவது ஆளாகிறேன். விதிப்படி எல்லாம் நடக்கும். 'மரம் வைத்தவன் நீர் வார்ப்பான்'.

அந்தணன்.—கண்ணே! அப்படி உன்னை வெறுத்துக்கொள்ளாதே. என் அபிப்பிராயத்தைச் சொன்னேன். அந்தப்படி நடக்க உனக்கு இஷ்டமில்லாமல்போனால் வேண்டாமே. நான் தான் உன் மனதுப்படி யெல்லாம் நடக்கக் காத்திருக்கிறேனே.

தாசி.—இப்படி உன்னிஷ்டப்படி உன்னிஷ்டப்படி என்றுசொல்லிப்பாசாங்கு செய்யாதீர்கள். என்னிடம் நேசமாயிருப்பதாயின், அவளிடம் தாம் இன்று முதல் போகக்கூடாது. ஆகாரம் முதல் ஸகலமும் இங்கே தான் ஆகவேண்டியது.

அந்தணன்.—ஆஹா. அப்படியே செய்கிறேன். அவள் ஆகாரத்திற்கு என்ன செய்வாள்?

தாசி.—எப்படியாகிலும் செல்லட்டுமே. நமக்கென்ன?

அந்தணன்.—"பேயோடு பழகுறினும் பிரிவு அரிது" அப்படிப் பிரிந்தாலும் நம்மை எவ்விஷயத்திற்கும் எதிர்பார்த்திருக்கும் அவளுக்கு ஆகாரத்துக்குப் படியரிசியாவது கொடுத்தனுப்பவேண்டாமா?

தாசி.—உமக்கு எவ்வளவு சொன்னாலும் புத்தி ஸ்திரப்படவில்லை. இருக்கட்டும். இன்னும் சிறிது காலத்துக்கு படியனுப்பி வருவோம். நாம் செய்யும் சில பரீக்ஷைகளால் அவள் அயல் புருஷனோடு உறவுகொண்டிருப்பது வெளிப்பட்டால் அவன் பிறகு அனுப்பவேண்டாமல்லவா?

அந்தணன்.—அப்படி அது உண்மையாயின், நாமேன் அனுப்பப்போகிறோம்? நமக்கேன் தான் அவளுறவு?

தாசி.—இன்று முதல் அங்குச் செல்லக்கூடாது.

அந்தணன்.—அப்படியே.

என்று இவ்விதம் பேசிப்பிராமணனை வீட்டுக்குப்போகவிடாமல் அங்கேயே இருக்கச் செய்துவிட்டனள். அன்று இரவு வெகு நாழிகையாயும் கணவன் வராதிருக்கக் கண்டு சக்திமதி, வீட்டிலிருந்து ஒன்றுந் தோன்றாதவளாய், வாயிலில் வருவதும் கண்ணுக்கு எட்டியவரையில் பார்ப்பதும் வீட்டுக்குள் போவதும் தெய்வங்களைப் போற்றுவதும் புலம்புவதுமாய் இருந்தாள். ஐயோ! அவர் எப்படி யிருந்தாலும் போஜன வேளைக்காவது வீட்டிற்கு வருவாராயின், அதுவே எனக்குப் பேரின்பமாகும். ஏன் இன்னும் வரவில்லை? ஒருகால், பகலில் நான் அவரை வணங்கிச் சொன்ன விஷயம் அவருக்கு விரோதமாய்ப் பட்டிருக்குமோ? அதிலென்ன விரோதமான எண்ணம் தோன்றியிருக்கக்கூடுமே? ஒருகால் அவள் ஏதாகிலும் கலைத்திருப்பாளோ? இருக்காது. அப்படியிருக்காது. பாழும் நெஞ்சே! அப்படி நினைக்காதே. தாசிக் கூட்டத்துக்குள்

அவள் மிகவும் நல்லவள். அயலாரை வருத்தமாட்டாள். அப்படிக கெடுமதியுடையவளாயின், என் புருஷனை என் வீட்டுக்கு வரவிட்டிருப்பாளா? பணத்தை எவ்விதத்திலும் கிரஹிக்கப் பார்ப்பாளேயன்றி அப்பணத்தைக் காப்பாற்றவகை தேடாள். இவளோ தனக்கு யாதொருவிதமான டம்பமான ஆடையும் நகைகளும் வாங்கிக்கொள்ளச் சிறிதும் எண்ணாது, இக்குடும்பத்தின் வரவு செலவுகணக்கும் பணமும் இவரிடத்தில் இருந்தால் வீணில் செலவிடுவார் என்று எண்ணி, தானே எவ்வித எற்பாடுஞ் செய்கிறாள். ஆதலால் அவள் எந்தவிதத்திலும் நமக்குச் சொந்தமானவள்தான். அதில் யாதொரு தடையுமில்லை. பின்னை, என் பர்த்தா இன்று வரவில்லை? இன்று இருவரும் ஆகாரத்திற்கு என்ன செய்தார்கள்? அவள் பசி தாங்க மாட்டாள் என்று பரபரப்பாகத்தான் சாப்பிட்டு அவளுக்கும் எடுத்துச் செல்வரே. எங்கேனும் வேற்றூருக்குச் சென்றிருப்பார்களோ? அப்படியாயின், சொல்லாமல் போகமாட்டார்கள். ஏதோ அவஸர காரியமாகத்தான் சென்றிருக்கவேண்டும். இல்லாவிடின் வாராதிருக்கமாட்டார். எல்லாம் விடிந்த பிறகுதான் விளக்கமாகும் என்று தானும் உணவெடுத்துக்கொள்ளாமல் தெய்வங்களை தொழுதுகொண்டே நித்திரைபோய்விட்டாள்.

பொழுது விடிந்தது. சக்திமதி எழுந்திருந்து வீட்டுக்காரியங்களைப் பார்த்துக்கொண்டிருந்தாள். அப்போது ஒருவன் வந்து அம்மா! உமது பர்த்தா இனி இங்கு வரமாட்டாராம். உமக்கு மாத்திரம் படியரிசி அனுப்புவதாகவும் அதனைச் சமைத்து உண்டு இருக்கும்படியும் தமக்காக இனி எதிர்பார்த்திருக்க வேண்டாமென்றும் சொல்லிவரச் சொன்னார் என்றான்.

இதனைக்கேட்ட சக்திமதிக்கு புலனைந்தும் ஒடுங்கிப்போய், ஒன்றும் பேசத்தெரியாதவளாய் சித்திரம்போல் நின்றாள். பிறகு உட்சென்றாள். கீழ் வீழ்ந்தாள். புரண்டாள். அழுதாள். இனியவர் முகதரிசனமும் இல்லையா என்று ஏங்கினாள். கடவுளைப் போற்றினாள். அவரில்லாது எனக்கு உணவு எதற்காக என்று மனமறுகினாள். இனி உயிர்தான் நான் ஏன் வைத்திருக்கவேண்டும்? இன்றே உயிர் துறந்தோமானால், என்னால் அவ்விருவர்க்கும் எற்பட்டிருந்த கஷ்டங்கள் நிவர்த்தியாகும். ஆனால் துர்மரணமாகச் செத்தவர்கள்

பேயுருக்கொண்டு புலம்பித் தவிப்பாரென்றும் பெரியோர் சொல்லு கிருர்களே. அப்படி நாமே உயிர் விடுவதும் நீதியன்று. அன்றி யும், இன்று வந்து ஒருவன் சொல்லிப்போனது நம் புருஷரது நியமன்ந்தானே? அன்றிக்கபடமோ? கணவனிட்ட பணிவிடைக ளைச் செய்து அவர்க்கு நோயும் கேடும் வந்த காலத்து எவ்விதத்தி லும் உதவி செய்வதற்கென்றல்லவோ மனைவியர் அக்கினி முன் கை பிடிப்பது. ஒருவனை மணந்து குடும்ப வலைக்குள் அகப்பட்டவள் எப்போதும் அக்கணவனது நன்மையைக் கோரியும் அவன் தீமை செய்வனேல் அதனைப் பொறுத்தும அவரது ஆபத்துக்காலத்து உத வியும் தன்னுயிரைத் தந்தேனும் அவருயிரைக்காத்தும் வருவது குல மகளிர் அழகாகும். அப்படியிருக்க இச்சிறு கஷ்டத்துக்கு பயந்து புருஷரை அத்தாசியிடம் காட்டிக்கொடுத்து உயிர் துறப்பது தகுதி யன்று. அவர்க்கு என்னிடம் சிறிதும் அன்பில்லாவிடின், படியரிசி யனுப்புவதாகச் சொல்லியனுப்பக் காரணமில்லை. அந்தக் கஷ்டம் கனகாம்புஜத்தின் முயற்சியாகத்தான் இருக்கவேண்டும். கெடுமதி தோன்றிய இவள் இனி அவரையும் கெடுக்க நினைப்பாள். அப்படி யவர் கேடுறுங்காலத்து என்னையன்றி யார் அவருக்கு சமயம் அறி ந்து உதவி செய்வார்? அந்த தாசியினுல் அவர்க்குச் சென்றவிடமெல் லாம் பகையே விளைந்து கொண்டு வருகிறது. இவ்வூரிலோ அரச னுல் இவர்க்குச் சிறையீடு முன்னிலையிலேயே நிற்கிறது. தாசிகள் தாம் காதலித்த நாயகர் நிறைந்த சொத்துள்ளவராயிருக்கும் வரை கூடியிருந்து குலாவி, அவர் தீங்கில் அகப்பட்டுத் தயங்கினுல் அன் றே கைவிடுவர். அப்போது மனைவியை நினைந்து தானே தவிப்பார், அலறுவார். ஆதலால் எக்கேடு வந்தாலும் என்னுயிரைக் காத்து வைத்து அவர்க்கு துன்புற்ற காலத்தில், உதவி புரிய வேண்டும். ஆத்திரப்பட்டு உயிரிழக்கலாகாது. என்று இவ்விதம் ஆலோசித்த வளாய்த் தன்மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு எழுந்து மனந்தா ங்கலோடு வீட்டு வேலைகளைச் செய்யவாரம்பித்தாள்.

அங்கே கனகாம்புஜத்திற்கு அந்தணன் எவ்வளவு சொல்லியும் மனம் சமாதானப்படாததால், சக்திமதியை எப்படியாவது விபசாரி என்று ஊர்சிரிக்கச்செய்து பிராமணனுக்கு அவள்மேல் இருக்கும் சிறிது அன்பும் ஒழிந்து போகும்படிச் செய்விக்கவேண்டுமென்று அவள் தன்மனத்துள் தீர்மானித்துக்கொண்டு அங்குத்தன்னிடம்

வந்துபோய்க்கொண்டிருக்கும் ஒருவனைத் தயார் செய்து எவ்விதத்திலேனும் பிராமணன் மனைவியை ஊர் நகைக்கச் செய்துவா என்று அனுப்பினாள். அவனும் கனகாம்புஜத்தினிடம் தனக்குண்டாயிருக்கும் ப்ரேமாவேசத்தாலும் தான் அவளிடம் பெற்றுக்கொண்ட பணத்தாலும் அவ்விஷயத்தில் துணிவுகொண்டவனாய், இன்னும் ஒருவாரத்தில் அப்படிச் செய்துவிடுகிறேன் பார் என்று வீரம் பேசி வெளிச்சென்றான்.

சிவனும் தாசியின் உள்ளக்கருத்தை யறியாது அவள் சொன்னபடியெல்லாம் ஆடிக்கொண்டு அன்றுமுதல் தன் மனைவியைப் பார்ப்பதையும் ஒழித்தான். ஆயினும், தன் மனைவி தன்பால் காட்டும் அன்பும் தனக்குச்செய்யும் வணக்கமும் தனக்காகச்செய்யும் தெய்வ ஸ்தோத்திரங்களும் அவன் மனதை விட்டு ஒருகாலும் அகலவில்லை. அவன் வீட்டுக்குச் சென்று மனைவியைப் பார்த்துக் கொண்டிருந்த காலத்தைக்காட்டிலும் பதின்மடங்காய் இப்போது அவன் மனதில் இருந்துகொண்டேயிருந்தன. மந்திரத்துக்குக் கட்டுப்பட்ட பாம்பு போல் தான் செய்திருக்கும் ஸத்யத்துக்குக் கட்டுப்பட்டு ஒன்றும் சொல்லவும் செய்யவும் தெரியாதவனாய்ப் பித்தனைப்போலானான். ஒவ்வொரு சமயம் தான் இவ்வாறு கெட்டதைப்பற்றி வருந்துவான். தான் ஸத்யம் செய்துகொடுத்துவிட்டதற்காகத் தன் மடத்தனத்தை நொந்துகொள்வான். கனகாம்புஜம் எதிரே வந்தால் மலரவிழிப்பான். வேசையும் இவன் மனம் மாறியிருப்பதையுணர்ந்துகொண்டு அவன் களிப்பெய்துமாறு பல கேளிக்கைப் பேச்சுகளைப் பேசியவனை சந்தோஷப்படுத்துவாள். தான் எண்ணிய கருத்தைச்சீக்கிரம் முடித்தாலன்றிப் பயன் தராது என்று எண்ணி, ஒரு தாய்க்கிழவியைத் தயார் செய்து அவளை சக்திமதியிடம் போய் நேசத்தைப் பெற்றுக் கொள்ளவும் சொன்னாள். உலகில் கூசாமல் எதையும் செய்யும் வேசையரால் மயங்காத ஆடவரும் வருந்தாத பெண்டிரும் உண்டோ? ஈசுவரன் ஒருவன் இவற்றுக்கு எதிர் நின்று தடுத்தால் தடுக்கலாமே யொழிய, வேறு யாரால் இவர்கள் போட்ட முடியை யவிழ்க்க முடியும்? பாவி, நமது சக்திமதியை என்னென்ன பாடு படுத்தப்போகிறாளோ? இந்த ஜன்மத்தில் நல்லவளாயிருப்பினும் இதற்கு முன்பிறப்பில் செய்திருந்த தீவினைப் பயனாக இவ்வணங்கரசு படும் பாட்டை எல்லாம் வல்ல இறைவன் அருளோடு நீக்கி ரக்ஷிப்பானாக.

மீனாக்ஷி என்று பெயருடைய அந்தத் தாய்க்கிழவி அந்த நாள் பகலில் வெயிலுக்குத் தங்கவந்தவள்போல் சக்திமதி வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்தாள். அப்போது சக்திமதி, ஒருகால் கணவர் வருகிறாரோ பார்ப்போம் என்று வாயிற்படியில் நின்றுகொண்டு சிறிது தூரம் பார்த்துவிட்டுக் கதவைத் தாழிடப்போனாள். அப்போது கிழவி, அம்மா! வெயில் தாபம் பொறுக்க முடியவில்லை. தாகம் மிகுதியாயிருக்கிறது. கொஞ்சம் குடிக்க நீர் கொடு என்று கேட்டாள். பசித்தார்க்கிரங்கும் பண்புடைய சக்திமதி உள்ளே சென்று நீர் கொணர்ந்தாள். அதற்குள் கிழவி மெல்ல எழுந்து உள்ளே சென்று கூடத்தில் உட்கார்ந்துகொண்டாள். சக்திமதியும் நீர் கொடுக்க அதைக் குடித்துவிட்டபின்னர், தாய்க்கிழவி அவளைப் பார்த்து, அம்மணி! நீ இவ்வூர்க் கண்ணகியம்மனைப்போல இருக்கிறாய். என்றாலும் முகத்தில் சந்தோஷம் குறைந்திருக்கிறது; வீட்டைப்பார்த்தாலோ நீ தனித்து வாசம் செய்பவள் என்பதை யுணர்த்துகிறது. உன் குணத்துக்கும் உன் அழகுக்கும் நீ நல்ல குலத்தில் செல்வர் வீட்டில் பிறந்தவள் என்பது சொல்லாமலே விளங்கும். கண்டார் காதலிக்கும் கட்டழகு வாய்ந்திருந்தும் இங்ஙனம் மனத்தாங்கலோடு தனித்திருக்கக் காரணமென்ன? இவ்வூரில் சுமங்கலிகள் யாரும் கலங்கி வருந்தாமல் இருக்கவேண்டுமென்பதே இவ்வூர் அரசனது கொள்கை. நீயோ அவரது இஷ்டத்துக்கு விரோதமாய் வருந்துகிறாய். இதனை யரசன் அறியவில்லையோ? அறிந்திருந்தால் உன்னை இப்படிக் கஷ்டப்படவிடமாட்டாரே. கணவன் மனைவியர் எப்போதும் சந்தோஷஸாகரத்தில் ஆழ்ந்திருக்கவேண்டுமென்பதே அவரது உரிய விரதம். தம்பதிகள் யாரேனும் பிரிக்கப்பட்டிருந்தால், இவ்வூரில் கோயில்கொண்டிருக்கும் கண்ணகியம்மன் கண்ணிலிருந்து நீர் வடியும். அதனை யறிந்து அத்தம்பதிகளைக் கூட்டி வைக்காவிடில் இவ்வூர் அரசனுக்குத் தீங்கு நேரிடும். அதனால் எங்களரசன் நல்ல வேவுகாரரால் ஒவ்வொரு வீட்டு சமாசாரத்தையும் அப்போதப்போது தெரிந்துவைத்துக்கொண்டு அவ்விருவரும் கூடியிருக்கவேண்டிய முயற்சியைச் செய்வார்.

**சக்திமதி.**—ஆமாம். அப்படித்தான் நானும் கேள்விப்பட்டிருக்கிறேன். அதேனப்படி? இத்தெய்வம் இவ்விஷயத்தில் வருந்தக் காரணமென்ன?

கிழவி.—(சிறிது உள்ளன்பு கொண்டவளாய்) ஏனம்மா நின்றுகொண்டிருக்கிறாய்? உட்கார். சொல்கிறேன்.

சக்திமதி.—(உட்கார்ந்து) சொல்லுங்கள்.

கிழவி.—இப்போது தெய்வத்தன்மையோடு விளங்கும் இக்கண்ணகியம்மன் கோவலன் என்பவனது மனைவி. பதிவிரதைகளுக்குள் முதலில் வைத்து எண்ணப்படுபவள். அவன் ஒரு தாசியினால் கலக்கப்பட்டு இங்கு வந்து ஒரு நகையை விற்கும்போது அரசனால் சிறையில் வைக்கப்பட்டுக் கொல்லப்பட்டான். இதனையறிந்த அவ்வம்மன் தனது பாதிவ்ருத்யத்தால் இவ்வூர் எரிந்து போகும்படி சபிக்க, அப்படியே யாயிற்று. அன்று முதல் இவ்வரசர்கள் அவ்வம்மனைத் தமது தெய்வமாகக் கொண்டாடிவருகிறார்கள். அவர்களுக்குள் இப்போது அரசாண்டு வரும் அரசன் அந்த அம்மனிடத்தில் மிகவும் பயங்கொண்டவனாகையால், அவ்வம்மன் மனம் வருந்தாதபடியெல்லாம் பாதுகாத்து வருகிறான்.

சக்திமதி.—ஆனால், இது பெண்களுக்குரிய தெய்வம்போலிருக்கிறது.

கிழவி.—ஆமாம். பதிவிரதைகளுக்குரிய தெய்வந்தான். வேறு ஒருத்தியால் கலக்கப்பட்ட புருஷரையும் அவரவர் பத்நிகளோடு சேர்த்துவைக்கும். இவ்வூரில் இத்தெய்வத்தை வணங்காதார் இல்லை.

சக்திமதி.—கோயில் இங்கிருந்து எவ்வளவு தூரம் இருக்கும்?

கிழவி.—சிறிது தூரம்தான். நீ பேசினதைக்கொண்டு உன் கணவன் உன்னைக் கைசோரவிட்டு வேறு யாரிடத்திலேயோ மயங்கியிருக்கிறார் என்று தெரிந்துகொண்டேன். இது உண்மைதானே?

சக்திமதி.—மயங்கி யிருப்பதென்ன? இங்கும் வருவர் அடிக்கடி.

கிழவி.—இல்லை, இல்லை. உன் முகம் அப்படிச் சொல்லவில்லை. என்ன இருந்தாலும் கண்ணகிகோயிலுக்கு ஒரு வாரம் போய் வா. அவள் உன் வருத்தத்தை யொழித்துவிடுவள்.

சக்திமதி.—அப்படிச் செய்யலாம் என்றுதான் எண்ணம். ஆனால் தக்க துணையில்லாததனால் மனம் துணியவில்லை.

கிழவி.—இவ்வூரில் ஏனம்மா துணையில்லையென்கிறாய்? இவ்வூர்ப் பெண்கள் எல்லாரும் நல்லவர்கள்தாம். இந்த ஊரில் உன்னைப்

போல் வருந்துபவர் ஒருவருமே கிடையாது. உன் கணவன் செய்தியை யரசன் தெரிந்துகொண்டால் லகுவில் விடமாட்டார்.

சக்திமதி.—அப்படி யரசனுல் அவர் தண்டனைக்காட்பட நான் சம்மதிக்கமாட்டேன்.

கிழவி.—நீ அம்மனை தினந்தோறம் வணங்கி வா. அவள் அருள் புரிவள்.

சக்திமதி.—நீங்கள் நல்லவர்கள். உங்களிடம் எனக்கு நம்பிக்கையுண்டு. எனக்குத் துணை நீங்கள்தான் வரவேண்டும்.

கிழவி.—ஆஹா! அதற்கென்ன? வருகிறேன். ஆனல் தினந்தோறம் நடந்துபோக என்னல் முடியாது, என் மகளை வேண்டுமென்ருல் வரச்சொல்கிறேனே.

சக்திமதி.—அவள் குணமெப்படியோ எனக்குத் தெரியாது. நீங்களே வந்து உதவி செய்யுங்கள்.

கிழவி.—சரி. அதற்கென்னமம்மா? இந்த உதவி கூடவா செய்ய முடியாது? ஆனல், உன் கணவன் வீட்டுக்கு வருகிறதேயில்லேயோ? அட பாவி! இந்த லக்ஷணமுடைய பெண்ணைக்காட்டிலும் இன்னெருத்தி உனக்கு அழகாயிருக்கிருளா? இது விதிச்செயல்தான்.

சக்திமதி.—(சிறிது துக்கத்தோடும், கண் கலங்கி) வராமல் என்ன? நேற்றுமுதல்தான்——.

கிழவி.—அம்மா! அழாதே. அம்மன் கூட்டிவைப்பள். ஐயோ உன் கண் கலங்கிஞல் அம்மன் கண்ணும் கலங்குமே. இவ்வூர் கெட்டல்லவோ போய்விடும்! அரசனுக்கு ஏன் இன்னும் இந்த சங்கதி தெரியவில்லே? அம்மா! வெயில் தணிந்துவிட்டது. நான் போய்வருகிறேன். சூர்யாஸ்தமனத்துக்கு வந்து கோயிலுக்கு அழைத்துப்போகிறேன்.

சக்திமதி.—ஆஹா! அப்படியே செய்யுங்கள்.

பேச்சு முடிந்தவுடன் கிழவி வெளியேறி வீட்டுக்குப் புறப்பட்டுவிட்டாள். போகும்போது பின்வருமாறு ஆலோசிக்கிருள். “ஆஹா இவள் அழகுக்கும், குணத்துக்கும் கணவனிடம் வைத்திருக்கும் அன்புக்கும் கனகாம்புஜம் எம்மாத்திரம்? இவளது காலடியை

மிதித்து இவள் நடையைப் பின்பற்றினாலும் அவள் குணப்படமாட்டாள். அநேகமாய் உலகத்தில் இப்படி அழகு முதலிய அனைத்தும் வாய்ந்திருக்கும் பெண்களுக்குத்தான் கணவர் மூடராக வந்து வாய்க்கிறார்கள். இதுவும் கடவுளுக்கு விளையாட்டாக இருக்கிறது. இந்தக் கற்புக்கரசியைக் கெடுத்துவிடவேண்டுமென்று கனகாம்புஜம் எண்ணி முயற்சி செய்துகொண்டு வருகிறாள். இதற்குத் தர்மம் சம்மதிக்காது. 'கெடுவான் கேடு நினைப்பான்' என்றபடி தான் கெடவே அந்த உத்தமியைக் கெடுக்க நினைக்கிறாள். இது ஒருகாலும் நடந்தேறாது. ஆமாம். இப்படியிருக்க நான் என் இவ்விஷயத்தில் தலையிட்டுக்கொள்ளவேண்டும்? மிகுந்த பாவத்துக்கு ஆளாக வேண்டும். ஆனால் எப்படி முயன்றாலும் இவளது கற்பை யழிக்க ஒருவராலும் முடியாது. அம்மன் இடம் கொடுக்கமாட்டாள். இது வீண் முயற்சியே யாகும். என்றாலும் நான் வாங்கின காசுக்கு என்னாலானவரை உழைத்துத்தான் தீரவேண்டும். நாளும் சாயங்காலம் போய் அம்மன் கோவிலுக்கு அழைத்துப்போவதாகச் சொல்லியிருக்கிறேன். இவ்விஷயத்தை கனகாம்புஜத்தினிடத்தில் சொல்லிவிடுவோம். ஆவது ஆகட்டும்." என்று சிந்தித்து கனகாம்புஜத்தினிடம் சென்று நடந்ததைச் சொன்னாள்.

தாசி, இந்த வார்த்தையைக் கேட்டவுடன் உள்ளம் பூரித்தவளாய்,

தாசி.—பாட்டி! அவளை எப்படியாவது கலைத்து விடலாமென்று தோன்றுகிறதா உன் மனதில்?

கிழவி.—அவள் பதியினிடம் மிக்க வணக்கமும் அன்பும் கொண்டவள். தெய்வபூஜை தவறாதவள். இதுவரையில் அயல் புருஷனைக் கண்ணெடுத்தும் பாராதவள். வேறு புருஷரது பேச்சையும் எடுத்துப் பேசச் சம்மதியாதவள். உயர்ந்த குலத்தில் பிறந்த உத்தமி யென்பதில் தடையில்லை. என்றாலும், நாம் முயற்சி செய்தும் அக்காரியம் முடியவில்லையென்றால் நமது ஜாதிக்கு அழகல்ல. முயற்சி செய்வோம்.

தாசி.—இப்படி எல்லா நற்குணமும் வாய்ந்தவளை யெங்ஙனம் உன் எண்ணத்துக்கு இசைய நடத்துவாய்?

கிழவி.—அவள் மனதைக் கலைக்க ஈசுவரனாலும் முடியாது. நமது காரியத்தை மோசமாகத்தான் முடிக்கலாம்.

தாசி.—மோசமென்றால் அதெப்படி ?

கிழவி.—வேறு புருஷனை யவள் கணவன்மாதிரி வேஷம் புனையச் செய்து கை கலக்கும்படி செய்யவேண்டும்.

தாசி.—அது முடியாத காரியம். அவள் வேஷத்தைக் கண்டு மலைக்க மாட்டாள். அதிலும் புருஷனை வணங்குவதிலும் அவருக்குப் பாத பூஜை செய்வதிலும்தான் அவள் பிரியப்பட்டவள். ஆன தால் நாம் கொண்ட எண்ணம் நிறைவேறுவதெப்படி?

கிழவி.—உன் எண்ணம் ஒருகாலும் முடியாது. அவளைக் கெடுப் போமென்பதனை விடு. இன்னொருவனை யவள் புருஷனாக எண்ணினாள் என்று உலகறிய ஏற்படுத்தி யவமானப்படுத்தலா மேயன்றி யவளைக் கெடுக்க முடியவே முடியாது.

தாசி.—அது அப்படியானால், என் ஆசை நாயகனிடத்தில் சொல்லி யிருப்பது நிறைவேறாமல் போவதுடன், அவள் குணம் இன் னும் அதிகமாயல்லவோ சிறந்து விளங்கும்?

கிழவி.—அதற்கென்ன செய்யலாம்? அவள் மனதைக் கலைத்து மன மொப்பி இன்னொருவனை மணவாளனாகக்கொள்ளும்படி செய் வதற்கு என்னால் முடியவில்லை.

தாசி.—இச்செயலில் வல்ல நீயே முடியாதென்றால், நான் என்ன செய்வேன்?

கிழவி.—நான் என்ன செய்வேன்? அவளை வேண்டுமென்றால் அம் மன் கோயிலுக்கு அழைத்து வருகிறேன். அதற்குமேல் உன் சாமாத்தியத்தைச் செய்துகொள்.

தாசி.—எனக்கு சாமர்த்தியமிருந்தால் உன்னை யழைப்பானேன் ? ஆனால் ஒரு காரியம் செய்வோம். அவளுக்கு அம்மன்கோயில் இருக்குமிடம் தெரியுமோ?

கிழவி.—தெரியாது. இனிமேல்தான் காண்பிக்கப்போகிறேன்.

தாசி.—அப்படியானால், அம்மன் கோயிலென்று, நம் வீட்டுக்கு அடுத்திருக்கும் பாழ் மனைக்கு அழைத்துவா. அதனைக் கோயி லாகச் சிங்காரித்து வைக்கிறேன்.

கிழவி.—சரி. அப்படியே செய்கிறேன்.

தாசி.—தவறாதே. மோசம் செய்து விடாதே. செய்தால் உன்னைப் பல விதத்திலும் தொந்தரவு செய்வேன்.

கிழவி.—நாக்கு ஒன்று இரண்டா? அப்படியேயழைத்துவருகிறேன். எப்போது அழைத்து வரட்டும்?

தாசி.—இன்று சாயங்காலந்தான்.

கிழவி.—நான் சென்றுவரட்டுமோ?

தாசி.—செல். தவறாதே. எதிர்பார்த்திருப்பேன்.

கிழவி.—இல்லை. அவசியம் அழைத்துவருகிறேன்.

தாசி.—அவளை யழைத்துவந்து அங்கே விட்டபிறகு நீ சென்றுவிட வேண்டும். அங்கிருக்கக் கூடாது.

கிழவி.—அப்படியே செய்கிறேன்.

என்று சொல்லிவிட்டுக் கிழவி சென்றுவிட்டாள். கனகாம்புஜம் உடனே ஆள்விடுத்து, தான் முன் பணம் கொடுத்துப் பேசி முடித்திருந்த கண்ணாயிரம் என்பவனை யழைத்துவரச்சொல்லி யவனிடம் நடந்த விருத்தாந்தங்களை யொன்றுவிடாமல் சொல்லி, உள்ளே ஆணுடை தரித்து மேலுக்கு மாத்திரம் பெண்ணுடை தரித்துக் கண்ணகியம்மன் மாதிரியாகக் கோலஞ்செய்துகொண்டு தான் புதிதாய் ஏற்படுத்தப்போகும் அந்தப் பாழ் மண்டபக் கோயிலுக்குள் வந்திருக்கும்படி சொன்னாள். அவனும் அதற்கு ஒத்துக்கொண்டு வெளிச்சென்றான்.

கனகாம்புஜம் பிறகு, தன் நாயகனுக்குத் தெரியாமல் தன் வசப்பட்ட ஆள்களைக்கொண்டு அந்தப் பாழ் மண்டபத்தை ஒரு கோயிலாக வலங்கரிக்கச் செய்தாள். சூர்யாஸ்தமனத்திற்குள் எல்லாவேலையும் முடிந்தது, எங்குபார்த்தாலும் தீபங்களேற்றிவைக்கப்பட்டன. அம்மனது கர்ப்பக்கிருஹமும் நன்றாய் அமைக்கப்பட்டு, ஆஸனமும் ஏற்படுத்தப்பட்டது. குறித்திருந்த மணிக்கு கண்ணாயிரமும் தனது வேஷத்துக்கு வேண்டிய உடைகளை எடுத்துவந்து அம்மன்போல கோலமுஞ்செய்துகொண்டு ஆஸனத்தில் உட்கார்ந்தான். வேலையாட்களெல்லாம் வெளியே போய்விட்டார்கள். பூசாரி என்று வேஷம் புனைந்த ஒருவன் மாத்திரம் அங்கு வெளிப்பட உட்கார்ந்திருந்தான். அஸ்தமித்து ஒரு நாழிகை யாயிற்று. அப்போது தாய்க்கிழவி சக்திமதியை யழைத்துக்கொண்டு மெதுவாக வந்து சேர்ந்தாள். கிழவியோ இந்தக் கொடிய காரியத்தைச் செய்ய முன்வந்தாளாயினும் சக்திமதியின் கண்ணோட்டத்தைக்குப் பயந்தவளாய்

நடுங்கிய உள்ளத்தோடுதான் வந்து சேர்ந்தாள். சக்திமதியோ தான் வந்த இடம் புதியதாயும் தனிமையாயும் இருந்ததனால் கிழவியை அப்புறமும் இப்புறமும் விடாது பின்தொடர்ந்தே வந்தனள். கிழவியும் அவளுக்குக் கண்ணகி கதையை விரிவாய்ச் சொல்லிக்கொண்டே சன்னதிக்குள் நுழைந்து பூசாரிக்கு சைகை செய்தாள். சக்திமதி மிகுந்த வணக்கத்தோடு தான் கொணர்ந்த குங்குமத்தைப் பூசாரி கையில் கொடுத்து அம்மனுக்குச் சாத்தச்சொல்லிவிட்டு, அதிவினயத்தோடு கண்களை மூடிக்கொண்டு ஸ்தோத்திரம் செய்யவாரம்பித்தாள். இத்தருணம் பார்த்துக் கிழவி நழுவி விட்டாள். சமீபத்தில் பூசாரிதான் நின்றுகொண்டிருந்தான். அப்போது பூசாரியும் வெளியேறிவிடவே, கண்ணாயிரம் அம்மன் கோலத்தைக் கலைத்துவிட்டு தன்னுருக்கொண்டு சக்திமதிக்கு சமீபத்தில் வந்துநின்றான். அப்போது சக்திமதி கண்ணைத் திறந்து பார்த்தாள். அம்மனையும் காணவில்லை. கிழவியையுங் காணவில்லை. சமீபத்தில் ஒரு புருஷன் நிற்பதையும் உட்புறத்தில் இருவர் கையில் கத்தியை வைத்துக்கொண்டு கோபத்தோடு விழிப்பதையும் பார்த்தாள். மோசத்துக்கு உள்ளானதாகத் தெரிந்துகொண்டாள். சமீபத்தில் நின்ற புருஷன் தன்னைக் கெடுக்கவந்திருப்பதாகவும், சம்மதப்படாவிடில் தன்னைக் கொலை செய்ய இருவர் காத்திருப்பதாகவும் தெரிந்துகொண்டாள். இனித் தப்ப வழியில்லை யென்று மருண்டாள். தனது நாதனை மனதில் தியானித்துக்கொண்டாள். கண்ணகியம்மனைக் கருத்துள் நினைத்து தனக்கு வந்த தீங்கை இரவிமுன் பனியாக்க வேண்டுமென்று வேண்டினாள். தன்னைக் காப்பாற்றும்படி யாரை யாவது அனுப்பவேண்டுமென்று மன்றாடினாள்.

அச்சமயத்தில் கிழவியாலும் பூசாரியாலும் சமயம் தெரிந்த தாசி, தன் நாயகனை விளையாட்டாக அழைத்துவந்து, சக்திமதியும் வேற்றுப்புருஷனும் அங்கு தனித்திருப்பதைக் காண்பித்து, இவ்வண்ணமே தினமும் நடந்துவருகிறதாகவும், இதன் சூக்ஷமமறிந்து தான் இன்று சமயமறிந்து காட்டுவதற்கென்றே அவனை யழைத்து வந்ததாகவும் சொல்லி மனைவியினிடம் கணவனுக்கு வெறுப்புத் தோன்றும்வண்ணம் ஸாஹஸமான வார்த்தைகள் சொன்னாள். அந்தப்பேச்சில் அவன் மயங்கி யதனை யுண்மையென்று நம்பித் தனக்கு வந்த கோபத்தால் அவளைக் கொல்லவேண்டுமென்னும்

எண்ணத்தோடு பரந்து அவளிடம் ஓடினான்.

அத்தருணம் படபடவென்று நான்கு குதிரைக்காரர்கள் அங்கு கையில் கத்தியோடு வந்து புகுந்து ஐந்துபேரையும் சிறைப்பிடித்துக் கொண்டு தகுந்த காவலோடு சக்திமதியை வீட்டுக்கு அனுப்பினார்கள். பட்டாளத்தார் அரசனுத்தரவுப்படி பிராமணனையும் தாசியையும் பலி கொடுப்பதற்காகக் கண்ணகி கோயிலிலும் மற்ற மூவரையும் தூக்குப்போடும் சாலையிலும் அடைத்தார்கள்.

தன் கணவன் தமது ஆசை நாயகியோடு அம்மன் கோவிலில் அடைபட்டிருப்பதாயும் மறுநாள் காலையில் பலியாகப்போவதாயும் தெரிந்துகொண்ட சக்திமதி, இனி சும்மா இருக்கக் கூடாதென்று, தன் ஆடைகளைக்கொண்டே தன்னை ஒரு உடுக்கடிப்பவளாக வேடம் புனைவித்துக்கொண்டுசென்று; தனது சாமர்த்யத்தால் காவலைக்கடந்து அம்மன் ஸன்னதிக்குள் சென்று சிறிது நேரம் பாடி உடுக்கடித்துவிட்டுப்பின் தனது வ்ரவைக்கணவனுக்குச் சொல்லித்தன் வேஷத்தைக் கனகாம்புஜத்துக்குப் புனைவித்து வெளியே அனுப்பிவிட்டாள். கனகாம்புஜம் அந்த உத்தமியை தெய்வமாக எண்ணிப் பல தடவை வணங்கி தான் பிழைத்தால் போதுமென்று வெளியேறிப் பறந்தனள். அரசன் வந்துபார்த்து, குற்றவாளிகளிருவரும் கணவன் மனைவியராயிருப்பதனால் பட்டாளத்ததிகாரிகள் பேரில் கோபங்கொண்டு வினவ, அவர்கள் விசாரணையின் பேரில் சக்திமதி நடந்ததை விவரமாய்ச்சொல்ல, அரசன் சக்திமதியின் குணத்தையும் சாமர்த்யத்தையும் கேட்டு வியந்து, அந்தணனுக்குப் பலவிதமாகப் புத்தி கூறி, அன்று முதல் தாசியின் உறவை விட்டொழிக்கும்படித் திட்டமாய்ச் சொல்லி அவனுக்குத் தனதரண்மனையிலேயே தக்க உத்யோகமுங் கொடுத்து தன்னிடமே வைத்துக்கொண்டார்.

சக்திமதி அன்று முதல் ஸந்தோஷத்தில் ஆழ்ந்தவளாய்க் கண்ணகியம்மனைக் குலதெய்வமாகப் பூசித்து வந்தாள்.

பிள்ளையையும் கிள்ளிவிட்டுத் தொட்டிலையும் ஆட்டிவிட்டது தாய்க்கிழவியேயன்றி வேறொருவருமில்லை. கனகாம்புஜம் சென்றவிடத்தை யறிந்து சொல்லவேண்டுவது அனாவசியமே. சிறைப்பட்ட மற்ற மூவரும் கொல்லப்பட்டனர்.

எம். வி. கோவிந்தராஜய்யங்கார்.

# கச்சியப்ப முனிவர் சரித்திரம்.

இந்நூலாசிரியர் கச்சியப்பமுனிவர். சான்றோருடைத்தாய தொண்டை மண்டலத்திலே சிவபெருமான்றன் மூர்த்தி விசேடத்தால் மேன்மையெய்திய தணிகைத்திருப்பதியிலே காஞ்சிபுரத்துப் பரம்பரைச் சைவவேளாளர் குலத்திலே அபிஷிக்தர்மரபிலேதோன்றி இம்மஹான் நம்தமிழ் மொழிக்குச் சிறப்பினைத் தந்தனர். சிறுவயதிற்றானே கல்வி நலந்தெரிந்து பின் உலகநடவடிக்கையும் இயற்கையந்தேவியின் சீருமுணர்ந்த பின்னரே உண்மையான கல்வியுடையவராவோம் என்றவெண்ணத்தினால் பல ஸ்தலங்களையுங் கண்டு தமிழ்மகள் தங்கி வசிக்கும் ஸ்ரீ கைலாச பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்தை யடைந்து அங்கே ஞானபானுவாய்ச் சிறப்புற்றோங்கிய ஸ்ரீ நமச்சிவாயமூர்த்திகளைத் தரிசித்து அவர் தம் அருளையடைந்ததனோடும், அப்பொழுது சின்னப்பட்டத்திலெழுந்தருளியிருந்தபின் வேலப்பதேசிகரை யடுத்தனர் நம் ஆசிரியர். இவரிடத்திற்றானே சைவஸந்யாஸமும் சிவதீக்ஷையும் பெற்றனர்.

தீக்ஷா குரவரின் ஆஞ்ஞையைச் சிரசாவகித்து முக்களாலிங்கர் என்னும் பிள்ளைத்திருநாமம் பெற்றுப்பின்னர்ச் சிவஞானசுவாமிகள் என்ற பெயர்விளக்கங்கொண்ட சித்தாந்தசைவ சிவஞானபோத திராவிட மஹாபாஷிய கர்த்தராய் எழுந்தருளியிராநின்றவரிடம் தமிழ்க்கலைபயின்ற மஹானுபாவர் இவர். உரையாசிரியருள் தலைநின்ற நச்சினார்க்கினியர், பரிமேலழகராதியரோடு ஒருங்கு எண்ணத்தக்க பெருமைவாய்ந்த சிவஞான முனிவரிடம் தமிழ் பயின்றவர் என்றதனானே நம் ஆசிரியரின் கல்வித் திறமையை விளம்புதலும் வேண்டுமோ? மேலும் இவருடன் கல்விபயின்ற இலக்கணம் சிதம்பரநாத முனிவர், தொட்டிக்கலைச் சுப்பிரமணிய தேசிகர், இராமநாதபுரம் சோமசுந்தரக்கவிராயர் ஆதியருடைய பெயரைக்கேட்டவுடனே இவரது கல்வியறிவு எத்துணைத்து என்று வியப்புறவேண்டியதே. நம் ஆசிரியர் உடன் பயின்ற மாணாக்கருள் மணியென விளங்கினமையினானன்றே ஆராய்ச்சியுணர்வுடைய ஆசிரியர் சிவஞானமுனிவர் தாமியற்றிய காஞ்சிபுராணக் கடவுள் வாழ்த்தினைப் பற்றி நடந்த விவாதத்தையடக்க வாண்டு அனுப்பினர். ஆசிரியரும் தம் சொல்வன்மையினானும் புத்திக் கூர்மையினானும் வாழ்த்துப்பாடல்களின் நிரலைப் பற்றிச் சித்தாந்தஞ் செய்தருளினார்.

"நாநல மென்னு நலனுடைமை யந்நலம்
யாநலத் துள்ளது மன்று." என்றும்

"உய்த்துணர்த்துஞ்—சொல், வன்மையின்றெனினெ ன்னுமஃதுடைத்தேற், பொன்மலர் நாற்றமுடைத்து" என் றுஞ்சிறப்பித்தோதிய பாக்களுக்கு இவர் ஒரு மேன்மையான இலக்கியமாகத் திகழ்ந்தனர். இவரது வாக்குவல்லபத்தையும் பிரசங்க சாதுரியத்தையும் புகழாதார் எவருமிலர். இவர் செய்த நூல்களை யாராயுநர் செய்யுளியற்று

வதிற் கைதேர்ந்தவர் என்றும் விரைவிற்பாடுஞ் சக்தியுடையவரென்றுமுணர்வார். காலம் இடங்கட்குத் தக்கபடி நவீனமான யுக்திகள் தாமாகவே இவரது செய்யுள்களிலமைந்து கிடக்கும். இவர் முதற் கணியற்றிய திருவானைக்காப் புராணம் தமிழிலக்கியங்களுட்டலை நின்ற சிலவற்றுளொன்றெனற்கு யாம் பின்னிடைய வேண்டியதில்லை.

தற்காலத்திற் றன்னயமே பாராட்டிப் பிறர்க்குச் சிறிதும் பயன் படாமலிருக்கும் சிலவித்துவான்களைப்போலாது நம்தமிழ்மொழியை விளக்கஞ்செய்த விசாகப்பெருமாளையர் சரவணப் பெருமாளையர் ஆகிய இருவர்க்கும் பிதாவாகிய கந்தப்பையர்க்கு ஆசிரியராவர் நம் முனிவர். சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம் முதலிய புறச்சமயிகளாலியற்றப்பட்ட காவியங்களையே போதிக்கவேண்டி வருகிறதேயென்று வருந்திப் பஞ்சகாவியங்களினைப் போன்ற சிறப்புவாய்ந்த திருத்தணிகைப் புராணத்தைத் தம் மாணாக்கர் வேண்டுகோளிற் கிசைந்து இயற்றித் தந்தனர். இத்தணிகைப் புராணம் சிந்தாமணிக்கு ஒத்த பெருமை வாய்ந்ததெனப் பின் வரும் பாடலாற்றெளியலாகும்.

"கருவினின் மழவிற் கற்குங் காலையிற் பருவ மாறிற்
பெருகிய பொழுதி னோயிற் பிரிவினிற் பகையி னீட்டும்
பொருள் வயின் வேட்ட தெய்தாப் புன்மையின் முதுமைதன்னின்
மருவிய திழப்பிற் சாவின் வன்றுயர் மனிதர்க்குண்டோ."

என்றற் றொடக்கத்த மூன்று நான்கு பாடல்களில் சிந்தாமணிமுத்தியிலம்பகம்,

"பொன்னும் வெள்ளியும் புணர்ந்தென வயிற்றகம் பொருந்தி
மின்னு மொக்குளு மென நனி வீயினும் வீயும்
பின்னை வெண்ணெயிற் றிரண்டபின் பிழைக்கவும் பெறமே."

என்றற் றொடக்கத்திய ஏழு பாடல்களின் சாதுரியமமைந்திருக்கின்றமை வியப்புறத்தக்கதே. மற்றும் சீவகசிந்தா

மணியின் சந்தமும்வனப்பும் அமைத்துத் தணிகைப்புராணத்தை யியற்றினர். நம் ஆசிரியர் தன் மாணக்கரிடம் மிகவும் அன்புடையவர் என்பதைத்தெரிந்து கொள்ளும் வண்ணம் கந்தப்பையர் குன்ம நோயிற்றுன்பப் பட்டபொழுது தணிகையாற்றுப் படையைப்பாடி அவர்நோயை நீக்கினர். பாடலினல் நோயொழிதல் என்பது சிறந்த மேலையோரும் ஒப்புக்கொள்ளக்கூடிய தென்பதை ஆய்ந்துணர்ந்து அறியலாம்.

நம் ஆசிரியர் சென்னையைச் சார்ந்தபொழுது விநாயகபுராணம் பாடினர். அதனையரங்கேற்றுகையில் ஐயாப்பிள்ளை என்ற ஒரு மஹான் தாம் பாடிய புராணத்தை இதென்ன இராமாயணமாவென்றிகழ்ந்து பேசியதற்காகக் கம்பராமாயணத்தின் முதலாறு செய்யுளில் நூறு குற்றம் ஏற்றினர். இதைக் கண்ட பிரபுவுந் தலைகுனிந்து நம் புலவர் பெருமானுக்கு பரிசிலுமளித்துச் சென்றனர். இவர் தம் கல்வியாற்றலே யாற்றல்.

நம் புலவரது காலம், இவர் ஆசிரியர் சிவஞானசுவாமிகள்காலம் என்பதிற் சந்தேகமில்லை. சிவஞான சுவாமிகள் கி. பி. 1783-ஆம் ஆண்டு விசுவாவசு வருடத்தில் தேகவியோகமாயினர். ஆகவே நம்ஆசிரியர் இருந்தகாலம் பதினெட்டாம் நூற்றுண்டின் பிற்பகுதி என்பதிலோர் ஐயப்பாடுமில்லை. சாலிவாகன சகாப்தம் 1712க்குச் சரியான சாதாரண வருஷம் சித்திரைமாசத்தில் கச்சியப்பமுனிவர் பரிபூரணதசையை யடைந்ததாகவுந் தெரியவருகிறது.

நம்புலவர்பெருமான் இயற்றிய நூல்களாவன:—

1. திருவானைக்காப்புராணம்.
2. பூவாளூர்ப்புராணம்.
3. பேரூர்ப்புராணம்.

4. திருத்தணிகைப்புராணம்.
5. தணிகையாற்றுப்படை.
6. திருத்தணிகைப் பதிற்றுப்பத்தந்தாதி.
7. விநாயகபுராணம்.
8. காஞ்சிபுராணம். (இரண்டாங்காண்டம்).
9. கச்சியானந்தருத்திரேசர் வண்டுவிடு தூது.
10. கச்சியானந்தருத்திரேசர் பதிற்றுப்பத்தந்தாதி.
11. பஞ்சாக்கரவந்தாதி.
12. சென்னை விநாயகர் பிள்ளைத்தமிழ்.

இவர் செய்த பாடல்களின் நாமங்கள் பின்வரும் பாட்டானும் விளங்கும்.

"வேற்கரச் செவ்வேண் மருவுந்தணிகை மான்மியந்
தமிழில் விளங்கச் செய்தான்
பாற்கவ புராண மெழிற் றிருவானைக்கா
வெனுஞ் சீர்பதிப் புராணம்
நாற்கயிலை சூழ் பேரூர்ப் புராணமொடு
திருக்காஞ்சி நகர்ப் புராணம்
ஏற்க வடமொழி பெயர்த்த கச்சியப்ப
முனிவனிருங் கவிஞரேறே."

சருக்கை. இராமசாமி ஐயங்கார், பி. ஏ.



# தென்னாட்டுக் கல்யாண வழக்கங்கள்.

உலகத்தில் பகுத்து அறியும் ஞானமுடைய மானிடராகிய நாமே ஒருவரோடு ஒருவர் கூடி வாழ்ந்து சுகம் பெறுகிறோம். அப்படி அந்த அறிவில்லாத மிருகங்களோ மந்தை மந்தையாய் சஞ்சரித்துக்கொண்டிருக்கின்றனவாயினும் ஒன்றுக்கொன்று உதவிபுரிந்துகொண்டு ஒத்து வாழ்ந்திருப்பது விசேஷமாய் இல்லையென்றே சொல்லலாம். இத்தன்மையான மிருகங்களைப்போல் நாமும் வ்யவஸ்தையும் நல்ல உறவும் ஒழுக்கமும் இல்லாமல் கெட்டலைந்து தான்தோன்றியாய்த் திரியக்கூடாதென்றே நமது பெரியோர்கள் நமது ஒழுக்கங்களுக்கு வரம்பு ஏற்படுத்தியிருக்கிறார்கள். அந்த வரம்பு என்பதற்குத்தான் தர்மம் என்று பெயர். இந்த தர்மம் நான்காகப் பிரிக்கப்பட்டிருந்தாலும் முக்யமாகவும் சுலபமாகவும் ஒழுங்காகவுமுள்ளது க்ருஹஸ்த தர்மமே. அதாவது உண்டியோ உடையோ என்று ஊரூராய்த் திரியாமலும், காட்டில் அலைந்து சருகு காய் கனி கிழங்குகளைத் தின்று தேகத்தைக் கெடுத்துக்கொள்ளாமலும் ஓரிடத்திலேயிருந்து ஒழுங்காக நடந்து உள்ளதைக்கொண்டு திருப்

தியடைந்து ஊராருக்கும் நல்லவனென்று பெயரெடுத்து வாழ்ந்திருக்கக்கூடிய நிலையாம். ஸ்த்ரீகளும் புருஷர்களும் ஒருவருக்கொருவர் ஆதரவுள்ளவர்களா யிருக்கவேண்டும் என்பதே கடவுளின் அபிப்பிராயமாகும். புருஷர்கள் தங்கள் சுபாவத்துக்குத் தக்கபடி வெளியில் திரிந்து வேலை செய்து சாப்பாட்டுக்குத் தேடிக்கொண்டுவர, ஸ்த்ரீகள் தங்கள் சுபாவத்துக்குத் தக்கபடி வீட்டிலிருந்து பண்டங்களைப் பாதுகாத்து பட்டினியோடு அலைந்து வரும் புருஷனுக்குத் தக்கபடியாய் உணவாலும் உபசாரவார்த்தைகளாலும் மற்றும் பலவித செயல்களாலும் இன்பத்தைத் தந்து அவன் வெளியில் கஷ்டப்பட்டு வந்த சிரமத்தைப் போக்க வேண்டும். இப்படி ஸ்த்ரீயும் புருஷனும் சேர்ந்திருப்பது போல இரண்டு புருஷர்கள் சேர்ந்திருந்தால் ஒத்துவராது. ஏனெனில், இருவரும் ஓரேவிதமான சுபாவம் பெற்று இருப்பதால், ஒருவனுக்கு இன்னொருவன் ஊழியம் செய்ய வேண்டிய நிலைமையில் கட்டுப்படமாட்டான். இதனை விசேஷமாய் உலகத்தில் நாம் அறிந்து வருகிறோம். ஒரு கூட்டத்திலேயே ஒருவன் கோபமுடையவனாகவும் ஒருவன் சாந்தமுடையவனாகவும் இருந்தால்தான் அந்தக் கூட்டம் நீடித்து நிற்கும். அப்படியில்லாமல் எல்லாரும் கோபமுடையவராயிருந்தால் கலகமும், எல்லாரும் சாந்தமுடையவராயிருந்தால் தாக்ஷிண்யத்தால் நஷ்டமும் உண்டாகும். அதுபோல ஒருவன் அதிகாரஞ் செய்யக்கூடிய சுபாவம் உடையவனாகவும் ஒருத்தி கீழ்ப்படிந்து நடக்கும் தன்மையுடையவளாகவும் கூடியிருக்கவேண்டுவது அவசியமென்று ஏற்படுகிறது.

இந்த விதமான சுபாவத்தின் உண்மையை யறிந்த நமது முன்னோர்கள், ஒரு ஸ்த்ரீக்கும் ஒரு புருஷனுக்கும் ஒருவிதமான கட்டுப்பாடு இருந்தால்தான் உலகம் கலகம்

இல்லாமல் நடந்து வரும் என்று எண்ணி விவாஹம் என்ற ஒரு வரம்பை ஏற்படுத்தினார்கள். இந்த வரம்பு எந்தத் தேசத்திலும் உள்ளது. ஆசாரம் மாத்திரம் மாறுபட்டிருக்கும். இந்துக்களுள் சிலர் தேவதைகள் சாக்ஷியாக அக்கினிக்கு முன்னால் ஸத்யம் செய்து ஒருவருக்கொருவர் சிநேகஞ் செய்துகொண்டு அதற்கடையாளமாகப் பெண்ணின் கழுத்தில் பிள்ளை தாலி யென்ற ஒரு கயிற்றைக் கட்டுவது என்ற வழக்கமும் மற்றும் சிலர் தங்கள் கோவிலில் தெய்வ சாட்சியாகத் தங்கள் குருவின் முன்னிலையில் ஸத்யம் செய்து இடைவிடாத நேசம் செய்துகொண்டு அதற்கு அடையாளமாக இருவரும் கைமோதிரங்களை மாற்றிக்கொள்ளுவது என்ற வழக்கமும் இன்னும் வேறு சிலர் வேறு வேறு வழக்கங்களும் கொண்டிருக்கிறார்கள். இவ்வழக்கங்களுள் தென்னிந்தியாவில் வழங்கிவரும் சிலரது அருமையான வழக்கங்களையே நாம் எழுதப்புகுந்தது.

முதலில் பிராமணர்களை எடுத்துக்கொள்வோம். அவர்களுள் பின்னால் சொல்லப்படும் விஷயம் பொதுவழக்கமாயிருக்கிறது. கல்யாணநாளன்றைக்கு கல்யாணப்பிள்ளை, சுத்த வைதிகக் கோலம் பூண்டு கையில் ஓலைச் சுவடியும் தோளில் மூட்டையுமாகத்தாங்கிக்கொண்டு காசியாத்திரை செய்யப்போவதுபோல் சிறிதுதூரம் நடக்கிறான். அங்கே போய் ஸந்யாசியாகித் தபசு செய்யப் போவதாக அவனுடைய அபிப்பிராயம். அப்போது கல்யாணப் பெண்ணின் தகப்பனார், அப்பிள்ளையைச் சந்தித்து, தன் பெண்ணை யவனுக்குப் பாணிக்ரஹணம் செய்து கொடுப்பதாக வாக்குக் கொடுத்து உபசாரம் செய்து விவாஹப் பந்தலுக்கு அழைத்து வருகிறார். அங்கே சாஸ்த்ரப்படி மந்த்ரங்களோடு அக்கினி வளர்க்கப்பட்டிருக்கும். பிறகு தெய்வங்களைப் பிரார்த்தனை செய்து, இருவரும் இனிமேல் கூடி

வாழ்வதற்கு ஒரு அடையாளமான தாலி என்னும் ஓர் சரட்டை மாப்பிள்ளை பெண்ணின் கழுத்தில் கட்டுகிறான். பிறகு, தம்பதிகள் இருவருமாய் அந்தப் பரிசுத்தமான ஓமாக்கினியைப் பிரதக்ஷிணம் செய்துவந்து அங்கு வைக்கப்பட்டிருக்கும் அம்மி யென்னும் கல்லின்மேல் பெண்ணினுடைய வலது காலை பிள்ளை தனது கைகளால் பிடித்து ஏழுதரம் எடுத்தெடுத்து வைக்கிறான். இதற்குத்தான் ஸப்தபதி என்று பெயர். இது விவாகச்சடங்கின் முக்யமான அம்சமாக இருக்கிறது. அவள் கணவன் உத்தரவில்லாமல் அங்குமிங்கும் செல்லாமலும் உறுதியாயும் இருக்க வேண்டுமென்பது இதனுடைய கருத்து. பிறகு பிள்ளை பெண்ணினுடைய வலதுகையைப் பிடித்துக்கொண்டுவந்து மணையில் உட்கார்ந்து, அக்கினிக்கு முன்பாக தனது புரோஹிதரால் சொல்லிக்கொடுக்கப்படும் மந்த்ரங்களைச் சொல்லுகிறான். தேவதைகளைப் பிரார்த்திக்கிறான். நல்ல வைதிகர்களாயுள்ளபேர் தம்பதியருக்கு ஆசீர்வாதம் செய்து, அன்றுமுதல் அப்பெண்ணைத் தன்னுடைய குடும்பத்தோழியாகக் கொள்ளும்படி மாப்பிள்ளைக்குச் சொல்லி யுபசரிக்கிறார்கள். கடைசியாகப் பெண்ணும் பிள்ளையும் புஷ்பமாலைகளை மாற்றிக்கொள்ளுகிறார்கள்.

ஐந்து அல்லது ஒன்பது வகை தானிய விதைகளை ஐந்து சிறிய மண்பாண்டங்களில் விதைத்து தம்பதிகளிருவரும் காலையும் மாலையும் நான்கு நாளைக்கு நீர் வார்ப்பார்கள். இந்தச் சிறிய மண்பாத்திரங்கள் இதற்கென்றே செய்யப்பட்டவைகளாயிருக்கும். இந்த விதை முளைப்பதற்கு கறையான் புற்றிலிருந்து மண் கொண்டுவந்து போடுவார்கள். ஐந்தாம்நாள் முளை கிளம்பிச் செழித்துச் சிறிது வளர்ந்திருக்கும். அவைகளை குளத்திலாவது ஆற்றிலாவது கொண்டு எறிவார்கள். இந்த முளைக்குப் பாலிகை

யென்று பெயர். பிள்ளையும் பெண்ணும் அந்தக் கல்யாண நாட்களில் ஒவ்வொரு சாயங்காலமும் புஷ்பச்சண்டு ஆடுவார்கள். அப்போது கூடியிருக்கும் பெண்கள் மிகுந்த சந்தோஷத்தோடு பாடுவார்கள். கல்யாணநாள் ராத்திரி பெண் கணவனை யழைத்துக்கொண்டு, வெளியே வந்து அருந்ததி எனும் நக்ஷத்திரத்தைக் காண்பிப்பாள். அருந்ததி மகா பதிவிரதை. சூர்யவமிசத்துக்குக் குருவாகிய வஸிஷ்டரது பத்நி. தானும் அந்த அருந்ததியைப்போல் இருப்பதாகப் பெண் சொல்கிறாள் என்பது கருத்து.

பெரும்பான்மையாய்த் தமிழப் பிராமணர்களுக்குள் அம்மான்கோலம் என்ற ஒரு வழக்கமுமுண்டு. அதாவது கல்யாணப்பிள்ளையும் பெண்ணும் தங்கள் தங்கள் தாயுடன் பிறந்த மாமனது தோளில் ஏறிக்கொண்டு, கல்யாணத்தின் நான்காவது நாள் சாயங்காலத்தில் பந்தலின் வெளியே மாலை மாற்றிக்கொள்வார்கள். அப்போது அவர்களைத் தங்கள் தோள்களில் எடுத்துக்கொண்ட அந்தப்புருஷர்கள் வாத்தியத்துக்குச் சரியாக ஆடிக்கொண்டு வருவார்கள். இது பார்ப்பதற்கு விநோதமாயிருக்கும். அன்று இராத்திரியே கல்யாணப் பெண்ணின் மாமன் சொந்தச்செலவு செய்து மத்தாப்பு தீவர்த்தி வாத்தியத்தோடு பெண்ணையும் மாப்பிள்ளையையும் ஒருபல்லக்கில் வைத்து ஊர்வலம் வரச் செய்வார். இன்று மணப்பெண்ணுக்கு ஆண் வேஷமும் வேறொரு கன்னிகைக்குப் பெண் வேஷமும் போடுவித்து ஊர்வலம் வரச் செய்வதும் வழக்கமுண்டு.

வைதிகப் பிராமணர், பிள்ளையை கல்யாணமான ஆறு மாதங்கட்குக் க்ஷவரம் செய்துகொள்ளச் சொல்லமாட்டார்கள். இதனை ஆறுமாதக் கல்யாணமென்றும் தீக்ஷா விஸர்ஜனமென்றும் சொல்வார்கள். இந்த நாளில் கல்யாணப்பிள்ளை சிறுவனாயிருந்தால், அவனுக்குப் பெண்

வேஷம் போட்டும் வேடிக்கை பார்ப்பதுண்டு.

மாத்வர்கள், தங்களது முன்னோர்களையெல்லாம் கல்யாணத்துக்கு சாக்ஷியாக வந்திருந்து பிள்ளையையும் பெண்ணையும் ஆசீர்வதிக்கும்படி, மந்த்ரத்தால் அழைத்து, வீட்டில் பூஜையிலிருந்துகொண்டிருக்கும் சாளக்ராமப் பெட்டிக்கு அருகே ஒரு குச்சியில் ஒரு ரவிக்கையையும் வஸ்திரத்தையும் கட்டி ஆவாஹனம் செய்து வைப்பார்கள். இந்தக் காரணத்தால், இவர்களுக்குள் நல்ல வைதிகர்களாயிருப்பவர், அந்தக் கல்யாண வீட்டில் சமைக்கப்பட்டவற்றைச் சாப்பிடமாட்டார்கள். கல்யாணத்தின் இரண்டாம் நாள் காலையில், ரங்கவ்ருக்ஷம் என்னும் சித்திரம் எழுதும் வேடிக்கையும் கொண்டாடப்படுகிறது.

பூச்சண்டு ஆடினபிறகு, பிள்ளை பெண்ணினது வலது கையைப் பிடித்துக்கொண்டு, முன்னமே சுவரில், கல்யாணமான ஒருத்தியால் வாழைமரம்போல் சித்திரிக்கப்பட்டிருக்கும் இடத்துக்குப்போய், சுண்ணாம்பும் மஞ்சளும் சேர்த்து அறைத்துவைக்கப்பட்டிருக்கும் பாத்திரத்தில் பெண்ணின் வலது கையின் முன்விரலைத் தோய்க்கும்படி செய்து அந்த விரலைத் தான் பிடித்துக்கொண்டு, சுவரில் எழுதப்பட்டிருக்கும் சித்திரத்தின்மேல் தானும் எழுதி வருவான். இப்படி மூன்று நாளும் செய்வதுண்டு. மூன்றாவது நாள் ராத்திரி மாப்பிள்ளைக்கு மாமியார் பக்ஷணங்கள் கொண்டு வந்து கொடுப்பாள். இந்தப் பிள்ளை தனக்கு வேண்டியதைச் சாப்பிட்டுவிட்டு மற்றவற்றை அங்கே எறிந்துவிட்டு வந்துவிடுவான். பிறகு அந்த இடத்துக்குச் சாணம் தெளிப்பார்கள். தன் கைகளைக் கழுவிக்கொண்டு மாப்பிள்ளை தன் வீட்டுக்குப் புறப்படும்போது, ஒரு வெள்ளிப்பாத்திரமும் தாம்பு கயிறும் எந்திரமும் எடுத்துக்கொண்டு வந்துவிடுவது வழக்கம். மாப்பிள்ளை வெள்ளிப் பாத்திரத்தை

எடுத்துக்கொண்டு வர, அவனைச் சேர்ந்தவர்கள் மற்ற இரண்டையும் எடுத்துக்கொண்டு வருவார்கள். இவைகளை அவன் திருடிக்கொண்டுபோய்விட்டான் என்பது இதன் கருத்து. நான்காவது நாள் காலையில், மாப்பிள்ளை கல்யாணப்பந்தலில் பல சிறிய பாத்திரங்களில் ஆவாஹனம் பண்ணப்பட்டிருக்கும் முப்பத்துமுக்கோடி தேவதைகளுக்கும் முன்பாக தனது பெண்சாதி கழுத்தில் கறுப்புமணிகளும் ஒரு பொன்பொட்டும் கோத்துவைக்கப்பட்டிருக்கும் தாலியைக்கட்டுவான். அந்தச் சிறிய பாத்திரங்களுக்கு சமீபத்தில் அரிசியிலும் உப்பிலும் எழுதப்பட்டிருக்கும் இரண்டு யானை யுருவங்கள் இருக்கும். அந்தச் சிறிய பாத்திரங்களை ப்ரதக்ஷிணமாக வரும்போது, தம்பதிகள் இருவரும்பிரிந்து மாப்பிள்ளை உப்பிலே எழுதியிருக்கும் யானையினிடத்தும் பெண் அரிசியில் எழுதியிருக்கும் யானையினிடத்தும் நின்றுகொண்டு அவ்விரண்டு யானைகளையும் விலை பேசுவார்கள். இன்னொருமுறை ப்ரதக்ஷிணம் வந்து, பிள்ளை அரிசி யானையிடத்தும் பெண் உப்பு யானையிடத்தும் நின்றுகொண்டு விலை பேசுவார்கள். கல்யாணப் பெண்ணுக்கு திருப்பதி மரப்பொம்மைகள் இரண்டு கொடுப்பார்கள். அதை அவள் வாங்கிக்கொண்டு தன் கணவன் தலையில் அணிந்திருக்கும் மஞ்சளில் நனைத்த வேஷ்டியைக் குழந்தை தொட்டிலுக்காக வென்று வாங்கிக் கொள்வாள். இந்த வேஷ்டி முகூர்த்ததின்த்தன்று நனைத்துக் கட்டிக்கொள்ளப்பட்டது. பிறகு தம்பதிகள் குடும்ப விஷயமான சம்பாஷணைகளைச் செய்வார்கள். நான் வெளியில் அலைந்து வருபவனாதலால், நீ வீட்டுக்காரியங்களைச் செவ்வையாய்ப் பார்த்துக் கொள்ளவேண்டும் என்று மாப்பிள்ளை சொல்வான். அதற்குப் பெண் ஒத்துக்கொண்டு, குழந்தைகளைப் பார்த்துக்கொள்ளும்படி அவனிடத்தில் கெஞ்சிக்கேட்பாள்.

பிறகு அக்குழந்தைகளை (பொம்மைகளை) அங்கு வந்திருக்கப்பட்டவர்களுக்குக் காண்பிப்பாள். அவர்களும் அவற்றை வாங்கி உண்மையான குழந்தைகளைப்போல வைத்துக்கொண்டு கொஞ்சிப் பாடி விளையாடுவார்கள். சம்பந்திகளை, பெண்வீட்டுக்காரர் நாற்காலிகளில் உட்காரச் சொல்லி தக்க உபசாரங்கள் செய்து தங்கள் பெண்ணையும் அவர்களை நமஸ்கரிக்கும்படி செய்வார்கள். பெண் வணங்கினவுடன், அவர்கள் வெற்றிலை பாக்கும் மஞ்சளும் பெண்ணுக்குக் கொடுப்பார்கள். பிறகு, தம்பதியர் கைகோத்துக்கொண்டு வந்து விடுவார்கள். இவைகளே பிராமணர்களுக்குள்ள கல்யாணப் பொது வழக்கங்களுக்குமேல் மாத்வர்கள் கொண்டிருக்கும் சில அரிய சிறப்பு வழக்கங்கள்.

இதுபோலவே வைஷ்ணவர்களுக்கும் சில சிறப்பு வழக்கங்கள் உண்டு. கல்யாணத்தின் நான்காவது நாளில் சுபகைங்கத்தில், தம்பதிகள் மணையில் ஒருவருக்கொருவர் எதிர் எதிராக உட்கார்ந்துகொண்டு மஞ்சள் தடவிய தேங்காய்களை ஒருவர்பக்கத்திலிருந்து இன்னொருவர்பக்கம் போகும்படி உருட்டிக்கொண்டு இருக்கும்போது, அங்குகூடிய வைதிகர்கள், நாலாயிரப்பிரபந்தத்தின் ஒரு பாகமாகிய "வாரணமாயிரம்" என்று ஆரம்பிக்கப்படும் பத்துப் பாட்டுக்களைப் பாடுவார்கள். இச்செய்யுள், பெரியாழ்வார் மகளான ஆண்டாள் என்பவரால் சொல்லப்பட்டவை. இவரை வைஷ்ணவர்கள் பூதேவியின் அவதாரமாகச் சொல்லுகிறார்கள். இந்த அம்மாள் தனக்கு நினைவு தெரிந்தமுதல் ஸ்ரீரங்கநாதனையே கல்யாணம் செய்துகொள்வதாக எண்ணி அப்படியே முடித்துக்கொண்டவள். எண்ணப்படி தன்னை ரங்கநாதன் அங்கீகரித்துக்கொண்டதாகத் தான் கண்ட சொப்பனத்தைத் தன் தோழிக்குச் சொல்லிக்கொண்ட கருத்துடைய இச்செய்யுளைப் பாடினார். இந்தப் பூத்துப்

பாட்டும் படித்தானவுடன் ஒரு தாம்பாளத்தில் வெற்றிலை பாக்கு தேங்காய் பழங்களோடு சிறிது பணமும் வைத்து அந்த ஆண்டாள் பேருக்கு ஓதியிட்டுப் பிறகு அப்பணத்தை அங்கு வந்திருந்த வைதிகப் பிராமணர் பங்கிட்டுக் கொள்வார்கள். இதற்கு நாச்சியார் ஸம்பாவனை யென்று பெயர். பிறகு புரோஹிதர் எழுந்திருந்து பிள்ளைக்கும் பெண்ணுக்கும் இருவழியிலும் உறவாயுள்ளவர்களாய் அந்தப் பந்தலுக்கு வந்திருக்கப்பட்டவர்களுடைய பெயர்களைச்சொல்லி, அவர்களால் கொடுக்கப்பட்ட வேஷ்டியோ புடவையோ ரவிக்கைத்துண்டோ பணமோ அவற்றைப் பெண்ணுக்காவது பிள்ளைக்காவது, அவர்களின் இஷ்டப்படி கொடுப்பார்.

# மன்னன் மக்கள் எழுவர்.

முன்னொருகாலத்தில் ஓர் அரசனுக்கு எழு பேர் குமாரர்கள். அவர்கள் ஒவ்வொருவரும் ஆண்மையும் அழகுமுடையோர். அன்றியும் கல்விகேள்வியில் மிக்கார். அவர்களெல்லோரிடத்திலும் அவ்வரசனுக்கு எற்றக்குறைவு என்ற வேற்றுமை சிறிதுமேயில்லாமல் அவர்களை ஒரேவிதமாய்ப் போற்றிப் புனைந்து வந்தான். அவர்களுக்கு உண்டி, உடை முதலிய எல்லாவற்றையும் அணுவளவேனும் வித்தியாஸமில்லாமல் ஸரியாய்ப் பங்கிட்டுக்கொடுத்துவந்தான். அவர்கள் பெரிய பிள்ளைகளான பின்பு ஒவ்வொருவனுக்கும் தனித்தனியே வானத்தை முட்டவோங்கிச் சந்திரமண்டலத்தோடு உராயும்படியான அரண்மனைகளைக் கட்டுவித்து அவர்களுக்கு என்னென்ன வேண்டுமோ அவற்றையெல்லாம் அவற்றுள் அழகுபெற அமைத்துவைத்திருந்தான். ஒரு மாளிகையைப் பார்த்தால் மற்றொன்றைப் பார்க்கவேண்டாம். அவ்வண்ணமே அந்தச் செல்வச் சிறுவர்களும் நகமுஞ் சதையும்போலே ஒருவர்மேலொருவர் ஒற்றுமையாய் வாழ்ந்துவந்தார்கள்.

பின்பு அவர்கள் வயதில் முதிர்ந்து கலியாணஞ் செய்துகொள்ளுவதற்கேற்ற காலம் வந்திருப்பதைக் கண்டு களித்தானெனினும், மற்றவற்றையெல்லாம்போல ஒரேமாதிரியான பெண்களைக் காண்பது அஸாத்தியமாகையால், அதுவே சிந்தையாய்க் கலக்கமுங்கொண்

டான். ஆயினும் ஆசை பெரிதாகையால் தனது அமைச்சர்களை அழைத்து இப்பூமண்டலமெல்லாஞ் சுற்றித்திரிந்து எப்பாடுபட்டாயினும் கன்னிகையைத் தேடிக்கொண்டுவரவேண்டுமென்று கட்டளையிட்டான். அரசனிட்ட கட்டளையைத் தலைமேற்கொண்டு அம்மந்திரிமார்களெல்லோரும் உலகமுழுமையுஞ் சுற்றிச்சுற்றிப்பார்த்தும், குடிகுலம் சாயல் அழகு அந்தம் நடை பாவனை இவையனைத்தும் ஒத்திருக்கும்படியான பெண்கள் எங்காவது காணக்கிடைப்பார்களா என்று சிந்தை நொந்து திரும்பிவந்து சேர்ந்து, "வேந்தே! நாங்கள் தேடிப் பாராத விடமில்லை: ஸப்த த்வீபங்களிலுந் தேடினோம்; தங்கள் மனோரதத்தின்படியான பெண்கள் அகப்படவில்லை" என்று மொழிந்தார்கள். அரசன் தான் கொண்ட எண்ணம் நிறைவேற வழியொன்று மில்லாதிருப்பதைக் கண்டு ஏக்கமுற்றான். இதனை அறிந்த முதல்மந்திரி தனது அரசனது ஆறுத்துக்கத்தைப் போக்கக் கருதி, "அரசர்பெருமானே! தாங்கள் இந்த அஸாத்தியமான காரியத்தைச் செய்யவேண்டுமென்று சிந்திப்பதிற் பயனொன்றுமில்லை; இது விஷயத்தில் ஆண்டவன் திருவுள்ளப்படி நடக்கட்டுமென்று அவர் தலையில் பொறுப்பை வைப்பதே நலமென்று விட்டுவிடவேண்டும். ஆதலினால் தாங்கள் தங்கள் மக்களெல்லோரையும் ஒருங்கே வரவழைத்துக் கடவுளின் திருவுள்ளப்படி நடக்க அவர்களுக்குச் சம்மதந்தானாவென்று கேட்டறியவேண்டும்; அவர்கள் ஸரியென்று ஒப்புக்கொள்ளுகிற பக்ஷத்தில் கல்யாணத்தை எளிதில் முடித்துவிடலாம்" என்றான். உடனே அரசன் தன் குமாரர்கள் எழுபேரையும் வரவழைத்துக் கேட்க, அப்படி செய்வதில் தங்களுக்கு ஆக்ஷேபமொன்று மில்லையென்று அவர்கள் சம்மதித்த உடனே குமாரர் அத்தனைபேரும் கோட்டையின் உன்னதமான கோபுரத்தினுச்சிக்கு அழைத்துக்கொண்டுபோகப்பட்டார்கள். அங்கிருந்து பார்த்தால் நெடுந்தூரமளவும் நன்றாய்த் தெரியும். அவ்விடத்தில் எழு வில்லுகளும் எழு அம்புகளும் கொண்டுவந்து வைக்கப்பட்டிருந்தன. அரசன் அவர்களை நோக்கி, யாருக்கு எப்படி எப்படி இஷ்டமோ அந்தப்படியே அவற்றுள் ஒரு வில்லையும் அம்பையும் எடுத்துக்கொண்டு எவ்விடத்தை நோக்கி எய்யவேண்டுமென்றாலும் எய்யலாம். எவனுடைய அம்பு எந்த வீட்டில் விழுகிறதோ அந்த வீட்டிலிருக்கிற மடந்தையை அவன் மணந்தும் கொள்ளலாம் என்றான்.

அப்படியே அவர்கள் அம்பெய்ய முதல் ஆறுகுமாரர்களுடைய அம்புகளெல்லாம் சீமான்களும் வித்தியாவினயஸம்பன்னர்களுமான பிரபுக்களின் வீடுகளிற்போய் விழுந்தன. கடைசிப்பிள்ளை தொடுத்த அம்புமட்டும் அந்நகரத்தைத் தாண்டி அதற்கு நெடுந்தூரத் திற்கப்பாற் சென்று பெரிதான ஆலமரத்தின் கொம்பொன்றில் தொத்திக்கொண்டிருந்த பெண் குரங்கன்டை போய் இலையோடு இலையாய் ஒட்டிக்கொண்டது. அது சென்ற வேகத்தினால் அது இன்னவிடம் போயிற்றென்று அறிவதற்கு நெடுநேரமாயிற்று. இவ்வாறு அவனெய்த அம்பானது குரங்கிருந்த கிளைக்குச் சென்றதைக் கேட்ட அவ்வரசன் தான் கனவிலும் நினைத்திராதபடி பெண்குரங்கொன்றைத் தன்மகன் மணம்புரியும்படி விதிப்பயனால் வாய்ந்திருப்பதை யெண்ணியெண்ணிச் சிந்தாக்கிராந்தனானான். ஒருவன் வானரத்தை மணம்புரிவது கூடாமையாதலின் அரசன் முதலானோர் ஒன்றுகூடி இன்னுமொருமுறை அவன் வில்லை எடுத்து அம்பைப் பூட்டி எய்வதே நலமென்று சொல்ல, அவ்விளங்குமாரன் அப்படிச் செய்வது ஈசன் செயலுக்கு எதிர்த்தட்டுப்போலாகுமாதலால் வேண்டாமென்று மறுத்துவிட்டான். "தந்தைசொன் மிக்க மந்திரமில்லை" என்றிருந்தாலும், ஐயனே! என்து ஸகோதரர்களெல்லோர்க்கும் நல்ல மனைவியாய் வாய்த்தது அவர்கள் முற்பவத்திற்செய்த புண்ணியத்தின் பயனாகும்; என் தலையில் ஈசன் இவ்வாறெழுதியிருக்கையில் நான் அதை எவ்வாறு மறுக்கற்பாலது? இது என் விதிப்பயன்; இதைப்பற்றி நான் சிறிதும் கவலைப்படவில்லை; அன்றியும் நான் மற்றவர்களைக் கண்டு பொறாமை கொள்ளவுமில்லை; நான் ஸத்தியமாய்ச் சொன்னபடியல்லவோ செய்துவருகிறேன்? இதனைப்பற்றித் தாங்கள் என்னை இன்னொருமுறை அம்பு எய்ய வேண்டுமென்று சொல்லுவதை உலகம் ஒவ்வாது; நமது வாழ்நாள் புல் நுனியிலுள்ள நீர்போல நிலையற்றது; மனித ஜன்மமெடுத்தவர்களுக்கெல்லாம் இறப்பும் பிறப்பும் மாறிமாறிவருவது ஸஹஜமேயாம்; நான் சொன்ன சொல் பொய்படவேண்டாம்; குரங்கை மனிதர் மணம் புரியாரென்பதை நான் நன்றாய் அறிவேன்; நான் அவ்வாலமரத்தடிக்குச்சென்று அதன் கிளையில் வாழ்கின்ற மர்க்கடத்தைக் கொண்டுவந்து அதி ஸுகமாய் வைத்துக்கொண்டிருக்கப்போகிறேன்" என்று உறுதி

யாய்ச் சொல்லிவிட்டு அந்த மந்தி இருக்கும் மரம் நோக்கிச் சென்றான் மாமன்னன் பெற்ற மணிச்சிறுவன்.

இது இப்படியிருக்க மற்றைய மக்கள் அறுவர்க்கும் கடிமணம் வெகு விமர்சையாய் நடந்தது; அந்தக்காலத்தில் அவ்வூர் முழுவதும் மத்தாப்பு முதலிய வாணவேடிக்கையினால் இரவு பகல்போல் ஆயிற்று; எங்கும் வாத்தியகோஷமாயிருந்தது; ஆடல் பாடல்கள் களிப்பாய் நடந்தன; வீடுகள்தோறும் விருந்தும் கேட்டலுமாயிருந்தது; பூரண கும்பங்கள் நிறைந்திருந்தன; வீதிகளிலெல்லாம் தோரணங்கள் நாட்டப்பட்டிருந்தன; பட்டண முழுவதுமே களிப்பாய்க் கொட்டுமுழக்குமாயிருந்தது. அந்நகரில் அரண்மனையில் தக்கப்பட்டுக்கொண்டிருந்தவன் குரங்கோடு குடியிருந்த எழாவது ராஜகுமாரன் ஒருவனேயாம். அவன் அந்தக் குரங்கின் கழுத்தில் வயிரதாரிழைத்த கழுத்துப்பட்டையுஞ் சங்கிலியுமாய் அணிவித்து, மகமல் மெத்தை தைத்த நாற்காலியில் உட்காரவைத்து, "பேதைக்குரங்கே! எங்கும் மணக்கோலமாய் பட்டணமுழுதும் அல்லோலகல்லோலப் படுகையில் நீயும் நானுமே ஏனென்று கேட்பாரற்றிருக்கிறோம்; ஆயினும் உன்னை நான் ஸுகமாய் வைக்கப்பார்க்கிறேன்; நீ விசாரப்பட வேண்டாம்; இந்தத் தங்கச்சங்கிலியைக் கெட்டியாக இழுக்கவேண்டாம்; நீ பட்டினியாய் வருந்தவேண்டாம்" என்று ஓர் தங்கக்கிண்ணியில் பஞ்சபக்ஷ்ய பரமான்னத்தை அதற்குப் படைத்தான். கண்டோர் கேட்டோரெல்லோரும் இவனைப் பித்துடையவனென்றும் மூடனென்றும் பிடிவாதஞ் செய்கிறவனென்றும் வெவ்வேறு விதமாக நினைத்து ஏசினார்கள்.

அரசனுக்கு இரவும் பகலும் அதுவே விசாரமாய் மந்திரிமுதலானோர்களோடு அவனை எவ்வண்ணஞ் சீர் திருத்தலாமென்று ஆலோசித்தார்கள். எந்தவகையிலாயினும் அவனுக்குப் புத்திசொல்லி நல்ல வழியில் திருப்பி மற்றவர்களைப்போல அவனும் நல்ல மனைவியை யுடைந்து ஸுகமாய் வாழ்ந்திருக்கவேண்டுமென்று பார்த்தான். உற்றாரும் பெற்றாரும் அவனுக்கு எவ்வளவுதான் யுத்தி சொல்லியும் அவன் செவிகொடாமலே, "நான் வாயினாற்சொன்னசொல்லை இனி மாற்றுவது கூடவே கூடாது; சத்தியம் பிறழ்வது மானிடர்க்கு அழகன்று; சத்தியம் பிறழ்வது தெய்வசம்மதமுமன்று" என்று உறுதி

யாய்ச் சொன்னான். நாளுக்கு நாள் அவனுக்கு அக்குரங்கினிடத்து அதிக விசுவாசமுண்டாயிற்று. அவ்வண்ணமே அக்குரங்கு தன் முகக்குறியால் அன்பைக் காட்டியது.

சின்னாட்கழித்தபின்பு அவ்வேந்தன் தன் குமாரர்கள் எழு பேரையும் வரவழைத்து, "என் கண்மணிகளே! நீங்கள் எல்லோரும் உங்கள் மனைவிமார்களோடு நன்றாய் இல்லறவாழ்க்கை புரிந்துவருகிறீர்களென்பது எனக்குச் சந்தோஷமே; கடைசிப் பிள்ளைக்குக் குரங்கு கிடைத்ததென்றாலும் அவனும் அதை வைத்துக்கொண்டு ஏதோ ஸுகமாகக் காலங்கழித்து வருவதிலும் எனக்கொருவாறு ஸந்தோஷந்தான். எனக்கு என்னுடைய மருமகளெல்லோரையும் பார்க்கவேண்டுமென்கிற ஆசையுண்டு" என்றான். அதற்கு மூத்த மகன் அப்படிச் செய்வதனால் அதிக ஸந்தோஷமென்றான். அரசன் அதற்கிணங்க, மூத்தகுமாரன் பேரானந்தங்கொண்டு தன் மனைவியோடு சொல்ல, அவள் தன்னை வெகு அழகாய்ச் சிங்காரித்துக் கொண்டாள். அரசனுக்குப் பெருவிருந்து நடந்தது; அவன் தன் மகனுக்கும், மருமகளுக்கும் அளவற்ற செல்வத்தை யளித்தான். இவ்வண்ணமே மற்றைய ஐந்து குமாரர்களும் ராஜோபசாரங்களில் ஒன்றுமே குறைவின்றி அதிக விமரிசையாய் ஒருவர்பின்னொருவராக ஆடம்பரமாய் விருந்து செய்து, அபரிமிதமான ஆடை ஆபரண முதலிய பெரும் பரிசுகளையெல்லாம் பெற்று மகிழ்ந்தார்கள். இறுதியாக எழாவது மகன் முறை வந்தது. அவனோ குரங்கோடு கொஞ்சிக்குலாவிக்கொண்டிருந்தான். அவனுக்கு இன்னபடி தன் தந்தையை உபசரிக்கலாமென்று ஒன்றுமே தோற்றவில்லையாதலால் சிந்தை நொந்தான். தன்னிடமிருந்த குரங்கு ஊரிலுள்ள மற்றக் குரங்குகளையெல்லாம்போலக் கோடிதாயிராமல், சாந்தமும் அன்பும் அறிவும் அடக்கமும் பழக்கமுமுள்ளதாயிருந்ததைக்கண்டு சந்தோஷித்து அதனண்டைபோய், "பேதைக்குரங்கே! நான், இப்பொழுது என்ன செய்வேன்; உனக்குப் பேசத்தெரிந்தால் நீ இந்தவேளையில் எனக்கு எத்தனையோ ஆறுதல் சொல்லுவாய்; என் ஸ்ஹோதரர்களெல்லோருமே என் தந்தைக்குத் தங்கள் தங்கள் வீடு வாசல் முதலிய எல்லாவற்றையுங்காட்டிக் களிக்கச்செய்தார்கள்; அவரை இங்கே வரும்படி அழைக்கவும் எனக்கு வெட்கமாயிருக்கிறது; முன்பே அவர்களெல்

லோரும் என்னை வேண்டியமட்டும் பழித்தாயிற்று; நான் உன்னை அவருக்குக் காட்டினால் அவர்கள் என்னை எத்தனை பரிகாஸஞ் செய்யார்!" என்றான். இத்தனையையும் அந்தக் குரங்கு நன்றாய் உற்றுக் கேட்டுத் துக்கமுற்றுப் பெருமூச்சுவிட்டது. இருந்தாற்போலிருந்து அக்குரங்கு அவனை நோக்கி, "ஸ்வாமீ! தாங்கள் இவ்வாறு நெஞ்சம் புண்பட்டுக் கரைந்துருகவேண்டாம்; தங்கள் ஸகோதரர்கள் போய் அழைத்தபடியே தாங்களுஞ் சென்று அவரை இங்கே விருந்துக்கு எழுந்தருளும்படி அழைத்துவரலாம்; மற்றவர்களைப்போல் அரசனை மட்டுமென்றல்ல; அவனைச்சேர்ந்த மந்திரிமார்கள் முதலிய பரிவாரங்களையும், ஸகலமான ஸேனைகளையும் கூடவே அழைத்துவரும்படி பிரார்த்திக்கவேண்டும்" என்றது. இதைக் கேட்டதும் ராஜகுமாரன், "ஆண்டவனே! நீ செய்கின்ற மாயத்தை யாவர் காணவல்லார்!" என்று சொல்லிவிட்டு அப்படியே சென்று அழைத்தான் அருட்பெருஞ்சோதி யடியிணைமறவா அக்குமாரன். இதைக்கேட்டவர்கள் எல்லோரும் அவனை ஒன்றுமே தெரியாத முழு மூடனென்றே எண்ணினார்கள். இப்படியிருக்கையில், அந்தக் குரங்கு அவனை நோக்கி, மெல்ல ஜாடை காட்டி யழைத்தது. அதன் பின்பு ராஜகுமாரன் அதனோடு பன்முறை பேசியும் அது முன்னிருந்ததுபோலவே ஒன்றுஞ்சொல்லாமலிருந்தது. பேசிக்கொண்டிருந்த குரங்கு திடீரென்று பேச்சை நிறுத்திவிட்டதனால் அவனுக்கு அது பேசியதுபோலத தோற்றியது கனவோ நினைவோவென்று ஸந்தேகமாயிற்று. இப்படி அவன் ஸங்கடப்படுகையில், அக்குரங்கு அவனை இங்கிதத்தாலே அழைக்கக்கண்டு அங்குச்சென்று, "என் கற்பகமே! நீ என்னோடு பேசாதிருப்பதேன்? நான் நீ சொன்னபடியே அரசனை எல்லாப் பரிவாரத்தோடும் இங்கு விருந்துக்கழைத்துவிட்டுவந்தேன்; நான் இதுபொழுது செலவுக்கென்னசெய்யட்டும்? பணமிருந்தாலன்றோ எல்லாப் பெருமையையும் பெறலாம்; நான் செய்யவேண்டுவதென்னவிருக்கிறது? நீ என் என்னோடு உரையாடாதிருக்கின்றாய்? உன் வாய் அடைத்துப்போயிற்றோ என்ன?" என, அது அப்பொழுதும்வாய் திறவாதிருந்ததைக்கண்டு, தான் கண்டதும் மற்கடத்தோடு மனமகிழப்பேசியதும், நினைவினின்றெழுந்த கனவேயென்று நிச்சயித்துக்கொண்டான். அவன் என்னசொல்லியும் அது வாய் திறக்கவே

யில்லை. கடைசியில் அது ஒரு ஓட்டாங்கற்சில்லையெடுத்து அவனை அதை வாங்கிக்கொள்ளென்று சைகை செய்தது. ராஜகுமாரன், அதனை எடுத்துப்பார்க்கையில், அதில், "நான் பேசவில்லையென்பதைக் கண்டு கலங்கவேண்டாம்; என்னை எங்கிருந்து அழைத்துவந்தீரோ அங்கே போம்; இதை அந்த மரத்திலுள்ள பொந்துக்குள்ளே எறிந்துவிட்டு, அங்கிருந்து என்ன உத்தரம் வருகிறதென்று நீர் காத்திரும்" என்று எழுதியிருந்தது. அவன் அந்தக் குரங்கு சொன்னபடியே நடந்தால் ஒன்றுமே வீணாகாதென்றும், அதில் ஏதோ தேவ ரஹஸ்யமிருக்கிறதென்றும் ஸந்தேஹந்தீர்ந்து அந்த மரமிருக்குமிடந் தேடிச்சென்றான். அவ்வாலமரம் சாகோபசாகையாய் நெடுந்தூரமளவும் படர்ந்து ஆகாயத்தை முட்ட வோங்கி வளர்ந்திருந்தது; அதன் நிழலில் அரசர்கள் தங்கள் பெரும்படையோடு தாராளமாய்த் தங்கி வசிப்பதற்கிடமுண்டு. இந்த ராஜகுமாரன் அங்கே போனவுடன் அந்தச் சில்லை அதன் பொந்திற்குள்ளே யெறிந்துவிட்டுக் குரங்கு சொன்னபடியே காத்திருந்தான்; சற்றுநேரங்கழித்ததும், அதிரூபலாவண்யமுடைய மங்கையொருத்தி குலுங்கப் பணிபூண்டு வெளியே வந்து அவனைத் தன்னோடு அந்தப் பொந்தின்வழியே வரவேண்டுமென்றும், அது தங்கள் மஹாதேவியார் இட்ட கட்டளையென்றும் மொழிந்தாள். ராஜகுமாரன் அதனுள்ளே நுழைந்து செல்லுகையில், முதலில்மட்டும் காடும் மேடும் அந்தகாரமுமாய், பின்பு போகப்போக ஜோதிர்மயமாய் ஆச்சரியமான சிங்காரத் தோட்டமுந்தூரவுமாய், அதற்கப்பால் எழு நிலை மாடமொன்றிருந்தது; அங்கிருந்த மரங்களெல்லாம் பொன்மயமாயிருந்தன; இலைகள் மரகதம்போன்றிருந்தன; நிரைநிரையாய் மரங்கள் அழகாய்ச் செழித்திருந்தன; எக்காலத்திலும் அருவிகள் நீர்களைவென்று அவற்றிற்குப் பாய்ந்துகொண்டிருந்தன; அவ்வருவிகளுக்குள்ளும் வெளியேயும் நவரத்தினங்கள் பிரகாசித்தன: அந்தத் தெள்ளிய நீர் அமிர்தம்போன்றிருந்தது; அன்னம், நீர்க்காக்கை, மயில், குயில் முதலிய பறவையினங்கள் கூட்டங்கூட்டமாயிருந்தன; அங்கே நெடுந்தூரமளவும் கந்தங்கமழ்ந்தது.

பின்னும் நிமிஷத்துக்கு நிமிஷம் நிறம் மாறிக்கொண்டிருந்ததனால் பலவகையான மத்தாப்புகள் எரிவதுபோலப் பிரகாசித்தது; அந்தத் தோட்டத்தை ஒட்டினாற்போல ஓர் பெரிதான தடாகமிருந்

தது; அதன் ஜலம் ஸ்வர்ணவர்ணமாயிருந்தது; அதினின்று அலை கள் ஒங்கியடித்து அவற்றின் திவலைகளால் ஆகாயமுழுவதும் தண் ணென்று குளிர்ந்திருந்தது; அந்தக் குளத்தின் வடகோடியில் ஸல வைக்கல்லாலிழைத்த பன்னிரண்டுவாசல்களுடைய அழகான சைத் தியோபசார மாடமொன்றிருந்தது. அதற்குள்ளே செல்லும்படித் தங்கப் படிக்கட்டின் வழியாக அவன் அழைத்துக்கொண்டுபோகப் பட்டான். அவ்வண்ணமான அற்புத மாளிகையை அவன் எங்குங் கண்டதில்லை; அதற்குள்ளே அழகே வடிவெடுத்து வந்தாற்போன்ற கட்டழகி யொருத்தி திவ்யமான கொலுமண்டபத்தில் வீற்றிருப்ப தைக்கண்டான். அவளைக் கண்டளவில் அவன் மெய்மறந்து, தான் வந்த காரியத்தையும் அவளோடு சொல்லமாட்டாமல் திகைத்துநின் ருன். அவள் அவனை நோக்கி, "நீர் வந்த காரியம் இன்னதென்று நானறிவேன்; சிந்தையை விட்டுவிடலாம்; நீர் வீடுபோய்ச்சேரலாம்; நாளை காலை நேரத்திற்குள்ளே உமது பிதாவை உபசரிப்பதற்கேற்ற படி ஸகலமுஞ் சித்தமாயிருக்கும்; நான் அந்தப்படியே என் வேலை யாள்களோடு சொல்லித் திட்டஞ்செய்திருக்கிறேன்" என, ராஜ குமாரன் பேரானந்தங்கொண்டு அவளுக்கு வந்தனஞ்செய்துவிட்டுச் சென்ருன். அவன் தன் அரண்மனை போய்ச் சேர்ந்தவுடன் தான் ஆலமரத்தண்டை சென்று ஓட்டாங்கற்சில்லை அதன் பொந்தில் விட் டெறிந்ததும், அங்கே மஹாலட்சுமியைப்போன்ற சீமாட்டியைக் கண்டு அவளது அநுக்கிரகம் பெற்று வந்ததுமான எல்லாவற்றையும் அந்தக் குரங்கினிடம் விண்ணப்பஞ்செய்தான். அவனுக்கு அதுவே நினைவாய், இரவில் சிறிதும் தூக்கம் வரவில்லை. பொழுது விடிந்து எழுந்தவுடன் தான் கண்டதும் கேட்டதுமான ஆச்சரியமும் பார்த்த புதுமையும் பொய்யோ அல்லது மெய்தானேவென்று பார் க்கும்படி அவன் சற்றுநேரங்கழித்ததும் தன் அரண்மனைக்கு வெளி யேவந்து பார்க்கையில், இதற்குமுன்னெல்லாம் பாழாய்க்கிடந்த விடமெல்லாம் இந்திர பவனம்போல் அதிரமணீயமாயிருந்தது. வெள்ளக்கணக்கான ஜநங்கள் தன் தந்தைக்குப் பெரு விருந்திடச் சன்னத்தமாயிருந்தார்கள். அங்கிருந்து அரசன் அரண்மனைவாச லளவும் வழி நெடுகிலும் விதம் விதமான பழந்தருமரங்கள் குலை தாங்காதபடி சாய்ந்து வரிசை வரிசையாய் ஒரே ஒழுங்காய் வளர்ந் திருந்தன; அவற்றின் ஓரமாய்த் தெளிந்த ஜலத்தையுடைய அருவி

கள் இருமருங்கும் சலசலவென்று அழகாய் ஓடிக்கொண்டிருந்தன. விசித்திரமாகச் சித்திரிக்கப்பட்ட அரிதான விலையுயர்ந்த ரத்னகம்பளங்கள் அவ்வழி முழுவதிலும் நடைபாவாடையாக விரிக்கப்பட்டிருந்தன; வெவ்வேறான நிறங்களையுடைய கொடிகள், வருக! வருக! வென்று எதிர்கொண்டழைப்பதைப்போல ஆடிக்கொண்டிருந்தன; புருஷர்களும் பெண்டுகளும் எங்கே பார்த்தாலும் கூட்டங்கூட்டமாக விருந்திடுவதைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள். எங்கும் பாட்டுங் கூத்துமா யிருந்தன; இவற்றையெல்லாம் பார்க்கையில் அவையனைத்தும் தெய்வச்செயலென்று கண்டு களித்தான்.

அவன் தன் மாளிகைக்குச் சென்றதும், சற்றுநேரத்துக்குமுன்னேதான் அதினின்று புறப்பட்டவேளையிலுங்கூட ஒன்றுமில்லாதிருந்துபோக, இப்போது இந்திரஜாலம்போல் பதினாயிரம்பேர் வந்தாலும் பசியாற வுண்ணும்படியான உணவுப்பண்டங்களால் நிறைந்து, அவற்றைப் பரிமாறுவதற்கென்று உயர்ந்த ஆடையாபரணங்களைத்தரித்த புருஷர்களும் பெண்டுகளும் ஆயிரக்கணக்காய் வந்து நிற்பதைக் கண்டளவில், எல்லாம் ஈசன்செயலென்று கண்டு உளமகிழ்ந்தான். பதினெண் வாத்தியங்களும் முழங்கின; தேனும் நெய்யும் பாலும் ஆடைத்தயிரும் அண்டாக்களில் கொட்டி நிறைக்கப்பட்டிருந்தன; அந்த அரண்மனை சிங்காரிக்கப்பட்டிருந்ததைப் பார்க்கப் பதினாயிரம் கண்கள் வேண்டும். அப்பொழுதுதான் பக்குவமான போஜனபதார்த்தங்கள் சமசமவென்று மணத்துக்கொண்டு இருந்தன; வாஸனைத் திரவியங்கள் நெடுந்தூரமளவும் கந்தங்கமழ்ந்தன.

இந்த விந்தையையெல்லாம் அந்த ராஜகுமாரன் பார்த்து ஆச்சரியப்பட்டிருக்கையில் அழகான ஆடைகளை யணிந்திருந்த ஓர் ஒற்றன் அரசனிடமிருந்துவந்து, மஹாராஜா அவர்கள் தமது எல்லாப் பரிவாரத்தோடு இதுபோழ்து இவ்விடத்துக்கு விஜயஞ் செய்யப் போகிறாரென்று சொன்னான். அவன் இதைக் கேட்டமாத்திரத்தில் தன் தந்தையை எதிர்கொண்டு அழைத்துவரும்படி விரைந்து சென்றான். அவ்வாறான உத்தமமான உண்டியை, அவர்கள் ஒருநாளுங் கண்டதுமில்லை; கேட்டதுமில்லை; நவரத்னமிழைத்த பொற்கிண்ணங்களிலும் வெள்ளிக்கிண்ணங்களிலும் விதம் விதமான பதார்த்தங்கள் வைக்கப்பட்டிருந்தன. விருந்துண்டவர்களையெல்

லாம் தாங்கள் போகும்போது அந்தப் பாத்திரங்களையும் அவர்கள் எடுத்துக்கொண்டுபோகலாமெனக் கேட்ட அரசன் முதலான அத்தனைபேரும் ஆச்சரியப்பட்டார்கள்.

இதற்குமுன்னெல்லாம் தனது கடைசிக்குமாரன் கதி இப்படியாயிற்றேயென்று துக்காக்கிராந்தனுயிருந்த அவ்வரசன் அத்தனையையும் உடனே மறந்து தன் மகனை நோக்கி, "என் கண்மணியே! இத்தனை சிறந்த பொருள்களை எப்படி யடைந்தாயென்றும் கேட்க விரும்பவில்லை; நான் இத்தனைகாலமாக உண்டிராத தேவாமிர்தம் போன்ற சிறந்த உண்டியை எப்படிப் பெற்றுயென்பதைப்பற்றிக் கேட்க விரும்பவுமில்லை: உனது ஆசை மனைவியை நான் பார்த்து அவளை ஆசீர்வதித்துவிட்டுப் போகவேண்டுமென்பது ஒன்றுமட்டுந்தான் நான் கொண்டிருக்கிற பெருங்கவலை யென்றுன். யதார்த்தத்தில் அரசன் தன் குமாரர்கள் எல்லோர் வீட்டுக்கும் விருந்துண்ணப் போகவேண்டுமென்று ஏற்பாடு செய்ததின் கருத்தானது, அவன் தனது கடைசிப்பிள்ளை கொண்டிருக்கும் விபரீதமான புத்தியை மாற்றி, அவனை ஓர் அழகான மடந்தையை மணம்புரிந்துகொள்ளச் செய்யவேண்டுமென்றேயாம். "தந்தைசொன்மிக்க மந்திரமில்லை" என்றிருப்பதால் அந்த ராஜகுமாரன் சிறிது வெட்கப்பட்டானென்றாலும், அவன் மனங்கோணுதிருத்தற்பொருட்டு, ஐயனே! அப்படியே செய்கிறேனென்று அவனைத் தாழ்ந்து வணங்கினுன்.

அவன் தந்தையிட்ட கட்டளையைச் சிரமேற்கொண்டு வெட்கத்தையெல்லாம்விட்டு மெள்ள மெள்ள உள்ளே சென்று அந்தக் குரங்கிருந்த அறையின் கதவைத்திறந்து அதனுள்ளே சென்றுன்: அங்கெங்கும் ஜோதிர்மயமாய்ப் பளிச்சென்று வெளிச்சமாயிருந்தது. அதைக்கண்டு அவன் கண் கூசிற்று. ஆயினும் சற்று நிதானித்துப் பார்க்கையில் அழகிய ரத்னசிங்காதனத்தில் கட்டழகி ஒருத்தி வீற்றிருந்தாள். அதற்கு முதல்நாள் தான் ஆலமரத்தின் பொந்துக்குள்ளே சென்று கண்டு பேசின அந்தச் சுந்தரியே அங்கே வந்து வீற்றிருந்தாளென்று கண்கூடாய்க் கண்டான். தனக்கு இத்தனை காலமளவும் உயிர்க்குயிராய் நற்றுணையா யிருந்ததான அந்தக் குரங்கை அங்கெங்கும் தேடித் தேடிப் பார்த்தும் காணவில்லை. அவன் அக்குரங்கைக் காணுமையால் திகைத்துப்போய் நிற்பதைக் கண்ட அச்சிற்றிடைப் பொற்றொடியாள், "என் ஆசைக்கண்ணாளா!

நான் உம்மைக் குகையிற் கண்டதுமுதல் என் பிராணனெல்லாம் உம்மிடத்திலேயே யிருக்கிறது; நான் அந்தக் குரங்கைப் போகச் சொல்லிவிட்டு இங்கே வந்து காத்திருக்கிறேன்; நான் உம்மை மணந்துகொள்ளவேண்டுமே, இதற்கென்ன சொல்லுகிறீர்” என்றாள்.

இம்மாற்றங் கேட்ட மாத்திரத்தில் ராஜகுமாரனுக்கு அடங்காக்கோபம் வந்து, ‘அடி, பாவி! என்னோடிருந்த என் அருமையான குரங்கை என்ன செய்தாய்? நான் அந்தக் குரங்கை விட்டுவிட்டு உன்னை மணம்புரிவது தர்மமாகுமோ? நான் சத்தியஞ் செய்து கொண்டல்லவோ அதனை விட்டுவிடப் பிரியாது பாதுகாத்து வந்தேன்; சத்தியம் பிறழ்வது உத்தமனுக்கழகாமோ? அங்கே நான் உன் அழகைக் கண்டல்லவோ மோஹித்து மோசம் போனேன். நீ இத்தனை கொடியவளாயிருப்பாயென்பதை நான் அறிந்திருந்தால் உன்னை நம்பியிருக்கமாட்டேன்; ஏதோ என் தலைவிதி இப்படிக்கொண்டுவந்துவிட்டது’ என்று அங்கலாய்த்து நெடுமூச்சுவிட்டான் பிறர்மனை நயவாப் பெருஞ்சீர்த்தியுடையான் புதல்வன்.

அதுபொழுது அந்தத்தேவதை, “மன்னர்குல திலகமே! என்னைக்கண்டு உமக்கு என்மீது ஆசை பிறவாவிடினும் நான் உமக்குச் செய்த உதவிக்குக் கைம்மாறாகவாவது என்னைக் கைப்பிடித்து மணம் செய்துகொள்ளவேண்டாமோ? நான் உமது தந்தைக்கு விருந்திட்டு நன்கு உபசரித்தற்பொருட்டு பட்டபாடுகளையெல்லாம் நீர் பார்க்கவில்லையோ? மானிடராகிய உங்களுக்குள் இவ்வாறான விருந்து என்றைக்காவது நடந்ததாகக் கேட்டதுண்டோ? ஆ! அருமைமிகு தருமதுரையே! பெருமையும் உரிமையும் ஒருங்கே வாய்ந்துள்ள உத்தமகுணமுடைய சத்தியந்தவறா எத்திசைப்போற்றும் இளவலே! நீர் என்னைத் தட்டாது கட்டாயமாய் மணந்துகொண்டு என்னை உமக்கு உரியாளாக்கிக் கொள்ளவேண்டும். இவ்வுலகத்தில் சங்கநிதி பதுமநிதி யென்று சொல்லப்படுகின்ற ஏன்னென்னவுண்டோ அவற்றையெல்லாம் உமக்கு எளிதிற் கொண்டுவந்து கொடுப்பேன்” என்று புன்னகைகொண்டு அன்போடு மொழிந்தாள். இம்மாற்றங் கேட்கவே, அவனுக்கு அடங்காக்கோபமுண்டாய், “தெய்வப்பெண்கள் நாயகமே! நீ இப்படிக்கெல்லாம் எனக்குத் துணைநின்று உதவி புரியவேண்டுமென்று உன்னை நான் பிரார்த்தித்ததுண்டோ? நீ இவ்

வாறு மாயஞ்செய்து என் அருமைக்குரங்கைக் கைப்பற்றிக்கொண்டு போய் என்னை மோசஞ்செய்வாயென்று நான் கனவிலும் நினைத்த தில்லை; நீ எப்படியாயினும் என்னிடமினிதுற்றிருந்த வானரத்தை மீண்டும் கொண்டுவந்து ஒப்புவிக்கவேண்டும்; நீ எனக்குச் செய்த உபகாரத்துக்குப் பிரதி யுபகாரமாக நான் உனக்கு ஆயுள்காலமெல் லாம் அடிமையாயிருந்து என் உயிரையும் கொடுத்துவிடச் சித்தமா யிருக்கிறேன்'' என்று சினந்து கூறினன். இப்படிச் சொன்னதும் தவிர அவள் காலிலும் விழுந்து கும்பிட்டான். அவன் இப்படிச் செய்ததைக் கண்ட அந்தத்தேவதை தானிருந்த ஆஸனத்தைவிட் டெழுந்தோடி வந்து அவனிடத்துள்ள ஆசைப்பெருக்கால் மட்டு மரியாதையோடு இனிய முகத்தளாய் அதிக நயத்துடன், ஹே! பொய்யுரையாத் தூயமன முஷட்ய செய்தவமிருந்த செல்வமணியே! கேண்மின்! நான்தான் அந்தக் குரங்கு ரூபமாயிருந்தவளென்று அறிவீராக; உமக்கு என்னிடத்தில் மனப்பூர்வமாய் எவ்வளவு அன்பு இருந்ததென்பதை யறியவேண்டுவதற்காகவே இப்படிக்கெல்லாஞ்செய் தேன்; நான் போர்த்திருந்த குரங்குத்தோல் இதோ பாரும்! இந்த மூலையிலே கிடக்கிறது'' என்றாள். அங்குக் கிடந்த வானரத்தின் தோலைக் காணவே அத்தியானந்தத்தால் ஒருடம்பு ஈருடம்பாய்ப் பரவசமானன் பாக்கியம்பெருகிடும் யோக்கியகுணாளன்.

உடனே அந்தத் தெய்வமாது ராஜகுமாரனது கையைப்பிடித்து அழைத்துக்கொண்டுபோய்த் தானிருந்த திவ்வியாஸனத்தில் அவனை யுங்கூடவே யிருக்கும்படி யேற்றி இருவரும் ஏகாஸனத்தில் ஒற்று மையாய் வீற்றிருந்தார்கள். அதன்பின் அந்தத் தேவதை அந்தச் சிங்காஸனத்தைப்பார்த்து, "ஆஸனமே! வயிரமிழைத்த ஸபாமண்டபம் நோக்கிச் செல், செல், செல்" லென்று மும்முறை மொழியவே, அது அந்த க்ஷணமே ஆகாயமார்க்கமாய்க் கிளம்பி, அத்தனைபேருங் கண்டு வியப்புறும்படி அழகாய்ச் சென்று கீழே இறங்கிற்று; ராஜகுமாரன் அவளைத் தன் தந்தையாரின் ஸந்நிதா னத்திற்கு அழைத்துக்கொண்டுபோய்க் காட்டினன். இந்த ஆச் சரியத்தைக் கண்டு அங்கிருந்தவர்களெல்லோரும் அடங்கா மகிழ்ச்சி யடைந்த பெருமையைப்பற்றிப் புகலவும் வேண்டுமோ? "அவனன்றி யோரணுவு மசையாது" என்பது இதற்கு நேர்மையென்னலாமன் றோ! அவர்கள் அத்தனைபேரும், அவன் ஒரு குரங்கை வைத்துக்

கொண்டு, யார் என்ன சொல்லியும் கேளாமலே முரட்டாட்டமாய் இருப்பதற்காக அவனை அவமானப்படுத்தவேண்டுமென்று எண்ணங் கொண்டே வந்திருந்தவர்களாதலால் திடுக்கிட்டுப்போய்த் திக்குத் திசை தெரியாமல் மலைத்தார்கள். அவ்வரசன் தான் இத்தனைகால மாய்ப் பட்ட வருத்தத்தையெல்லாம் அடியோடு மறந்து ஆநந்தஸா கரத்திலாழ்ந்து தன் புதுமருமகளுக்குத் தான் இதற்குமுன்னே மற் றவர்களுக்கெல்லாங்கொடுத்த பரிசிலிலும் பன்மடங்கு அதிகமாகவே அளித்தான். உத்தமனான அந்தச் சத்தியவான் "ஸத்தியமேஜயம்" என்ற வேதவாக்கை உறுதியாக நம்பியிருந்ததனால் அவனுக்கு இத்தனை பாக்கியவதியான கற்புடைய மனையாள் வாய்த்தாள் என் றும், குபேரஸம்பத்தைப் பெற்றானென்றும் எல்லோருங் கண்டு குதூகலித்தார்கள்.

அந்தக் கடைசிப்புதல்வனுக்கு, இத்தியாதி ஸம்பத்துக்கள் கிடைத்த வைபவத்தைக் கண்டுப் பொறாமைகொண்ட அவன் ஸகோதரர்கள் அறுவர்க்கும் வயிற்றெரிச்சல் உண்டாயிற்று. ஆகலினால் அவனை எந்தவிதமாகவாயினும் முன்னுக்கு வரவொட் டாதபடி கபடமாய் ஒன்று சேர்ந்து அழித்துவிடும்படி தீர்மானித்தார் கள். பின்பு ஒருநாள் அவர்கள் நல்ல ஸமயம் பார்த்து, "எங்கள் அருமைத் தம்பி! உனக்கு மனைவியாக வந்திருக்கின்றவள் யோகினி யென்று துணி. அந்தச் சாதிக்கோ இன்னார் இனியாரென்பது தெரியாது; அந்தப்பேய் தன்மேல் போர்த்திருந்த குரங்கின்தோல் உன்னிடமிருக்கிறதென்று கேள்விப்பட்டோம். அதை நீ என் பத் திரப்படுத்தி வைத்திருக்கவேண்டும்? பேய்களுக்கெல்லாம் க்ஷணம் சித்தம், க்ஷணப்பித்தமாயிற்றே; நினைத்தமாத்திரத்தில் கோபங் கொண்டு முன்போலக் குரங்கின் தோலையெடுத்துப் போர்த்துக் கொள்ளும். ஆதலினால் அந்தத் தோலை நீ இக்கணமே யெடுத்துச் சுட்டெரித்துப் போடுவதே நன்று" என்று அகத்தில் கபடமும் முகத் தில் களையுங்கொண்டு துருபதேசஞ் செய்தார்கள். இது விஷ யத்தைப்பற்றி அவன் சிந்தித்துப்பார்த்ததில், அவர்கள் சொன்னதே ஸரியென்று நினைத்து, அந்தத் தோலை யெடுத்திக்கொண்டுபோய் நன்றாய் எரிந்துகொண்டிருந்த ஓர் உலையில் வீசியெறிந்தான்.

அந்த க்ஷணமே அந்த அக்கினி ஜ்வாலையிலிருந்து ஒருத்தி, கண்

டோர் பிரமிக்கும்படியாகப் பெருங்குரல்பாய்ச்சி அழுங்குரலைக்கேட்டமாத்திரத்தில் 'யாவற்றுக்கும் ஸத்தியமே நித்தியப்பராஞ்டார்' என்று தியானிக்கும் சுத்த மனத்தனான ராஜகுலச் சிறுவன், நடுக்கமுற்று இதென்ன பெருங்கூத்தென்று உற்றுப்பார்த்தான். அந்த மோஹினியே அத்தியின்மீது நின்றுகொண்டு, "ஐயோ! நான் எரிந்துபோகிறேனே, எரிந்துபோகிறேனே; என்னுடம்பெல்லாம் வெந்து கன்றிப்போய்விட்டதே" என்று கதறுவதைக் கண்டான். அவன் அப்படிக் காணவே இடியேறுற்ற மரம்போலப் பதைபதைத்துத், தன்னுடைய ஆசைக்கண்ணாட்டி உயிரோடிருக்கிறாளோ அல்லது தான் பார்த்தபடி எரிந்துபோனாளோவென்று பார்க்கும்படிச் சென்றான். அங்கே சென்றதும், தான் சற்றுமுன்னே அங்கே கண்டபடியே இறந்துபோனாளென்று நிச்சயித்தான்; அங்கிருந்த அரண்மனை முதலியன யாவுமே முன்னொருகாலத்தில் காண்டவ வனத்தை அக்கினி தேவன் அழித்ததுபோலவே வெந்து நீறாயிருந்தது கண்டு அழலிலிட்ட இழுதுபோலுருகினான் கபடச்சொல்லை உபநிடதவார்த்தையென்றுணர்ந்த ஒன்றுமறியா வுத்தமப்புதல்வன்.

அப்பொழுதுதான் அவனுக்குத் தன் ஸஹோதரர்கள் கபடமாக தன்னை வஞ்சித்து அவ்வாறு அந்தக் குரங்கின்தோலைக் கொளுத்தச் சொன்னார்களென்ற மோசவார்த்தை மனத்தில் வெளிப்பட்டது. அந்தவேளையில் அதுதான் ஏற்ற சமயமென்றெண்ணி, அவன் தந்தையும் மந்திரிமார்களும் அவனையழைத்து, "சிறுவனே! உனக்கு என் இந்தக் குரங்குப்பிடி? ஆகாய ஸஞ்சாரிகளாகிய தேவதைகளுக்கும் பூலோகவாஸிகளாகிய நமக்கும் கொள்வனை கொடுப்பனை செய்துகொள்வது ஏற்குமோ? இதெல்லாம் கண்கட்டி வித்தையைப்போல உடனே மறைந்துபோகுமன்றோ? அவள் மோஹினியாதலால் இவ்வாறாயிற்று" என்றார்கள். அவர்கள் அவனைத் தேற்றத்தேற்ற அவனுக்கு முன்னிலும் அதிகமான துக்கமுண்டாயிற்று. அதைக்கண்ட அரசன், அதிக வ்யஸனத்தால் தன் மகன் தன் வாளை மாய்த்துக்கொண்டு மாண்டுபோனாலென்செய்கிறதென்ற அச்சத்தினால் அவனைச் சுற்றிலும் போதுமானபடி காவல்காரர்களை வைத்துவிட்டு அவனது மனோநிலைமையைக் கண்டு சொல்லும்படி திட்டஞ்செய்து சென்றான். அதுமுதல் தனக்கு அவளைத் தேடும்படி வெளியே போகவும் வாய்க்காமல் தாமரை யிலையின்மேலுள்ள

தண்ணீரைப்போல மனந்தளும்பிஞன் மாயப்பேச்சால் மதிமயங்கி விதிவசத்தாலிப்படியான வேந்தன்புதல்வன்.

ஆயினும் அவன் எப்படியோ அர்வகளை வஞ்சித்துக் காவலைக் கடந்து பட்டணத்துக்கு வெளியோடிப்போய், நேரே அந்த ஆல மரத்தைத் தேடிப்போஞன். அந்த ஆலமரமிருந்தவிடமும் அக்கினி பாதையால் சாம்பலாய்ப்போயிருந்தது. அந்த விசாரத்தால் தலையி லும் வயிற்றிலும் அடித்துக்கொண்டு அவளைக் காணுமாறு ஊரூரா யலைந்து காயுங்கிழங்கும் புஜித்து கண்ட தண்ணீரைப் பருகி நேர் எதிர்ப்பட்ட மரத்தின்கீழ் தங்கிப் பரிதாபமா யழுதழுது தேடத்தொ டங்கிஞன். நாடெங்குந் தேடிக் காடுமேடெல்லாந் திரிந்ததனல் காலும் உழன்று மெய்யும் சோர்ந்து நெஞ்சம் புண்ணுஞன். அங்கு ஒருவன் ஒற்றைக்காலில் நின்று, "நான் உன்னை ஒருமுறை கண்டு இருக்கிறேன்; மீண்டுங் காண்வாராயோ" என்று சொல்லுவதைக் கண்டு, இருவர் துக்கமும் ஒன்ருயிருக்கிறதென்றறிந்தான்; அவனது உடலம் எலும்புந்தோலுமாய் ஒட்டிப்போயிற்று; கண் குழியாய்ப் புதைந்து கிடந்தது; தாடி தொங்கித் தலைமயிர் சடையிட்டது; சுருங்கச்சொல்லின் மனிதவடிவமென்பதுமட்டுந்தான் தோற்றியது; அத்துறவி அவனைக் கண்டு யாரென்று கேட்க, "அருளுடையாய்! நாஞெர் மன்னன்மகன்; வேட்டையாட வந்ததில் பரிஜனங்களைவிட் டுப்பிரிந்தேன்; ரதிதேவிபோன்ற ஓர் கட்டழகியைக் கண்டேன்; அவள், 'நான் எரிந்துபோகிறேனே; நான் எரிந்துபோகிறேனே; வெந்து நொந்தேனே; வெந்து நொந்தேனே" என்ருள் என்ருன். அம்மாற்றங் கேட்டவளவில் அவன் பாவியேன் ஆராயாது செய்து பாழ்பட்டேனே! என் காதல் மனையாளைக் கொன்றவன் நானே; அவள் எவ்விடத்திற்குச் சென்ருளென்று எனக்குச் சொல்லவேண் டும் என்ருன். அவன் சொன்னபடி அவளைத் தேடப்போகையில், அவனை மீண்டுமழைத்து, "ஓ, வழிநடப்பவனே! உனக்கு மங்கள முண்டாகுக. நீ மீண்டும் அம்மாதரசியைக் காணப்பெற வேண்டும் என்று ஆண்டவனை வேண்டுகிறேன்! அப்புடிக் காண்பாயாயின் என் மீது அருள்புரிந்து அவளை எனக்கு ஒருமுறை காட்டவேண்டும்" என் ருன். "நீ என்னை மறவாமலிருக்கும்படியாக இந்த இரும்புக்கம்பி யைக் கையோடு காவலாகக் கொண்டுபோ; இது அடையாளமாக இருக்கட்டும்" என்ருர் அந்த மஹாயோகி. "இது யாரிடமிருக்கு

மோ அவன் வேண்டும்படிக்கெல்லாம் செய்யும்; நீ யாரையேனும் அடியென்று சொன்னால் இது அவனை யடித்துத்துகைத்துப் பிண்டமாகப் பிடித்துவிடும்; ஏதேனும் ஆபத்து ஸம்பவித்தால் உற்ற துணையாகும்" என்று கொடுத்தார். ராஜகுமாரன் நல்லதென்று அதை வாங்கிக்கொண்டு சென்றான்.

அவன் செல்லாத நாடில்லை; விடிந்தெழுந்தால் அந்திபட்டால் அவனுக்கு அதுவே விசாரமாய், 'கண்மணியே! கண்மணியே!' என்று கதறுவான். கரடுமுரடான காடுமேடெல்லாஞ்சுற்றிச்சுற்றி அவன் கால் தேய்ந்து பாளம்பாளமாக வெடித்துப் புண்ணாயிற்று. இவ்வாறு நெடுங்காலமளவும் யாத்திரை செய்ய, ஓர்நாள் திவ்யமான அரண்யம் கண்ணிற்பட்டது; அதைச் சுற்றிலும் பாலைவனம். நாவெல்லாமுலர்ந்து பசியால் மெலிந்திருந்த வருத்தத்தையெல்லாம் அங்கே ஒருவாறு போக்கினான். அங்கே யகப்பட்ட இனிய காய் கனி கிழங்குகளைத் தின்று, தெள்ளிய தண்ணீரைப் பருகிச் சற்று இளைப்பாறினான். அங்கே யாரோ வீணாகானஞ் செய்வதுபோன்ற செவிக்கினிய வோசை கேட்டது. அப்படிப் பாடியது யாரென்றறிய விரும்பி அந்தத்தொனி வந்தவழியே அடர்ந்த சோலைக்குள்ளே நுழைந்துபார்க்கையில், காளைப்பருவமுடைய ஸுந்தரபுருஷனொருவன் வீணை வாசிப்பதைக்கண்டான். அதைக் கேட்டானந்திப்பதன் பொருட்டு அவ்வரணியத்திலிருந்த பறவையினங்களும், மிருகராசிகளும் அவனைச் சுற்றிலுஞ் சூழ்ந்து தன் மயமா யசையாது நின்றதைக் காண்கையில், அது சித்திரப்படந்தானோவென்று ஐயுறற்பாலதாயிற்று. அவன் வீணாகானஞ்செய்தானபின்பு பெருமூச்செறிந்து 'நான் உன்னை ஒருமுறை கண்டிருக்கிறேன்; இன்னொரு தரம் காண வாராயோ" என்று மிக்க ஆழ்ந்த துயரத்தோடு சொன்னான். அதைக்கேட்ட ராஜகுமாரன் அவனை நீ யாரென, அவன், "நான் ஓர் வணிகன் மகன்; நான் இந்த மார்க்கமாய்ச் சென்றபோது அணங்குநல்லாள் ஒருத்தி, "நான் எரிந்துபோகிறேனே; நான் எரிந்துபோகிறேனே; வெந்து நொந்தேனே, வெந்துநொந்தேனே!" என்றழுத குரல் கேட்டது. அதுமுதல் நான் இவ்விடத்திலேயே யிருக்கிறேன்; அது கடந்து ஆறுமாதமாயிற்று," என்றான். அது கேட்டு, தான் அவளுடைய கொழுநனென்றும், அவளைத் தேடுவதற்கென்றே தான் வந்திருப்பதாகவும் சொன்னான். வைசியன்

தன்னிடமிருந்த வீணையை அவன் கையிற் கொடுத்து, அதை வாசித்தால் அந்தத் தொனியைக் கேட்கும் ஜீவராசிகளெல்லாம் அப்படியே ஸ்தம்பித்து நிற்குமென்றான். அதை அவன் வாங்கிக் கொண்டு அவனுக்கு வந்தனஞ்செய்துவிட்டு தான் அவளைக் காண்பானாயின் அவளை அவனுக்குக் காட்டிவிட்டுப் போவதாகச் சொல்லிவிட்டு விடைபெற்றுக்கொண்டு சென்றான்.

இவ்வண்ணம் அவனும் பலவாறான ஆபத்துக்கள் ஒன்றின்மேலொன்றாய்நேரச் சங்கடப்பட்டானென்றாலும் ஆண்மையோடு ஒன்றுக்குமஞ்சாமல் தைரியமாய் உலையாமுயற்சியோடு எங்குந்தேடிச் சென்றான். எப்படியோ பல மாதங்களளவும் யாத்திரை செய்ததில் ஆகாயத்தை முட்ட வோங்கி வளர்ந்திருந்த ஒரு பர்வதத்தினருகே போனான். அதன் மேலேறிச் செல்லும் வழியிலிருந்த அகாதமான பள்ளத்தாக்குகளை காண்கையில் எப்படிப்பட்டவர்களுக்கும் நடுக்கமெடுக்கும். அதன்மேல் டனிக்கட்டிகள் பாறைபாறையாய் உறைந்திருந்தது. அதின்மேல் அணிலைப்போலத் தொத்தித் தொத்தித் யேறுகையிலும் வழுக்கிவிட்டது; அதற்கும் அஞ்சாமலே யேறிப் போனான்; அதிக கஷ்டப்பட்டு அம்மலையின் உச்சிக்குச் சென்றதும், ஒருவன் தைனியஸ்வரத்தோடு "நான் உன்னை ஒருமுறை கண்டேனே; இன்னுமொருமுறை காணவாராயோ" என்று சொல்லி வ்யஸனப்பட்டதைக் கேட்டான். அவ்வாறு புலம்பியழுதது யாரென்று அங்கெங்குந்தேடிப்பார்த்தும் அவன் கண்ணிற்குப் புலப்படவில்லை. அதன்பின்பு அவன், "இந்த நிர்மானுஷ்யமான இடத்தில் இப்படி யழுகிறது யாராயிருப்பினும் துக்கத்தால் வருந்துகின்ற பாவியேன் கண்ணிற்குப் புலப்பட்டு என்னைக் கடைத்தேறச் செய்யமாட்டாரோ" என்று கதறினான். உடனே, உடம்பெல்லாம் இளைத்து வெள்ளை வெளேரென்று பாச்சைபோல வெளுத்துச் சோர்வடைந்திருந்த ஒரு சிறுவன் எதிரே காணப்பட்டான். அவனைக் கேட்டதற்கு, "ஒரு வருஷத்திற்கு முன்னே ஸர்வாங்கஸுந்தரி யொருத்தி, "நான் எரிந்துபோகிறேனே; நான் எரிந்துபோகிறேனே; வெந்து நொந்தேனே; வெந்து நொந்தேனே" என்று அழுததைக்கேட்டேன். அது முதல் நான் இங்கே அவளைக் காணவேணுமென்று காத்திருக்கிறேன் என்றான். அதற்கவன், "அந்த மடமானைக் கொன்ற சண்டாளன் நானே; நான் அவளைக்காணுமாறு இங்கே தேடவந்

தேன்; அவள் உயிரோடு காணப்படின்,நான் அவளை உயிர்ப்பிக்க வல்லேன், என்றான். அதற்கு அவன்,“ அப்பா! இந்தக் குல்லாயைத் தருகிறேன் வாங்கிக்கொள்; இதைத்தலையிலேயே போட்டுக் கொண்டிருந்தால் உன்னை யாருங்காணவல்லராகார்; இந்த ஆச்சரியத்தை நீயே நேர்நின்று கண்டுமிருக்கிறாய் ஆதலினால் இது உன் பிரயாணத்தில் நன்றாய்ப் பயன்படும்” என்றான். அவன் நல்லதென்று அவனுக்கு வந்தனஞ்செய்துவிட்டுச் சென்றான்.

பின்பு அவன் அம்மலையின் மேலே ஏறஏற, ஏறுவது அஸாத்தியமாயிற்று. உதகமண்டலத்துக்கு மேலே செல்லச் செல்ல குளிரால் தேகமாத்தியந்தம் நடுக்கமுற்று, ரக்தம் உறைந்து, மூச்சுவிடக்கூடாமையாயிற்று. இத்தனை ஸங்கடங்களையும் பொறுத்து அதற்கும் மேலேறிப் போனபோது, அங்கேயோர் ஆலயமிருக்கக் கண்டான். அது முழுமையும் பனியினாலாக்கப்பட்டது; அதன் கம்பம், உத்தரம், சட்டம், வரிச்சல், கூரை முதலிய யாவுமே பனியாலே வெகு அழகாயமைக்கப்பட்டது. அதனுள்ளே நுழைந்த மாத்திரத்தில் அத்யுஷ்ணமாய் தேகத்திற்கு மிகவும் ஆரோக்கியமாயிருந்தது. அதனுள்ளே ஒரு யோகி நிஷ்டையிலிருந்தார்; பூமியின்மேல் நிராதாரமாய் அதிக உயரத்தில் வீற்றிருந்தார்; அவர் தேகம் சுடரொளி விட்டிலங்கியது; அவர் தலைக்கு மேலே ஸூர்யகிரணம்போலே ஜொலித்தது; அவரை அவன் கண்டளவில் கைகட்டி வாய் புதைத்து, அதிக பயபக்தியோடு நின்றான். சற்று நேரம் கழித்ததும் அவர் நிஷ்டையினின்று கண்ணைத் திறந்து குளிர்ந்த கடாக்ஷத்தோடு அவனை நோக்கி, “உனது வரலாறனைத்தையும் நான் நன்றாய் அறிவேன்; நீ மோகினியைத் தேடிவந்திருக்கிறாய்; அவள் மேருமலைச் சிகரத்தில் தன் பிதாவின் மாளிகையிலிருக்கிறாள்; நெருப்புப்பட்டு புண் இன்னும் ஆறவில்லை; இந்தச் சாந்துச் சிமிழைக்கொண்டுபோ; இது எவ்வகையான கொடிய புண்ணையும் எளிதில் ஆற்றவல்லது; இந்த பாதக்குறடு ஜோடியையும் வாங்கிக்கொண்டுபோ; இவற்றின் துணையால் நீ நினைத்த இடங்களுக்கெல்லாம் எளிதிற் செல்லலாம்” என்று பரிவோடுசொன்னார். அவன் அவற்றைப் பெற்று அவரை நமஸ்காரஞ் செய்துவிட்டு, அந்தப்பாதக்குறடுகளைக் காலில்மாட்டிக் கொண்டபின், மோஹினியிருக்கும் நகரத்தைச் செல்லவிரும்பினான். அவன் அப்பொழுதே ஆகாய மார்க்கமாய் யக்ஷராஜாவின் தேசத்

திற்குச்சென்றான். அரசன் அரண்மனைக்கு உடனே போவது ஸரி யல்லவென்றெண்ணி அந்த நகரத்துக்கு வெளியே ஓர் ஏகாந்த மான மடத்திலே வசித்திருந்தான்.

அதன் பின்பு அந்தக் குல்லாயைத் தலையிலே யணிந்துகொள் ளவே, அவன் அந்நகரத்திற்குள் சென்று அங்குள்ளவற்றையெல் லாம் நன்குணர்ந்தான். குல்லாயின் மஹிமையால் அங்கே ஒருவர் கண்ணிலும் படவில்லை. அந்நகரம் அதிக விநோதமாயிருந்தது; அவர்கள் தேவஜாதிகளாதல்பற்றி மனிதர்களைவிட எத்தனையோ சிறப்புடையவர்கள். ஆண்பாலார் யாருமே மன்மதனைப்போலவும் அவ்வண்ணமே பெண்பால்யாவரும் ரதிதேவியாரைப்போலும் அதிக ஸௌந்தரியமுடையவர்களா யிருந்தார்கள். அங்கு அரசகுமாரன் கைகட்டிக் குல்லாயை யணிந்து அரண்மனை ஆஜாரவாசலின் வழி யாகவும், இன்னுந் தனக்குத் தோற்றியபடியெல்லாம் தட்டுத்தடை யின்றியுஞ் சென்றான். கடைசியில் நேரே அந்தப்புரத்துக்குச்சென்று தன் மனைவியிருந்த அறைக்குட் புகுந்தான். அவள் அங்கே படுக் கையிலே படுத்தபடி அதிக பலவீனையாயிருந்ததைக் கண்டுதெளிந்து பேரானந்தங்கொண்டு, இனிமேலுந் தாமதிப்பது யுக்தமல்லவென்று அதைவிட்டு வெளியே வந்துவிட்டான்.

அவன் அந்நகரத்தினின்றும் வெளியே வந்தவுடன், தான் வந்த காரியத்தை நிறைவேற்றிக்கொண்டு போவதற்பொருட்டு ஓர் யோகி யைப்போல மாறுவேடம்பூண்டு குல்லாயைத் தலையிலிருந்தெடுத்து விட்டு வீணையையெடுத்துப் பாடினான். அற்புதமான அந்த வீணையின் மஹாத்மியத்தினால் அது நகரமெங்கும் பரந்து அங்கிருந் தவர்களெல்லோருடைய கருத்தையும் கவர்ந்தது. அங்கிருந்த யக்ஷ ஜாதியாரெல்லோருமே அவனைச் சூழ்ந்து நின்று ஆநந்தபரவசமா னார்கள். இச்செய்தி சற்றுநேரத்திற்குள்ளே அரசன் காதில் படவே, அது மெய்தானோவென்று காணுமாறு அங்கேசென்று செவிகுளிரக் கேட்டுப் பிரமித்துப்போய், "துறவியாரே! என்மீதருள்புரியவேண் டும். நான் அடிகளிடத்து ஓர் விண்ணப்பஞ்செய்துகொள்ளுகிறேன்; என் மகள் நெருப்புப்பற்றிப் பாயும் படுக்கையுமாய்ச் சாகக்கிடக்கி றாள்; பூலோகத்திலுள்ள ஓர் படும்பாவி செய்த கொடுமையால் இக் கோலமானாள். தாங்கள் எப்படியாவது அவளை அநுகூலப்படுத்த வேண்டும்; பெரியோரே! அவள்தான் எனக்குக் கண்ணுக்குக் கண்;

இந்த முதுமைப்பருவத்தில் அவள்தான் எனக்குற்ற துணை. அவளு டைய விதிப்பயனால் வந்துற்ற தீவினையைத் தீரும். நீர் என்ன வரங் கேட்டாலுந் தருகிறேன்" என்றான். அதற்கு அந்த அர்ஜுன ஸந் நியாஸி, "வேந்தே! நாங்கள் ஆண்டவனுக்கு அடிமைப்பட்டவர்க ளாதலின், வேறு யார் வீட்டு வாசலையும் மிதிக்கிற வழக்கமில்லை; நீர் உமது புத்திரியை இவ்விடத்திற்கு அழைத்துவருவீராயின், அவளுக் காகக் கடவுளைப் பிரார்த்தித்து நோயைத் தீர்ப்பேன்" என்றான். அதற்கு அந்த யக்ஷராஜன் மிக வணங்கி, "எம்பெருமானே! என் மகளுக்கு இடம் வலம் புரளத் திறமில்லை; அவளைத் தூக்கினால் பிராணன் போய்விடும்போலத் தர்ப்பலமாயிருக்கிறாள். ஆதலினால் தாங்கள் அடியேன்மீது கிருபை செய்து, எனது கிருஹத்திற்செழுந் தருளி தேவரீர் திருவடித்தூள்களால் அதைப் பாவனமாக்கவேண்டும் என்றான். அவன் அத்தனை பெருமையாகத் தன்னை மதித்து வருந்தி அழைத்ததனால் அவனது வேண்டுகோளுக்கிணங்கினான். உடனே யக்ஷர்களால் தூக்கிக்கொண்டுவரப்பட்ட சிவிகையின் மீதேற்றி அா சனது அரண்மனைக்கழைத்துக்கொண்டு சென்றார்கள். அரசன் அவனைத் தன் அந்தப்புரத்திற்கு அழைத்துச் சென்று தன் மனையா ளிருக்குமிடஞ்சென்று அவளைத் தன் மகளண்டை கொண்டுபோய் விடும்படி பணித்தான். அவன் அவ்வறைக்குச் செல்லும்போது மோகினி தூங்கிக்கொண்டிருந்தாள்; அவன் தன்னிடமிருந்த சாந் துச்சிமிழைத் திறந்து, அதிலிருந்த குழம்பை யெடுத்துச் சேடிமார் கள் கையிற்கொடுத்துக் காயம்பட்டிருந்தவிடத்தில் அதைத்தடவும் படிச்செய்தான். அந்தக்குழம்பு புண்ணிற்பட்ட மாத்திரத்தில் அப்புண் முழுவதும் நன்றாய் ஆறிப்போக, அவள் பளிச்சென்றுதன் படுக்கை யை விட்டெழுந்து உட்கார்ந்தாள். கணப்பொழுதிற்குள்ளே இவளுக்கு குணமான செய்தி பட்டணமெங்கும் பரந்து அவன் தன் வந்திரி பகவானுடைய அம்சந்தானேயென்னும்படி மஹா வைத்திய னென்று பிரஸித்திபெற்றான்.


அவ்வாறெழுந்த மோகினி அவன் முகத்தைக் கண்டளவில், அவன் தன் கணவனென்றறிந்துகொண்டு அவன் பேரைச் சொல் லிக் கூப்பிட யத்தனித்ததைக் கண்டு, அந்த ரகஸியத்தை வெளிப்ப டுத்தவேண்டாமென்றும், வெளிப்பட்டால் பிரமாதமுண்டாகுமென் றும் அவளோடு ஜாடையாய்ச் சொல்லித் தடுத்துவிட்டான். அரசன்


தன் செல்லமகள் பிழைத்தெழுந்ததைக் கண்டு ஸந்தோஷித்து, நன்றி மறவாது, "தூய்ய முனிவரே! இஷ்டமான வரனைக் கேட்டுக்கொள்ளலாம்" என்றான். அதற்கு அவன், "அரசர் பெருமானே! உமது மகளை எனக்குப் பாணிக்கிரகணஞ்செய்து கொடுக்கவேண்டும்; இது தான் நான் உம்மை வேண்டுவது" என்றான். இத்தனை துணிகரமாய்த் தன் மகளைக் கலியாணஞ் செய்து கொடுக்கும்படிச் சொன்னதைக் கேட்கவே, கோபாவேசங்கொண்டு, "இத்தனை துணிச்சலா இவனுக்கு? இந்த விதண்டா வாதக்காரனை பிடித்துச் சிறையிலடையுங்கள்; இவனது கெடுபுத்தியினால் இவன் செய்த நன்மையனைத்தும்சாம்பலிற்பெய்தஆஹுதியைப்போல வீணாயிற்று;" என்றான். அவர்கள் தன்னைப் பிடிக்கும்படி வர, அவன் உடனே தன்னிடமிருந்த குல்லாயைத் தலையிலேயே வைத்து யாவராலுங் காணவொண்ணாதபடி மறைந்து, அக்கணமே தான்வைத்திருந்த இரும்புக் கம்பியையெடுத்து, அவ்வரசனையும், அவனைச்சேர்ந்தவர்களையும் நொய்யப்புடைக்கவேண்டுமென்றேவி விட்டான். அது அவர்களை அடித்த அடியால் அவர்கள் முதுகெல்லாம் புடைத்துப்போயிற்று. ஆளில்லாமல் இரும்புத்தடிவந்து எல்லோரையும் அடித்து நொறுக்குவதைக் காணவே, அவ்வரசன் நடுநடுங்கி ஸமாதானத்திற்கு வந்து, "அருந்தவ முனிவரே! நான் செய்த பிழையைப் பொறுத்து மன்னித்தருள வேண்டும்; தங்கள் திருவுருவத்தைக் காண்பிப்பீராக; தாங்கள் விரும்பினவற்றையெல்லாங்கொடுக்க இனித்தடையொன்றுமில்லை" என்று சபதஞ்செய்து கொடுத்தான். அதற்கு அவன், "எனது திறத்தைக் காட்ட நான் இந்தத் தடியை ஏவி விட்டதைப்பற்றி விசனப்படுகிறேன்; நீர் இப்பொழுது உமது பெண்ணைக் கொடுப்பதோடு நீர் செய்த குற்றத்திற்காக, உமது ராஜ்யத்திற்குள்ளே அழகிற் பேர் போன மூன்றுபேர் பாங்கிமார்களையும், உமது ஸ்ரீபண்டாரத்திலிருக்கும் விலைபெற்ற வயிர ஆபரணங்களையும் கொடுக்கவேண்டும்; அன்றியும் தேவதைகளுக்குமட்டுமே உரியதான காமசாரியான புஷ்பகம்போன்ற ஓர் விமானத்தையுங் கொடுக்கவேண்டும்;" என்றான். அவன் அந்தப்படியே மோகினியையும், அவளுக்குத் துணையாக மூன்று பெண்மணிகளையும், ஓர் அழகிய விமானத்தின் மேலே ஏற்றிக்கொண்டுவந்து, வேண்டிய வயிர ஆபரணங்களோடு கொடுத்தான்.

தான் வரும் வழியில் தனக்கு முன்னே துணையாய் நின்று நல்லுதவி புரிந்த யோகியையும், குல்லாய் வீணை இரும்புத்தடி இவற்றைக்கொடுத்தநண்பர்கள் மூவர் ஆகிய இவர்களெல்லோரையுங்கண்டு கொண்டாடினான். அவர்களத்தனைபேரும் அவன் மோகினியை அழைத்துக்கொண்டு தங்கள் கண்காண வந்ததைக்கண்டு மகிழ்ந்தார்கள். துறவியார் ஒருவர் நீங்கலாக மற்றமூவர்களும் அவன் பிரார்த்தனைக்கிணங்கி அவனோடு அவனது நகரத்துக்குச் சென்றார்கள். அவனும் மோகினிக்குத்துணையாக வந்த அந்த மூன்று கட்டழகிகளையும் முறையே அவர்களுக்கு ஆடம்பரமாக மணஞ்செய்வித்து எல்லோரும் நெடுங்காலமளவும் சுகமாய் வாழ்ந்திருந்தார்கள்.

பொறாமைகொண்ட அவன் ஸகோதரர்களின் பாடு எப்படியாயிற்றென்று யாரும் அறிய விரும்புவார்கள். அவர்கள் பிதாவான அரசன் செவியில் அப்பாவிகள் செய்த மோசமெட்டியவளவில், அவன் சீற்றங்கொண்டு தாயபாகமும் அவர்களுக்கில்லையென்று சொல்லி, அவர்களை ஆயுள்காலமெல்லாம் கடுங்காவலிலிருக்கும்படி தீர்மானித்தான். ஆயினும் கிருபாநிதியான அந்த ராஜகுமாரன் தன் ஸகோதரர்களை அப்படிச் செய்வது தருமமல்லவென்று வேண்டிக்கொண்டதனால், அவனும் இரக்கங்கொண்டு ஒருவாறு போதுமான அளவுக்கு அன்ன வஸ்திரத்துக்குமட்டுங் கொடுத்துச் சிறையிலிருக்கும்படி விதித்த தண்டனையையும் மாற்றினான்.

அன்பில். ஸ்ரீ. வேங்கடாசாரியர்.






உபாத்தியாயர்:—"பிள்ளைகளே! பொறுமையென்பது தன்னை யடித்தவரையும் மன்னித்தல் தான்."

கிருஷ்ணன்:—"ஆமாம் அய்யா! நான் அப்படித்தான் செய்தேன்."

உபாத்தியாயர்:—நல்லது. அவன் அடித்தபோது உனக்கேன் கோபம் வராமல் இருந்தது?"

கிருஷ்ணன்:—"இல்லை அய்யா! கோபம் வந்தது. ஆனால் நான் பொறுத்துக்கொண்டேன்."

உபாத்தியாயர்:—"நீ பொறுத்துக்கொண்ட காரணமென்ன?"

கிருஷ்ணன்:—"என் பகைவன் தடியனாயும் என்னைக் காட்டிலும் பெரியவனாயும் இருந்ததுதான்."

மாஜிஸ்ட்ரேட்:—(குற்றவாளியைப்பார்த்து) "ஏன் நேற்றிரவு அவர் வீட்டுக்குப்போய் இருந்தாய்?"

திருடன்:—"என் வீடென்று எண்ணிப்போனேனய்யா."

மாஜிஸ்ட்ரேட்:—ஆனால், ஏன் அவ்வீட்டுக்காரிவரைக் கண்டவுடன், ஜன்னலிலிருந்து குதித்து ஜலதாரைப் பாலத்தில் ஒளிந்துகொண்டாய்?"

திருடன்:—"அந்த அம்மாளை என் பெண்ஜாதியென்று எண்ணியப்படிப் பயந்து போனேன்."

பங்கஜம்:—"அம்மா! மழை எங்கிருந்து வருகிறது?"

தாயார்:—"அது வானத்திலிருந்து வருகிறது."

பங்கஜம்:—(சிறிதுநேரம் ஆகாயத்தைப்பார்த்து ஆலோசித்துவிட்டு) "ஏனம்மா! நக்ஷத்திரங்களெல்லாம் இந்தப் பூமியைவிடப் பெரியவைதானே?"

தாயார்:—"சில நக்ஷத்திரங்கள் பெரிதாயிருக்கின்றன."

பங்கஜம்:—ஆனால், அவைகளைத் தாண்டி மழை எப்படிக் கீழிறங்கும்?"

ராமன்.—"அம்மா! உனக்குக் கதை கேட்கப்பிடிக்குமாடி?"

லக்ஷ்மி.—"ஏண்டாப்பா! அந்தக் கதை நிஜமாயிருந்தால் நன்றாய்க் கேட்பேன்."

ராமன்.—"ஆனால், கதை சொல்பவரை யடிக்கமாட்டாயே!"

லக்ஷ்மி.—"ஒருகாலுமில்லை. உண்மையான கதையாயிருந்தால்எனக்குக் கோபமே வராது."

ராமன்:—ஆனால் சொல்லட்டுமா?"

லக்ஷ்மி:—"சொல்லு."

ராமன்:—"ஸ்ரீரங்கம் என்று ஒரு ஊருண்டு. அதில் லக்ஷ்மி அம்மாள் என்று ஒரு பிராமணஸ்திரீ உண்டு. அவளுக்கு ஒரே ஒரு பிள்ளை. அவன் பெயர் ராமன். அந்தப் பையன் ஒருநாள் தன் தாயாருக்குத் தெரியாமலே உள்ளே வைத்திருந்த பக்ஷணத்தையெல்லாம் எடுத்துச் சாப்பிட்டு விட்டானாம்."

மாஜிஸ்ட்ரேட்:—(கைதியைப்பார்த்து) உனக்கு யாராகிலும் தெரிந்தவர்கள் இங்கு இருக்கிறார்களா?"

கைதி:—"இருக்கிறார்கள். அதோ நிற்கிறாரே ஹெட்கான்ஸ்டேபிள். அவரே எனக்கு மிகப் பழகியவர்."

ஹெட்கான்ஸ்:—(வெறுக்கப்பார்த்து)"அய்யா! எனக்கு இவனைத் தெரியவே தெரியாது."

கைதி:—"அய்யா! இவர் பொய் சொல்லுகிறார். நான் திருநெல்வேலியிலிருந்து இவ்வூருக்கு வந்து இருபது வருஷமாக இத்தொழில் செய்துகொண்டிருக்கிறேன். நான் இப்போதுதான் முதல்தடவையாக அகப்பட்டுக்கொண்டேன். இவருடைய நல்ல சிநேகிதமில்லாவிடில், இத்தனை நாள் தப்பித்திருக்க முடியாது."

உவாத்தியாயர்.—"கிருஷ்ணா! உஷ்ணத்துக்கும் சீதளத்துக்குமுள்ள சிறப்பான குணங்கள் என்ன?"

கிருஷ்ணன்.—"ஐயா! உஷ்ணம் வஸ்துக்களை அகலும்படி செய்விக்கும். குளிர் வஸ்துக்களைச் சுருக்கும்."

உவாத்தியாயர்.—"அது எப்படி? ஒரு உதாரணங் காட்டு."

கிருஷ்ணன்.—(சற்று ஆலோசித்துப் பின்) "ஐயா! உஷ்ணகாலத்தில் பகல் நீண்டும், குளிர்காலத்தில் குறைந்தும் இருப்பதே தக்க உதாரணம்."

நியாயபதி.—(வாதியைப்பார்த்து) "ஏனம்மா! குற்றவாளி உன்னை முத்தமிட்டதாகச் சொல்லுகிறாயே. சுமார் எவ்வளவு முறை முத்தங் கொடுத்திருப்பான்?"

வாதி.—"சரியாக இருநூற்றிரண்டு முறை முத்தங்கொடுத்தான்."

நியாயபதி.—(ஜூரிகளைப்பார்த்து) இந்தக் கேஸைத் தள்ளிக் குற்றவாளியை விடுதலை செய்துவிட்டோம். ஏனெனில், தனக்கு இஷ்டமில்லாத ஒரு பெண், ஒருவன் தன்னை பலாத்கரித்து முத்தமிட, அவைகளை ஒன்று இரண்டு என்று எண்ணிக்கொண்டிருக்கமாட்டாள்.

நியாயாதிபதி.—"நீ அந்தப் பிரபுவின் படுக்கையறை ஜன்னற்கதவைத் திறந்ததற்காக இங்கு அடைக்கப்பட்டாய் அல்லவா?"

குற்றவாளி:—"ஆமாம் பிரபு."

நியாயாதிபதி.—"ஏன் அப்படித் திறந்தாய்?"

குற்றவாளி.—"சுகாதார நூலை நம்பி இப்படிக்கெட்டுப்போனேன்."

பையன்:—(வழிப்போக்கனைப்பார்த்து) "அய்யா! இந்தக் கதவைத் திறந்து கொடுப்பீர்களா தயவுசெய்து?"

வழிப்போக்கன்:—(ஆகட்டுமென்று அப்படியே செய்து விட்டுப் பையனைப்பார்த்து) "நீ இவ்வளவு பெரியவனாயிருந்தும் இந்த ஸுலபமான காரியத்துக்கு இன்னொருவனை தேடிக்கொண்ட விஷயத்தில் நான் மிகவும் வருந்துகிறேன்."

பையன்:—"அய்யா! இதனைத்திறப்பது ஸுலபமே. ஆனால், நான் திறந்திருப்பேனாகில், உங்கள் கையில் ஒட்டிக்கொண்டமாதிரி தானே என்கையிலும் இந்த வார்னீஷ் ஒட்டிக்கொள்ளும்."

போலிஸ் அதிகாரி:—(திருடனைப் பார்த்து) "உன்னைக் குற்றவாளியாகப் பிடிக்கும்போது நீ என்ன செய்து கொண்டிருந்தாய்?"

குற்றவாளி:—"காத்துக்கொண்டிருந்தேன்."

போ. அ:—"யாருக்காகக் காத்துக்கொண்டிருந்தாய்?"

குற்றவாளி:—"ஒருவருக்குமில்லை. காத்துக்கொண்டிருந்தேன்."

போ. அ:—"எதற்காக?"

குற்றவாளி:—"பணத்துக்காக."

போ. அ.—"யார் பணம் கொண்டு வருபவர்?"

குற்றவாளி:—"யாருக்காக காத்துக்கொண்டிருந்தேனோ அவர்."

போ. அ:—"அவர் யார்?"

குற்றவாளி:—"அவரை எனக்குத் தெரியாது."

போ. அ:—"உனக்கு என்ன உத்யோகம்?"

குற்றவாளி:—"காத்துக்கொண்டிருப்பது தான்."

---

வி. ஜி. ராஜம்.